யாதும் ஊரே யாவரும் கேளிர்

Sangathamil

# சங்கத்தமிழ்

குரல் – 43 | சர்வதேச மின் செய்தித்தாள் | பெப்ரவரி 15 2023




## இனப்பிரச்சினை தொடர்பான எந்தவொரு இறுதித் தீர்வுக்கும் தமிழர்களின் ஆணை வாக்கொடுப்பு மூலம் பெறப்படவேண்டும்!

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள்

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE
SERVICES
Purchasing a Residential Property
Selling a Residential Property
Residential Mortgage Refinancing
Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

Ideal Auto Tech Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
AUDIT
REVIEW ENGAGEMENT
NOTICE TO READER
BUSINESS ADVISORY
CONTROLLERSHIP SERVICES
CORPORATE TAXES
PERSONAL TAXES
FINANCIAL PLANNING
CRA AUDITS
PAYROLL
BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

RAMACHANDRAN LAW
Professional Corporation
Family Law
Real Estate
Civil Litigation
Wills & Estates
Corporate Law
BARRISTER & SOLICITOR
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours) | LSO 70103E
416.902.8225
Vithu@Ramachandran.Law
WWW.RAMACHANDRAN.LAW
908-305 Milner Ave. Toronto ON M1B 3V4

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc., Brokerage
Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathananthan
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

JRS AUTO TECH
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
OPEN FROM 9 AM - 9PM
AC $99.99 +
OIL CHANGE $39.99 +
USED TIRE $49.99 +
BRAKES JOB $249.99 +
Subas: 416-206-9489 Office: 416-628-4399
2655 Lawrence Ave., E, Unit 05, Scarborough ON M1P 2S2
JRSAUTOTECH@HOTMAIL.CA

GRAND OFFER
this Offer Only December 31st to January 31st, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copies
Inside 32 Pages, B&W 20lb
with colour glossy cover
$ 310.00
Large Format Digital Printing
$ 9.99 / Sq. Ft ($ 34.99 / ft.)
Design Only
1000 Business Cards
with out design $ 59.99
One Side - 16pt Card Stock
with out design $ 29.99
One Side,10pt Card Stock
We print all kind of products
Call Me: Silver Print House - 647 712 1266

Annai's PRAGATI SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.
MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

Lashesbyselvi
Individual Eyelash Extensions Classic, Hybrid & Volume
Eyelash Lift & Tint
Eyebrow Lamination & Tint
Selvi 416.303.2785

விளம்பரத்துக்கு அழையுங்கள்: 437.345.4203

Sangathamil
சங்கத்தமிழ்
சர்வதேச மின் செய்தித்தாள்

www.sangathamil.ca

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**வேளாண்மையும் கைத்தொழிலுமே எமது பொருண்மியக் கட்டுமானத்திற்கு அடித்தளமானவை; தன்னிறைவான பொருளாதார வாழ்வுக்கு ஆதாரமானவை.**






# சங்கத்தமிழ்


## தொடர்புகளுக்கு

தொலைபேசி

437 345 4203

மின்னஞ்சல் (Email)

sangathamilcanada@gmail.com

இணையத்தளம் (Website)

www.sangathamil.ca


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# மேஜர் இறைகுமரன் (திவாகர்)




1990ம் ஆண்டு யாழ் நகரை இரும்பரக்கனாக அச்சுறுத்தி கொண்டிருக்கிறது ஒல்லாந்தர் உருவாக்கிய கோட்டை. இதனை சிறீலங்கா படைகள் பலமான தள மாகப் பயன்படுத்தி கொண்டிருக்கிறார்கள். பல நூறு ஆண்டுகளின் பின்னர், பகைவன் கோட்டையொன் றைக் கைப்பற்றுவதற்கான முற்றுகையைத் தமிழர் வீரவரலாறு சார்பாகப் புலிகள் நடாத்திக்கொண் டிருக்கின்றார்கள். ஒரு லட்சம் தீவுப்பகுதி மக்கள் ஏதிலிகளாயினர். பல இலட்சம் தீபகற்ப மக்கள் அல்ல லுறுகின்றனர். இதற்கு நேரடிக் காரணமான படை முகாம் வீழ்த்தப்பட்டேயாக வேண்டும். இம்முகாமிற் குப் முதன்மை வழங்கற் பாதையாக விளங்கும் பண்ணைப் பாலம் தகர்க்கப்படல் வேண்டும். ஐம்பது மீற்றர் முன்னால் பகைவனின் பதுங்கிக் குறிபார்த்துச் சுடும் வீரர்கள் விழித்திருக்கின்றார்கள். அவர்களின் கழுகுப்பார்வை இவர்களின் பகுதியைக் கண்காணித் துக் கொண்டிருக்கின்றது. பகைவன் கண்களில் மண் ணைத்தூவி பண்ணைக் கடற்கரை நோக்கி வெடி மருந்துகளை நகர்த்த வேண்டும். எக்கணமும் உயிர் பறிபோகும் ஆபத்தான இப்பணியைத் திவாகர் செய்து கொண்டிருந்தான். எது நடக்கலாகாது என எதிர்பார்க் கப்பட்டதோ அது நடந்தேவிட்டது. ஆனால் சிறு அதிஸ் டத்துடன் எதிரியின் ரவையொன்று இவனது காலைத் துளைத்துச் சென்றுவிட்டது.

கண்விழித்துப் பார்க்கையில் யாழ். மருத்துவ மனையில் படுத்திருந்தான். காயம் மாறுகையில் அக் காலின் நீளம் ஒரு இஞ்சி கட்டையாகி இருந்தது. கீழ்க்காலின் ஒரு பகுதி தொடுகை உணர்வை இழந் திருந்தது. அக்காலை இழுத்திழுத்தே நடக்கவேண்டி யிருந்தது. தனக்கேற்பட்ட வலுக்குறைவை நடையின் வேகத்தைக் கூட்டுவதன் மூலம் ஈடு செய்ய முற்பட் டான். அம் மருத்துவமனையில் போர்க் காயமுற்ற நூற்றுக்கணக்கான போராளிகள் பண்டுவம் (சிகிச்சை) பெறுகின்றார்கள். அவர்களின் தேவைகளைப் நிறை வும் செய்யும் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவது மிகவும் சிரமமாக இருந்தது. இவனது ஆலோசனைகளும் பண்பான செயற்பாடுகளும் அதனை இலகுவாக்கியது. அப்பொறுப்பை முழுமையாகச் செய்யுமாறு கேட்கப் பட்டான். அதற்கு இவன் கால இடைவேளை கேட்டான். அடிப்படைப் பயிற்சி முடிவடைய முன்னரே தான் காய மடைய நேர்ந்ததையும், அதனைத்தான் முழுமைப் படுத்தினால் தான் தன்னால் முழுமையான போராளி யின் மனநிலையில் செயற்பட முடியும் என்பதையும் தெளிவுபடுத்தினான். இயலாக் காலுடன் கடின பயிற் சிகளை நிறைவு செய்து பணிக்குத் திரும்பினான். காயமடைந்தவர்கள் பலரின் மனச் சமநிலையில் மாற்றமிருந்தது. அவர்களுக்குத் தாயாய், தாதியாய், தலைவனின் பிரதிபலிப்பாய், நண்பனாய் எனப் பலராய்ச் செயற்பட்டான். மருத்துவ நிபுணர்கள், மருத் துவம் கற்பவர்கள், ஏனைய மருத்துவப் பணியாளர்கள் அனைவருடனும் அன்பாகவும் போராளிக்குரிய பிரத் தியேக பண்பை வெளிக்காட்டும் வண்ணமும் உற வாடினான். அனைவர் மனதிலும் ஆழ இடம் பிடித் தான். மனித மனங்களையும் வளங்களையும் முகாமைத்துவம் செய்வதிலும் இவன் ஒரு நடைமுறை நிபுணனாகச் செயற்பட்டான்.

போர்க்காலத்தில் பொருளாதார, மருந்து தடைகளால் மக்கள் இன்னல்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வாழ்க்கைத் தரத்திலும் அக்கறை செலுத்தவேண்டி இருந்தது. தமிழீழ சுகாதார சேவைகள் நிறுவன மயப் படுத்தப்பட்டது. இதன் துணைப்பொறுப்பாளராகப் பணியாற்றப் பணிக்கப்பட்டான். இக்காலகட்டத்தில் தான், வரலாற்றின் மிகப் பெரும் துன்பமாக யாழ்ப் பாண இடப்பெயர்வு நிகழ்ந்தேறியது. யாழ் மருத்துவ மனையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட போராளிகளும் பொதுமக்களும் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தனர். அவர்களைப் பாதுகாப்பாக நகர்த்தவேண்டியிருந்தது. இவ் மனிதாபிமானப் பணியின் பாரத்தின் பெரும்பகுதி இவன் தோள்களில் இறங்கியது. ஒற்றைக்காலில் சுற் றும் பம்பரமாக, இரவு பகல் பாராது இருபத்தினான்கு மணிநேரமும் இவன் சுழன்றது இன்னும் நினைவு களில் உள்ளது.

மக்கள் அனைவரும் வெளியேறிவிட்டனர். இடிவிழுந்த சுடுகாடாக இயல் பிழந்து யாழ்.மண் காட்சியளித்தது. போராளிகளின் கள மருத்துவமனையாக “ஞானம்ஸ்” உல்லாச விடுதிக் கட்டிடம் பயன்பட்டுக்கொண்டிருக் கின்றது. பணியின் களைப்பால் சிறிது கண்ணயர்ந்த திவாகர் திடீரென எழுந்து “எண்பத்தொண்டில் இந்த ஹொட்டல்ல காமினி திசநாயக்கா வந்திருந்த போது தான் ஆமிக்காரங்கள் யாழ்ப்பாணம் நூல் நிலை யத்தை எரித்தவங்கள். அது மாதிரி இனியும் ஏதாவது செய்வாங்கள். அதனால், யாழ். மருத்துவபீட நூலகத் தில் உள்ள நூல்களையாவது பாதுகாக்க வேண்டும்” எனக் கூறினான். இவனது எண்ணம் அங்கிருந்தவர் களுக்கு அதீதமாகப்பட்டது. அண்ணளவாக மருத்துவ பீடத்திற்கு முன்னால் 750M தூரம்வரை பகைவன் வந்துவிட்டான். வாகனங்களைக் கிட்டக்கொண்டு போகும் சத்தம் கேட்டாலே போதும் எறிகணைகளால் பொழிவான். தமிழீழ மருத்துவக் கல்லூரி மாணவர் களைத் துணைக்கழைத்தான். தள்ளி உருட்டிச் செல்லக்கூடிய கட்டில்கள் சிலதைப் பார ஊர்திகளில் ஏற்றினான். புறப்பட்டு விட்டான். மருத்துவபீடப் பின் பக்க திடலுக்கு வெளியில் பாரவூர்திகளை நிறுத்திவிட்டு, எல்லோரும் உள்ளே சென்றார்கள். கையினால் மின் சூழ்களின் வெளிச்சம் பொத்தி மறைக்கப்பட, மாடியில் இருந்து மனிதச் சங்கிலியாக எல்லோரும் நின்று கைமாறிக் கைமாறிப் புத்தகங்களை உருளும் கட்டில் களில் ஏற்றி, தள்ளி வந்து பார ஊர்திகளில் ஏற்றி, சாவகச்சேரிப் பகுதிக்குப் பாதுகாப்பாக அனுப்பி வைத் தார்கள். யாழ்.நகர் பறிபோகும் கவலையில் அனை வரும் துவண்டிருக்கையில் அவன் அறிவு பூர்வமாகச் சிந்தித்தது மற்றவர்களை வியப்பில் ஆழ்த்தியது.

இடம்பெயரும் மக்களுக்கு மனிதாபிமான உதவி களைச் செய்யுமாறு ஐ.நா. தலைமைச் செயலர் அறிக்கை விட்டிருந்தார். எவ்வுதவிகளும் வந்துசேர எவ்வழிகளும் இல்லாத நிலை. மாரி மழையில் வாந்தி பேதியோ, வயிற்றோட்டமோ வந்து பல்லாயிரம் மக்கள் மடிய நேரலாம். எனும் மனித அவலம் எதிர்பார்க்கப் பட்டது. திரவ ஊடகமோ, நுண்ணுயிர் கொல்லி மருந் துகளோ ஒரு மருத்துவ நெருக்கடியைச் சமாளிக்கக் கூடியவாறு கையிருப்பில்லை. மருத்துவ சேவைக்கான நிர்வாகக் கட்டமைப்போ சீர்குலைந்துள்ளது. அவ் வேளை திவாகர் பின்வருமாறு கூறினான். மக்கள் கல்வியறிவுள்ளவர்கள். அடிப்படைச் சுகாதார நடை முறைகளைக் கடைப்பிடிப்பவர்கள். திடீரென ஏற்பட்ட இவ்நெருக்கடியால் அவர்கள் கவனம் சிதறும். அதனால் மீண்டும் மீண்டும் சுகாதார விழிப்புணர்வை ஊட்டுவதனூடாகப் பிரச்சினையை வரவிடாமல் தடுக்கலாம். இவனது இக்கருத்து விரைவாகச்

**- தூயவன் -**

# அசாத்திய ஆற்றல்

செயலுருப் பெற்றதால் எதிர்பார்த்த அவலம் வராமல் தடுக்கப்பட்டது.

யாழ் மருத்துவமனை பறிபோனதால் எம் போரிடும் வலு குறைந்துவிட்டது. இதன் தொடராக எதிரி தென் மராட்சி வடமராட்சி பிரதேசங்களைக் கைப்பற்ற முயற்சிப்பான். ஆயிரக்கணக்கில் போராளிகளும் மக்களும் காயமடைவார்கள். இச் சவாலை முகம் கொடுப்பதற்கான வளப்பிரதியீட்டைக் குறுகிய காலத்தில் ஏற்படுத்த வேண்டும். அதற்குத் துறைசார் மருத்துவக் குழுக்களைக் குறிப்பாகச் அறுவைப் பண்டுவத்திற்கான (அறுவைச்சிகிச்சைக்கான) மருத்துவ மாதுக்கள் ஆய்வு கூடத் தொழில்நுட்பவியலாளர்கள் போன்ற ஆளனி வசதியை ஏற்படுத்த வேண்டும். வழமை போல் இவனது லாவகமான செயற்பாட்டால் கைமேல் பலன் கிடைத்தது. இதனை முல்லைச்சமரில் காயமடைந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட போராளிகளைக் காப்பாற்றியதன் மூலம் உணர முடிந்தது. நெருக்கடியான நேரங்களில் பொறுப்புக்களை நுணுக்கமாகக் கையாண்டதால் வன்னி மண் மீண்டும் ஒரு பாரிய பொறுப்பினை இவனிடம் ஒப்படைத்தது.

ஆம் இங்கு இவன் களமருத்துவப் பொறுப்பாளனாகச் செயற்படப் பணிக்கப்பட்டான். அகண்ட முன் அனுபவமற்ற பகுதி, ஆங்காங்கே அடிக்கடி அகோரமாக விரியும் சமர்க் களங்கள், ஆங்கிலேயர் காலத்திற்குப் பின் திருத்தப்படாத வீதிகள். எரிபொருள், மருந்துக்கும் தட்டுப்பாடான நிலை. ஒவ்வொருவரையும் பல தடவை சாவின் விளிம் புக்குக் கொண்டுபோய்க் கொண்டுவரும் மலேரியா, காயமடைந்தவர்களை வேகமாக நகர்த்தவோ, வைத்துப்பராமரிக்கவோ போதிய வளங்கள் இல்லாத நிலை. தலையிடி முதல் உடல் துண்டுபடும் காயங்கள் வரை அனைத்துமே சிரமத்தையே பரிசளிக்கும். இவ்வளவிற்கும் இவன் செயற்பட்டான். “கடினமாக உழைத்தோ அல்லது மிதமாக உழைத்தோ பாரிய வெற்றிகளைப் பெறலாம்” இவன் அடிக்கடி கூறும் கருத்தின் முற்பகுதியைத் தன் வாழ்வின் தத்துவ மாக்கியிருந்தான்.

எதிரி ஜெயசிக்குறு சமர்முனையைத் திறந்து விட்டான். வன்னியை இரண்டறுத்து, புலிகள் பலத்தைச் சிதறடித்து, தமிழர் தேசியத்தைச் செல்லாத விடயமாக்கும் முயற்சியில் பகைவன் மூர்க்கமாகவே ஈடுபட்டான். முதலைக்கு தண்ணியிலும் புலிகளுக்கு வன்னியிலும் பலம் என்பதை அவன் அனுபவத்தில் புரிய விரும்பிய காலம். பகை படைத் தொடரணியைத் தாண்டிக்குளத்தில் ஊடறுத்துத் தாக்கும் திட்டம் தயாரானது. கைவிடப்பட்ட வயல்களினூடும், காடுகளினூடும் புலிகள் நகரத் தொடங்கிவிட்டனர். சுமார் 30 கிலோ மீற்றர் இயலாத காலுடன் நடந்தான். மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் ஒரு பிரிவுப் பொறுப்பாளன் ஒரு குழுவுடன் நகர்வது பொருத்தமற்றதாகத் தென்படலாம். எனினும் சாக்களங்களிலுள் நுழைந்து வெளிவருவது, தொடரும் சமற்களங்களில் சந்திக்கும் சவால்களுக்கு முகம் கொடுப்பதை இலகுவாக்கும் என்பதைத் திடமாக நம்பினான். களம் திறக்கும் இடமெங்கும் திவாகர் நிற்பான் என்பது வெளிப்படையானது. சமர்கள் முடிந்து தளம் திரும்பும் அவன் சில நாள் இடைவெளியில் தொய்ந்திருக்கும் நிர்வாக சேவைகளை வேகமாக ஒழுங்குபடுத்துவான். களமுனைத் தளபதிகளுடன் கலந்தாலோசனை செய்வான். முதன்மை, துணையான கள மருத்துவ நிலைகளை எங்கெங்கு நிறுவுவதென முடிவெடுப்பான். வரைபடம், குறிப்புப் புத்தகமும் கையுமாக வரும் இவன் அவ்வவ் இடங்களில் மண்வெட்டியுடன் நின்று பதுங்குகுழிகளை அமைப்பான். ஒவ்வொரு மருத்துவ நிலையையும் மரபுசார் சிறு முகாமாக (மினிமுகாம்) மாற்றுவான். மருத்துவ நிலைகள் சுற்றிவளைக்கப்பட்டால் தாக்குப் பிடிக்கவும், தேவையேற்பட்டால் முற்றுகையை உடைக்கவும் தேவையான அனைத்தையும் படைய அறிவியல் பார்வையோடு செயற்படுத்துவான். புளியங்குளத்திலும், புத்தூரிலும் அவன் அமைத்த முகாம்கள் இயல்பான பார்வையில் களமருத்துவ முகாம்களாகவும், அலசும் பார்வையில் படைய பயன்பாட்டிற்குரிய முகாம்களாகவும் தென்பட்டன. இவ்விரு இடங்களும் முற்றுகைக்கு உள்ளாகித் தாக்குப்பிடித்து, பின்

**புளியங்குளத்திலும், புதூரிலும் அவன் அமைத்த முகாம்கள் சாதாரண பார்வையில் களமருத்துவ முகாம்களாகவும், அலசும் பார்வையில் இராணுவ பயன்பாட்டிற்குரிய முகாம்களாகவும் தென்பட்டன. இவ்விரு இடங்களும் முற்றுகைக்கு உள்ளாகித் தாக்குப்பிடித்து, பின் முற்றுகை உடைத்த நிகழ்வுகள் தமிழீழப் போர் மருந்துவ வரலாற்றில் சாதனைப் பதிவுகளாயின.**

முற்றுகை உடைத்த நிகழ்வுகள் தமிழீழப் போர் மருத்துவ வரலாற்றில் சாதனைப் பதிவுகளாயின.



ஜெயசிக்குறு படை நடவடிக்கை அர்த்தமற்றதாக்கப்பட வேண்டும். அதற்கு சாத்தியமானவைகள் அனைத்தும் செய்யப்பட வேண்டும். அவற்றில் ஒன்றாக கிளிநொச்சி மீண்டும் கைப்பற்றப்படல் வேண்டும். இது நடைபெறுமாயின் ஜெயசிக்குறு படை ரெயில் தடம் புரளும் அல்லது தடம் மாறும். அதற்கான சமர் 10.02.1997 அன்று தொடங்க திட்டமிடப்பட்டது. இச் சமர்க்களத்தின் சுற்றயல் பகுதிகளில் களமருத்துவ முகாம்கள் அமைக்கப்பட்டு. சமர் தொடங்கிவிட்டு. களமருத்துவ முகாமொன்றில் திவாகர் பணியாற்றி கொண்டிருக்கின்றான். ஆங்காங்கே வான் தாக்குதல்களும் நடாத்தப்படுகின்றது. இரவு நடைபெற்ற சண்டையின் பிரதிபலிப்பாய் காயக்காரரை ஏற்றிப் பல ஊர்திகள் அவ் மருத்துவ நிலைக்கு வந்துபோகின்றன. காயக்காரர்களுக்கு அவசர உயிர்காப்புச் சிகிச்சைகளும், ஏனையவும் செய்யப்பட்டு விரைவாகப் பின்தளம் அனுப் பப்படுகின்றார்கள். வானில் ஆளில்லா வேவு வானூர்தி ரீங்காரமிடுவது கேட்கின்றது. ஊர்தி ஓட்டங்களை வைத்து இவர்களுடைய முகாம் அடையாளம் காணப்படலாம் எனும் அச்சம் தலைதூக்குகின்றது. எனினும் அதனைப் பொருட்படுத்தாமல் அவரவர் தம் தம் கடமைகளில் மூழ்கியுள்ளனர். திடீரென செவிப்பறை வெடிக்கும், நிலம் அதிரும் வகையில் இரைச்சல் சத்தம் கேட்கிறது. நிலைமையைக் கணித்த திவாகர் “எல்லோரும் பங்கருக்க பாயுங்கள்” கத்தி முடிப்பதற்குள் படீர் படீர் என கிபிர்க் குண்டுகள் அவ்விடங்களில் விழுந்து வெடிக் கின்றது. வெடி மருந்துப் புகையும், தூசி மண்டலமும் விலக சில நிமிடங்கள் எடுத்தது. கண்டகாட்சி அதிர்ச் சியைக் கொடுத்தது. களமருத்துவ நிலை இருந்த இடம் கற்குவியலாகக் காட்சியளித்தது. பச்சை மரங்களும், மருந்துப் பொருட்களும், தசைத்துண்டங்களும் ஆங் காங்கே சிதறிக்கிடந்தன. ஆம் களமருத்துவப் பொறுப் பாளன் திவாகர் மற்றும் இரு படைய மருத்துவர்கள் உட்பட நாற்பத்தி மூன்று பேர் நேசித்த மண்ணில், போர்ப் பணியாற்றிய இடத்தில் விதையாகிப் போனார்கள்.

மாசி - பங்குனி, 2006 - விடுதலைப்புலிகள்



“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது.“

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*




# சிறீலங்கா அரசாங்கத்தின் புதிய வரி அதிகரிப்பிற்கு எதிராக யாழ். பல்கலைக்கழகத்தில் கவனயீர்ப்பு!

பெப்ரவரி 01, 2023

சிறீலங்கா அரசாங்கத்தின் புதிய வரி அதிகரிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் இன்று புதன் கிழமை(01.02.2023) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் 'அநீதியான வரிவிதிப்பை நிறுத்து', 'பணத்தை எடுத்தவரிடம் கேட்பதே நீதி. எங்களிடம் கேட்பது அநீதி', அரசின் ஊழலால் விழுந்தவர்களை வரி ஏறி மிதிக்கிறது உள்ளிட்ட தமிழ், ஆங்கில மொழியிலான பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.




# யாழ். பல்கலைக்கழக சுதந்திரநாள் எதிர்ப்பு போராட்டத்திற்கு தமிழ் சிவில் சமூக அமைப்பு ஆதரவு!

பெப்ரவரி 01, 2023

சிறீலங்காவின் சுதந்திர தினமான பெப்ரவரி-04 ஆம் திகதியைக் கரிநாளாகப் பிரகடனப்படுத்தும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரின் முடிவுக்கு நாம் எமது ஆதரவைத் தெரிவிக்கின்றோம் எனத் தமிழ் சிவில் சமூக அமையம் மற்றும் அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம் ஆகியன இணைந்து வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உண்மையில் இத் தீவின் வடக்கு கிழக்கை தாயகமாகக் கொண்ட தமிழ்த் தேசத்தை ஆக்கிரமித்திருந்த ஆங்கிலேயர் தாம் கொண்டிருந்த ஆக்கிரமிப்பு மேலாதிக்கத்தை இத்தீவின் இன்னொரு தேசமாகிய பௌத்த சிங்கள தேசத்திடம் தாரை வார்த்த கரி நாளாகவே பெப்ரவரி நாலாம் திகதியை நாம் கருதுகின்றோம்.

1931 ஆம் ஆண்டில் ஆங்கலேயரால் பொறுப்பாட்சி வழங்கப்பட்ட காலத்தில் இருந்து தொடங்கிய சிங்கள பௌத்த தேசத்தின் தமிழினத்தின் மேலான இன அழிப்பு நடவடிக்கைகள் 1948 பெப்ரவரி நாலாம் தேதி முதல் முழு அதிகாரங்களுடன் தீவிரமடையத் தொடங்கியது.

இன்றுவரை இரண்டு லட்சத்துக்கும் மேலான தமிழ் மக்களைக் கொன்றும், பத்து இலட்சத்திற்கும் அதிகமானவர்களைப் புலம்பெயர வைத்தும், பல்லாயிரம் தமிழர்களைக் காணாமல் போகச் செய்தும், பல நூறு தமிழர்களை பல்லாண்டுகளாக சிறைகளில் அடைத்தும், தமிழர்களின் தாயகத்தில் பல ஆயிரம் சதுர கிலோ மீற்றர் நிலங்களை குடியேற்றம் உட்படப் பல வழிகளிலும் அபகரித்தும், தமிழர்களின் பல ஆயிரம் கோடி செல்வங்களை அழித்தும் மட்டுமல்லாது தனிச் சிங்களச் சட்டம், கல்வியில் தரப்படுத்தல், வேலைவாய்ப்புக்களில் பாரபட்சம், அபிவிருத்தியில் புறக்கணிப்பு என ஒரு நாடு என தாங்கள் கூறிக் கொள்ளும் இத் தீவில் தமிழர்களை தொடர்ச்சியாக ஓரம் கட்டி வந்துள்ளது சிங்கள பௌத்த தேசம். சிங்கள பௌத்த தேசம் இன்றும் அதே பாதையில் தான் தொடர்ந்து கொண்டு இருக்கின்றது.

ஆங்கிலேயர் வெளியேறிய பின்னான கடந்த 75 ஆண்டுகள் முழுவதும் தமிழின அழிப்பில் தனது பெருமளவு கவனத்தையும், பெரும்பாலான வளங்களையும் குவித்ததன் மூலம் எம்மை அழித்துப் பலவீனமாக்கியது மட்டுமல்லாது இன்று தானும் பொருளாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு என்பவற்றில் பேரழிவைச் சந்தித்து நிற்கின்றது சிறீலங்கா.

ஆனாலும், இந்த நிலையிலும் கூட இன்றும் தமிழின அழிப்பிற்காகத் தான் தேர்ந்த எந்தவொரு செயற்பாடுகளிலும் சிறீலங்கா கிஞ்சித்தேனும் தளர்வை ஏற்படுத்தாமல் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றது.

தொடர்ந்து வந்த சிறீலங்கா அரசுகள் காலம் காலமாகத் தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்போம் எனக் கூறிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட வண்ணம் எம்மை ஏமாற்றியது மட்டுமல்லாது அக் காலங்களை தமிழர்களின் அடையாளங்களை அழிக்கவும் இன அழிப்புக்கு எதிரான எமது போராட்டங்களை வலுவிழக்கச் செய்வதற்கும் பயன்படுத்துவதைத் தனது தந்திரோபாயமாகவும் கொண்டுள்ளது.




இன்று சிறீலங்கா அரசு மீண்டும் ஒருதடவை பேச்சுவார்த்தை என்று இன அழிப்பைத் தொடர்வதற்கான கால அவகாசத்தைப் பெறுவதற்கும், ஈற்றில் எம்மை ஏமாற்றுவதற்கும் முயன்று நிற்கின்றது.இந் நிலையில் சிறீலங்காவின சுதந்திர தினம் உண்மையில் தமிழர்களின கரி நாள் என்பதே தமிழ்த் தேசத்தின் யதார்த்தமாகும்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முன்னெடுத்துள்ள இப் போராட்டத்திற்கு எமது பூரண ஆதரவைத் தெரிவித்து நிற்கின்றோம் என அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். பல்கலைக்கழகத்தில் கறுப்புக் கொடி பெப். 04 ல் ஏற்றப்பட்டுள்ளது!

பெப்ரவரி 04, 2023

சுதந்திர தினத்தை கரி நாளாக நினைவு கூரும் முகமாக யாழ்ப்பாண பல்கலைக்கழக தேசிய கொடியேற்றும் கம்பத்தில் கறுப்பு கொடி ஏற்றப்பட்டுள்ளது.

தமிழ் மக்களுக்கு நாட்டில் சுதந்திரம் கிடைக்காமையால் இலங்கையின் 75 வது சுதந்திர தினத்தை தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கரி நாளாக கொண்டாடுமாறு அரசியல் கட்சிகள் பொது அமைப்புகள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் யாழ். பல்கலைக் கழக தேசிய கொடி ஏற்றும் கம்பத்தில் கறுப்பு கொடி ஏற்றப்பட்டுள்ளது.



# ஒரு புறம் காணி விடுவிப்பு மறு புறம் நிலம் ஆக்கிரமிப்பு!

பெப்ரவரி 03, 2023

யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து சுமார் 108 ஏக்கர் காணி 75வது சிங்கள சுதந்திர தினத்தை முன்னிட்டு 35 வருட ஆக்கிரமிப்பின் பின்னராக இன்றைய தினம் வெள்ளிக்கிழமை விடுவிக் கப்பட்டுள்ளது.

பலாலி - அந்தனிபுரத்தில் நடைபெற்ற நிகழ்வில் காணி விடுவிப்புக்கான உத்தரவு பத்திரத்தினை யாழ்.மாவட்ட ஆக்கிரமிப்பு இராணுவ தளபதியான மேஜர் ஜெனரல் சுவர்ண போதோட்ட, யாழ்.மாவட்டச் செயலர் அம்பல வாணர் சிவபாலசுந்தரனிடம் கையளித்துள்ளார்.

இதனிடையே வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான அக்கரை சுற்றுலாக் கடற்கரையில் சிறீலங்கா கடற்படையினர் கைபற்ற இன்று மேற்கொண்ட முயற் சிகள் பற்றி தகவல்கள் வெளிவந்துள்ளது.

சிறீலங்கா கடற்படையினர் காணியை அடையாளப் படுத்துதல் மற்றும் அளவீடு செய்யும் முயற்சியில் ஈடுபட்டமை தொடர்பில் தகவல் கிடைத்த நிலையில் அவ் விடத்திற்கு தவிசாளர் தியாகராஜா நிரோஸ் செல்வதற் கிடையில் சிறீலங்கா கடற்படையினர் அவ்விடத்தில் இருந்து விலகிச் சென்றுள்ளனர்.

தொண்டமனாறு அக்கரை பகுதியில் சிங்கள கடற் படையினருக்கு பிரதேச சபையின் காணியை தான் வழங் கியுள்ளதாக பிரதேச செயலாளர் அறிவித்திருந்தார். அவ் வாறாக அறிவிப்புக் கிடைத்தவுடன் அவ்வாறாக காணியை வழங்க முடியாது என நான் மறுத்திருந்தேன். இந் நிலையில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை இரகசியமாக பிரதேச சபைக்குச் சொந்தமான சுற்றுலா வலயத்திற்குள் நுழைந்த சிங்கள கடற்படையினர் அளவீடுகளை மேற்கொண்டு புகைப்படங்களையும் எடுத்துள்ளதாக தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தெரிவித் துள்ளார்.



அடிப்படையில் அந்நிலம் உள்ளூராட்சி மன்றத்தின் ஆட் சியில் காணப்படும் நிலம். பிரதேச செயலாளர் காணிகளை சிங்கள இராணுவத்திற்'கு வழங்குவதற்கு முடிவுகளை எடுக்க முடியாது. மேலும் மில்லியன் கணக்கில் எம்மால் முதலீடு செய்யப்பட்டுள்ள சுற்றுலா வலயம் ஒன்றை சிறீலங்கா இராணுவமயப்படுத்த முடியாது. எமது மக் களின் காணிகளை விடுப்பதாக அரசாங்கம் கூறுகின் றபோதும் காணிகளை அபகரிப்பதிலும் இராணுவ மயமாக்கத்தினை முன்னொண்டு செல்வதிலும் அரசாங்கம் தீரம் காட்டியே வருகின்றது என வலி கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# யாழ். மண்ணில் அனைத்து வர்த்தக நிலையங்களும் பூரண கதவடைப்பு!

பெப்ரவரி 04, 2023

யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் சிறீலங் காவின் 75 வது தேசிய சுதந்திர தின நிகழ்வை தமிழ் மக்கள் கரி நாளாக அனுஷ்டிக்க அழைப்பு விடுக்கப் பட்டுள்ளதோடு பணிப்புறக்கணிப்பு, கடையடைப்புக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் யாழ். நகரில் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு பூரண பணிப்புறக்கணிப்பு கடைப்பிடிக்கப்படுகின்றது. யாழில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்து.









# யாழ். பல்கலைகழக முன்றலில் இருந்து சுதந்திர நாள் எதிர்ப்புப் பேரணி!

பெப்ரவரி 04, 2023

வடக்கு கிழக்கு தழுவிய பூரண பணிப்புறக்கணிப்புடன் இன்று காலை 9 மணியளவில் யாழ். பல்கலைக்கழக முன்றலில் இருந்து மட்டக்களப்பு நோக்கிய சுதந்திர தின எதிர்ப்பு கறுப்பு பேரணி ஆரம்பமாகியுள்ளது.

இந்த பேரணிக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக காலை வர்த்தக நிலையங்கள், போக்குவரத்து சேவையி லீடுபடுவோர், திரையரங்குகள் உட்பட்ட அனைத்து தரப்பினருக்கும் பணிப்புறக்கணிப்பு குறித்த அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ள நிலையில் அனைத்து தரப்புக்களும் ஆதரவு நல்கியுள்ள நிலையில் இன்றையதினம் அவர்கள் போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஏற்பாடு செய்த இந்த எதிர்ப்பு பேரணியில் பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் அமைப்புக்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் பேரெழுச்சியாக போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

போராட்டத்தின் ஆரம்பத்தில் காவல்துறையினர் தடுப்பதற்கு முற்பட்டனர். ஆனால் போராட்டக்காரர்கள் தடைகளை உடைத்தெறிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். பதாதைகளை ஏந்தியவாறு போராட்டம் ஆரம்பமானது.

இந்த போராட்ட பேரணியானது எதிர்வரும் 7ம் திகதி மட்டக்களப்பு மண்ணில் சிறப்பாக நிறைவடையவுள்ளது.







# மன்னாரில் இடம்பெற்ற கரிநாள் போராட்டம்!

பெப்ரவரி 04, 2023

இலங்கையின் 75 ஆவது சுகந்திர தின கொண்டாட்டங்கள் நாடளாவிய ரீதியில் இடம் பெற்ற வருகின்ற நிலையில் இன்றையதினம் சனிக்கிழமை (04) மன்னார் மாவட்டத்தில் சுகந்திர தினத்திற்கு எதிரான கரிநாள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ் சிவகரன் தலைமை சுகந்திர தின கொண்டாட்டம் இடம் பெற்ற மாவட்ட செயலகத்திற்கு முன்பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறித்த போராட்டத்தில் அருட்தந்தையர்கள், இளைஞர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள்,தமிழ் உணர்வாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கறுப்பு நிறக்கொடிகளை ஏந்தியவாறு கைகளை சங்கிலியாள் கட்டி, வாய் மற்றும் மூக்குகளை கறுப்பு துணிகளால் மூடிய படி பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளுடன் சுகந்திர தினத்திற்கு எதிரான போரட்டத்தில் ஈடுபட்டனர்

குறிப்பாக 75 ஆண்டாகியும் எமது அடிப்படை உரிமை நசுக்கப்படுகின்றது,சிங்களத்தின் சுகந்திர நாள் தமிழினத்தின் கரிநாள், பௌத்த தேசிய வாதமும் சிங்கள இனவாதமுமே எம்மை அடிமைப்படுத்துகின்றன என எழுதப்பட்ட பல்வேறு பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர் போராட்டத்தின் இறுதியில் கைகளில் பதாதைகளையும் கறுப்பு கொடிகளையும் ஏந்தியவாறு போராட்டகாரர்கள் மன்னார் பேரூந்து நிலைய வளாகம் முழுவதும் ஊர்வலமாக சென்றமை குறிப்பிடதக்கது.





# திருகோணமலையில் நடைபெற்ற கரிநாள் போராட்டம்!

பெப்ரவரி 04, 2023

சுதந்திர தினம் எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலையில் கரிநாள் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. நெல்சன் படமாளிகை முன்னால் காலை 10 மணியளவில் தமிழர் பேரவை மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் இணைந்து இப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.






# மட்டு மண்ணில் கரிநாள் போராட்டம் முன்னெடுப்பு!

பெப்ரவரி 04, 2023

★ வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்.

★ ஒற்றையாட்சிக்குட்பட்ட 13 ஆம் திருத்தத்தையும் மாகாண சபையையும் நிராகரிப்போம்.

★ ரணில் - மைத்திரி அரசும் தமிழ்த் தேசியக் கூட டமைப்பும் இணைந்து தயாரித்த புதிய ஏக்கிய இராச்சிய அரசியலமைப்புக்கான இடைக்கால வரைபை நிராகரிக் கின்றோம்.

★ இனப்பிச்சினைக்குத் தீர்வாக தமிமிழர் தேசமும் அதன் இறைமையும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஸ்டி அரசியல் யாப்பு வேண்டும்.

★அனைத்து அரசியல் கைதிகளும் நிபந்தனையின்றி விடு விக்கப்படல் வேண்டும்.

★ கொடிய பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படல் வேண்டும்.

★ சிங்கள குடியேற்றங்களையும் பௌத்த மயமாக் கலையும் நிறுத்து.

★ வலிந்து காணாமல் ஆக்கப்படவர்களை கண்டறிய சர்வதேச விசாரணை வேண்டும்.

★ இனப்படுகொலைக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டும்.

போன்ற கோரிக்கைகளை முன்வைத்து சிறீலங்கா சுதந்திரதினமற்று தமிழ்த் தேசிய முன்னணியினர் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.









# வடக்கு, கிழக்கு பேரணிக்கு ஆதரவாக வவுனியாவில் ஊர்வலம்!

பெப்ரவரி 05, 2023

தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைகள், ஆக்கிரமிப்புக் களுக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கில் இருந்து கிழக்கு வரையான பேரணிக்கு ஆதரவு தெரிவித்து, வவுனியா வில் இன்று ஊர்வலமொன்று இடம்பெற்றது.

யாழ்ப்பாண பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், யாழ் பல்கலைகழக முன்றலிலிருந்து நேற்று ஆரம்பமாகிய பேரணி, இரணைமடுவில் இருந்து இன்று முல்லைத்தீவை நோக்கி பயணிக்கின்றது. தமிழர்களின் அடிப்படை உரிமைகளான தாயகம், தேசியம், சுய நிர்ணயம் என்பவற்றை வென்றெடுக்கும் நோக்கில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், சமூக அமைப்புகள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஒன்றிணைந்து இந்த பேரணியை ஆரம்பித்துள்ளனர்.

இந்தநிலையில், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தி யாலயத்தில் இருந்து, புதிய பேருந்து நிலையம் வரை ஊர்வலம் நடத்தியவர்கள், அங்கிருந்து பேருந்தில் வடக்கு கிழக்கு பேரணிக்கு சென்றனர். முன்னாள் வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், காணாமல் ஆக் கப்பட்டோரின் உற வினர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.



# முல்லைத்தீவில் தமிழினத்தின் கரிநாள் போராட்டம்!

பெப்ரவரி 04, 2023

சுதந்திர தின நிகழ்வுகள் இன்று நாடளாவிய ரீதியில் இடம் பெற்று வருகின்ற நிலைமையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ் மக்கள் சுதந்திர தினத்தை கறுப்பு நாளாக முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல்வேறு பகுதிகளிலும் எதிர்ப்பு போராட்டங்கள் இடம் பெற்று வருவதோடு வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு கறுப்பு கொடிகள் தொங்க விடப்பட்டு கறுப்பு தினமாக முன்னெடுத்து வருகின்றது.

சுதந்திர தினத்தை கறுப்பு நாளாக கடைப்பிடிக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இன்று காலை 11 மணியளவில் முல்லைத்தீவு சந்தைக்கு அருகாமையில் இருந்து ஆரம்பமான கவனயீர்ப்பு பேரணி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நிறை வடைந்தது.

குறித்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி யின் சடடத்தரணி காண்டீபன் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர்கள் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கட்சி முக்கியஸ்தர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.










# மாணவர்கள் மீது போதையில் புதுக்குடியிருப்பு பொலிஸார் தாக்குதல்!

பெப்ரவரி 05, 2023

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேவிபுரம் பகுதியில் பாடசாலை மாணவர்கள் இருவர் மீது மதுபோதையில் வந்த மூன்று பொலிசார் தாக்குதல் நடத்தியதாகவும் இது தொடர்பாக முல் லைத்தீவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் முறைப்பாடு செய்தும் இதுவரை நடவடிக்கைகள் எடுக் கப்படவில்லை என்றும் இதற்கு நீதியை பெற்றுத் தருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேவிபுரம் பகுதியில் நேற்று முன்தினம் (02) இரவு நண்பர் ஒருவரின் பிறந்த தின கொண் டாட்டத்தை நிறைவு செய்து சுமார் 300 மீற்றருக்குள் இருந்த தமது வீட்டுக்கு பதினைந்து வயதுடைய மாணவர்கள் இருவர் சென்றுள்ளனர்.

இதன்போது தேவிபுரம் ஆ பகுதியில் இருந்து முச்சக்கர வண்டியில் மதுபோதையில் வருகை தந்த புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தின் மூன்று பொலிஸ் அதிகாரிகள் மாணவர்களை மறித்து அவர்களிடம் இருந்த தொலை பேசிகளை பறித்து விட்டு இருவரும் போதைப் பொருள்கள் பாவித்துவிட்டு வருகிறீர்களா என கேட்டு இருவர் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளதாக மாணவர்கள் தெரிவிக் கின்றனர்.

பொலிசார் தாக்குதல் மேற்கொண்ட போது மாணவர்கள் கத்திய சத்தம் கேட்டு பெற்றோர் வந்தபோது பொலிசார் குறித்த இடத்தை விட்டு தப்பித்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கின் றனர்.



இந்நிலையில் மாணவர்களை அழைத்துக் கொண்டு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம் சென்ற பெற்றோர் அங்கு அவர்களுக்கு நீதி கிடைக்காத நிலையில் மாணவர் களை புதுக்குடியிருப்பு வைத்தியசாலை யில் அனுமதித் துள்ளனர்.

அதனை தொடர்ந்து மாணவர்கள் இருவரும் புதுக்குடி யிருப்பு வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக் காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளனர்.

இந்நிலையில் பெற்றோரால் முல்லைத்தீவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் சென்று முறைப் பாடு பதிவு செய்துள்ளனர்.

இருப்பினும் இதுவரை நீதியான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளவில்லை எனவும் மாறாக பொலிசாரின் அழுத்தங்களால் வைத்தியசாலையில் இருந்து ஒரு மாணவர் வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் மற்றைய மாணவருக்கு எலும்பில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இன்னும் சிகிச்சையில் உள்ளதாகவும் தமக்கு உரிய தீர்வை பெற்றுத்தருமாறு கோரி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு பெற்றோரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது

# ஓங்கி ஒலித்த ஈழத்தமிழர்களின விடுதலைக் குரல்!

பெப்ரவரி 07, 2023

ஈழத்தமிழர்கள் மரபுவழித்தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமைக்கு உரித்துடைய ஒரு தேசிய இனம் என்பதன் அடிப்படையிலும் வட்டுக்கோட்டைத்தீர்மானம், திம்புக் கோட்பாடு, பொங்குதமிழ் பிரகடனம் ஆகியவற்றின் நீட்சியாக புதிய பிரகடனமாக இன்று மட்டக்களப்பு பிரகடனமும் அமைந்துள்ளது.

தமிழ் மக்களின் அபிலாசைகள் ஏற்கனவே கூட்டாகப் பல முறை வெளிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், ஈழத்தமிழரின் இனப்பிரச்சனைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தர அரசியல் தீர்வு இதுவரை எட்டப்படவில்லையென்பதால் அந்த அடைவை எட்டுவதற்காக மீண்டும் ஒருதடவை பிரகடனம் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இன்று பெப்ரவரி 7 ம் திகதி தமிழ் மாணவர்களும், மக்கள் சமூக அமைப்புக்களும், தமிழ் மக்களும் ஒன்றிணைந்து ஈழத் தமிழராகிய நாம் மரபுவழித் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமைக்கு உரித்துடைய ஒரு தேசிய இனம் என்பதை மீண்டும் உலகுக்குப் பிரகடனப்படுத்துகின்றோமென மாணவ தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

கடந்த 4ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினம், தமிழர்களுக்கு கரிநாள் என்ற தொனிப்பொருளிலும், தமிழர்களுக்கான தீர்வு விடயங்களை முன்னிறுத்தியும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல சிவில் அமைப்புகள் இணைந்து வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பேரணியொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

வடக்கிலிருந்து கிழக்கை நோக்கி இடம்பெற்ற மாபெரும் சுதந்திர தின எதிர்ப்பு பேரணியின் இறுதி நாள் செவ்வாய் கிழமை பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் சங்கமித்திருந்தனர்.

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் பேரணி இறுதி நாள் நிகழ்வுக்கு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்ட மக்கள் மிகவும் அமோக ஆதரவு வழங்கியிருந்தனர்..

பேரணியில் கட்சி வேறுபாடுகள் மத வேறுபாடுகளுக்கு அப்பால் கிறிஸ்தவ இந்து மத தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பல பிரதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

பல்கலைக் கழகங்களின் மாணவர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், பிரதேச சபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், காணாமலாக்கப்பட்ட வர்களின் உறவினர்கள், என பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்த நிலையில் தமிழர்களது நிலைப்பாட்டை வலியுறுத்தும் பிரகடனம் வெளியிடப்பட்டிருந்தது.

# சட்டவிரோதமான பேரணியில் கலந்து கொண்டதாக வேலன் சுவாமிக்கு அழைப்பாணை!

பெப்ரவரி 08, 2023

"வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி " பேரணியில் கலந்து கொண்டமை , சட்டவிரோதமான பேரணியில் கலந்து கொண்டவர்கள் என குற்றம் சாட்டி வேலன் சுவாமிகளுக்கு யாழ்ப்பாண பொலிஸார் அழைப்பாணை வழங்கியுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை சுதந்திர தினத்தன்று, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்து கிழக்கு நோக்கிய பேரணி ஆரம்பமானது.

குறித்த பேரணியில் கலந்து கொண்டமை சட்டவிரோதமானது என குறிப்பிட்டு இன்றைய தினம் புதன்கிழமை சிவகுரு ஆதீனத்தில் வைத்து வேலன் சுவாமிகளிடம் சிவில் உடையில் வந்தவர்கள் தம்மை பொலிஸார் என அடையாளப்படுத்தி அழைப்பாணையை வழங்கியுள்ளார்.

அதேவேளை குறித்த அழைப்பாணையில், சிவஞானம் சிறிதரன் உள்ளிட்ட 7 பேருக்கு எதிராக , சட்டவிரோத பேரணியில் கலந்து கொண்டவர்கள் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.





குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவருக்கான அழைப்புக்கட்டளை/அறிவித்தல்
SUMMONS/NOTICE TO AN ACCUSED PERSON
(Administration of Justice Law)

யாழ்ப்பாணம் Magistrate's Court/District Court/High Court

Case No. B1/661/PC/23

Name and address of complainant: HQI, Police head quaters, Jaffna.

Name/s and address/es of accused person/s: சிவஞானம் சிறிதரன் உட்பட 07 பேர்கள்

Particulars of alleged offence, or information received (where relevant): சட்டவிரோதமான பேரணியில் கலந்து கொண்டமை.

THIS SUMMONS/NOTICE IS ADDRESSED TO:

Name and address of accused: 1) வேலன் சுவாமி இல 692, சிவகுரு ஆதீனம், பருத்தித்துறை வீதி, நல்லூர்

# ரணில் தொட்டிலையும் ஆட்டிவிட்டு பிள்ளையையும் கிள்ளிவிடுகிறார்! – சிவஞானம் சிறிதரன்

பெப்ரவரி 09, 2023

சமஷ்டி அடிப்படையில் தீர்வொன்று வழங்கப்படாவிடின் நாடு மீண்டுமொரு இருண்ட யுகத்தை நோக்கி செல்வதை எவராலும் தடுக்கமுடியாது எனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், ஜனாதிபதி ரணில் தொட்டிலை ஆட்டிவிட்டு பிள்ளையையும் கிள்ளிவதை போல செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், தமிழர்களுக்கு ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு என்று மீண்டும் மீண்டும் கூறினால் இலங்கையினால் ஒருகாலமும் மீண்டெழ முடியாது.

எனவே, உலகிலுள்ள ஏனைய நாடுகளை போல சமஷ்டி அடிப்படையில் ஒரு தீர்வை முன்வைக்கப்பதன் மூலமே நாட்டில் நீதியை, அமைதியை கொண்டுவர முடியும்.

சிங்களவர்களும், தமிழர்களும் இலங்கையின் இரண்டு தேசிய இனங்களாக இணைந்து வாழக்கூடிய ஒரு அரசியல் உரிமையையே கோருகிறோம்.

அது அதியச்ச அதிகாரப்பகிர்வாகவும், சமஷ்டி அடைப்படையில் மீளப்பறிக்கப்படமுடியாததுமாக இருக்க வேண்டுமென்று கடந்த கால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு கோருகிறோம்.

ஒற்றையாட்சி என்ற கோசம் எழுப்பும் சிங்களத் தலைவர்களுக்கு இந்த நாடு இருண்ட யுகத்தை நோக்கி பயணிப்பது தெரியவில்லை.

13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டு 35 ஆண்டுகளாகிறது. இன்று அது உருதெரியாமல் போயுள்ளது.

28 க்கும் மேற்பட்ட நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் சுற்றறிக்கைகள் மூலம், 13 ஆம் திருத்தத்தில் உள்ள சில விடயங்கள் பறிக்கப்பட்டுள்ளன.

13 ஆவது திருத்துக்கு எதிராக இன்று பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். ஜனாதிபதியின் ஆதரவு இல்லாமல் அது சாத்தியப்படாது.



தீர்வை வழங்கப்போவதாக சர்வதேசத்துக்கு ஒரு முகத்தை காட்டும் ஜனாதிபதி ரணில், மறுபுறம் பௌத்த பிக்குகளையும் இனவாதிகளையும் தூண்டிவிடுகிறார்.

அவரின் இந்த செயல் தொட்டிலையும் ஆட்டிவிட்டு, பிள்ளையையும் கிள்ளி விட்டு போன்று உள்ளது.

எங்களது மண்ணில் நாங்கள் கௌரவமான அரசியல் தீர்வோடு வாழ்வதற்கு விரும்புகிறோம். சமஷ்டி இன்றி வழங்கப்படும் தீர்வு இந்த நாட்டை மீண்டுமொரு இருண்ட யுகத்துக்கு இட்டுச் செல்வதை எவராலும் தடுக்கமுடியாது என்றார்.

# அதிகாரப் பகிர்வு என ரணில் குறிப்பிடுவது கேலிக் கூத்தாக உள்ளது!

பெப்ரவரி 10, 2023

ஒற்றையாட்சி முறைமைக்குள் அதிகார பகிர்வு என ஜனாதிபதி குறிப்பிடுவது கேலிக் கூத்தாக உள்ளது. அதிகார பகிர்வு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்ட உண்மை விடயங்களை அவருடன் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் தலைமைகள் தமிழ் மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை (10) இடம்பெற்ற அரசாங்கத்தின் கொள்கை பிரகடனம் மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் ,

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றோம். அவர் அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் சந்தித்த போது நாட்டில் உள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக கூறியிருந்தார். எனினும் நாங்கள் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற பிரதமராக இருந்த போது நாங்கள் அவரை சந்தித்தவேளைகளில் அரசியல் தீர்வுக்கான தீர்வு என்ன? என்றும் அவரின் எண்ணங்கள் தொடர்பிலும் கேட்டோம். ஆனால் அவர் சமஷ்டி உள்ளிட்ட நாங்கள் முன்வைத்த விடயங்களை நிராகரித்திருந்தார். அவர் மாவட்ட அபிவிருத்தி சபைகள் தொடர்பிலேயே கதைத்தார்.

ஒற்றையாட்சிக்குள் அதிகாரங்களை வழங்க போவதாக அவர் தற்போது கூறியுள்ளார். அவர் கூறுவதை போன்று ஒன்றுபட்ட நாட்டுக்குள் அதிகாரத்தை பகிர்வது என்பது கேளிக்கூத்தானது. அவரை சந்திக்கும் தமிழ்க் கட்சிகள் அவர் என்ன கூறுகின்றார் என்பதனை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். அவர் ஒற்றையாட்சி விடயத்தை கூறி ஏமாற்றுகின்றார். அவரின் கொள்கைப் பிரகனடத்தில் 13 தொடர்பில் எதுவும் கூறவில்லை.

இதேவேளை மாவட்ட அபிவிருத்தி சபை தொடர்பில் கூறுகின்றார். இதன்படி 13 தொடர்பில் அவருக்கு அக்கறை இல்லை என்பதே தெளிவாகின்றது. எவ்வாறாயினும் 13 ஆவது திருத்தத்தை மறுக்கின்றோம். பேச்சுவார்த்தைக்கான ஆரம்பமாகக் கூட பார்க்கவில்லை.



இந்தத் திருத்தம் ஒற்றையாட்சிக்குள் வருவதால் அதில் எந்தத் தீர்வும் கிடைக்கப் போவதில்லை. இதனை எங்களின் கட்சி ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இதனால் தான் நாங்கள் ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைகளை நிராகரித்தோம்.

13 ஆவது திருத்தத்தை நாங்கள் மறுக்கின்றோம். ஆனால் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை மறுக்கப் போவதில்லை. 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் இணக்கப்பாட்டை கொண்டதல்ல. இந்தியாவும் இதில் திருப்தியடைவில்லை. சில இணைப்புகள் சேர்க்கப்பட்டதால் இந்தியா அதில் இணங்கியது. ஆனால் நாங்கள் இணங்கவில்லை என்றார்.

# ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வு என்றால் இந்த நாடு ஒருபோதும் உருப்படாது!

பெப்ரவரி 09, 2023

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினால் பிரசவிக்கப்பட்ட 13 ஆவது திருத்தம் உயிருடன் உள்ளதா? அல்லது கொல்லப்பட்டு அஸ்தி கரைக்கப்பட்டு விட்டதா என்று எண்ணத் தோன்றுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வு வழங்குவதாக ஒருபுறம் குறிப்பிட்டு விட்டு மறுபுறம் சிங்கள பேரின வாதத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளார்.

பிள்ளையை கிள்ளி விட்டு தொட்டிலை ஆட்டி விடுகிறார். ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வு என்றால் இந்த நாடு ஒருபோதும் உருப்படாது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (9) இடம்பெற்ற அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

துருக்கி மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பூமியதிர்ச்சி இயற்கையின் கோர தாண்டவத்தினால் துருக்கி மற்றும் சிரியா நாட்டு மக்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

உயிர் வாழ்வதற்காக அந்நாட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை கவலைக்குரியது. ஆகவே துருக்கி மற்றும் சிரியாவின் சம்பத்திற்கு உயரிய சபை ஊடாக ஆழ்ந்த கவலையை தெரிவித்துக் கொள்கிறோம்.

தற்போதைய காலக்கட்டம் இலங்கையின் அரசியல் நிலைவரத்தை தீர்மானிக்கும் நிலையில் காணப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க அரசியல் தீர்வு தொடர்பில் ஒருசில வார்த்தை பிரயோகத்தை வெளியிட்டார். இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 35 ஆண்டு காலம் நிறைவடையும் நிலையில் உள்ளது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினால் பிரசவிக்கப்பட்ட அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு 35 வயதாகும் நிலையில் 13 ஆவது திருத்தத்திற்கு எதிராக மீண்டும் போர் கோசங்கள் எழுப்பப்பட்டுள்ளன. 13 ஆவது திருத்தம் என்ற குழந்தை உள்ளதா அல்லது கொல்லப்பட்டு, அஸ்தி கரைக்கப்பட்டு விட்டதா என்று கேள்வி கேட்கும் நிலை காணப்படுகிறது.

சிங்கள தலைவர்கள் தொடர்ந்து ஒற்றையாட்சி என்ற கோசத்தை எழுப்பிக் கொண்டு நாட்டை மீண்டும் அதள பாதாளத்திற்கு கொண்டு செல்கிறார்கள்.

முன்னாள் பிரதமர் எஸ.டி.பண்டாரநாயக்க சமஷ்டி தொடர்பான யோசனையை முன்வைத்தார். கரையோரச் சிங்களம், மலைநாட்டுச் சிங்களம், யாழ் தமிழ் என்ற சமஷ்டி அடிப்படையிலான யோசனைகளை 1926 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பத்திரிகைள் வாயிலாக வெளியிட்டார். இறுதியில் பௌத்த பிக்குவினால் அவர் படுகொலை



செய்யப்பட்டார்.

போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று குறிப்பிட்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜேவரத்ன குறிப்பிட்டு அமைதி வழி போராட்டத்தை ஆயுத போராக மாற்றியமைத்தார். போர் பிரகடனமே இன்று நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றுள்ளது.

நாட்டில் அரசியல் முரண்பாடு புரையோடிப் போயுள்ள பின்னணியில் 2048 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதாக ஜனாதிபதி குறிப்பிடுவது வேடிக்கையாகவுள்ளது.

ஒற்றையாட்சி முறைமைக்குள் தான் அரசியல் தீர்வு என அரச தலைவர் குறிப்பிடுவது இந்த நாட்டை ஒருபோதும் உருப்பட செய்யாது. நாட்டு மக்கள் அனைவரும் சகோதரத்துவத்துடன் வாழ வேண்டுமாயின் பிளவுப்படாத நாட்டுக்குள் சமஷ்டி ஆட்சி முறையில் தீர்வு வழங்க வேண்டும்.

யுத்த காலத்திலும், இறுதி யுத்த காலத்தில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பல இலட்சக்கணக்கான எமது உறவுகள் காணாமலாக்கப்பட்டுள்ளார்கள். பல ஆதாரங்கள் உள்ளன.

இந்த மண்ணில் இன அழிப்பு இடம்பெற்றுள்ளது, இழக்க முடியாத அனைத்தையும் எமது இனம் இழந்துள்ளது. இழப்பிற்கு பின்னரும் ஒன்றிணைந்து வாழ்வதற்கு தலைப்படுகிறோம். ஒன்றிணைந்து வாழும் அரசியல் உரிமை சமஷ்டி முறைமையுடன் கோருகிறோம்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் ஊடாக வழங்கப்பட்ட பல உரிமைகள் 28 நீதிமன்ற தீர்ப்புக்கள் மற்றும் அரச சுற்றறிக்கை ஊடாக பறிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் அரசியலமைப்பு முறையாக செயற்படுத்தப் படுகிறதா, 13 ஆவது திருத்தத்திற்கு எதிராக பிக்குகள் போர் கொடி தூக்கியுள்ளார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிள்ளையை கிள்ளி விட்டு தொட்டிலை ஆட்டி விடும் வகையில் அரசியல் தீர்வு வழங்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு சிங்கள பேரிண வாதத்தை தூண்டி விடுகிறார்.

சமஷ்டி முறைமையில் தீர்வு வழங்க தயாராக இருந்தேன், ஆனால் அதற்கு சிங்களவர்கள் இடமளிக்கவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறுதியில் குறிப்பிடுவார்.

தமிழ் இனத்தை அழித்து யுத்தத்தை வெற்றிக் கொண்டோம் என்ற மதையின் வெற்றி போதையில் இருந்த ராஜபக்ஷ குடும்பத்தை சிங்கள மக்கள் விரட்டியடித்தார்கள்.

ஜனாதிபதியின் அக்கிராசன உரை நாட்டின் அடிப்படை பிரச்சினைகளுக்கும், இனப்பிரச்சினைக்கும் எவ்வித்திலும் தீர்வு பெற்றுக்கொடுக்காது.

ஜனாதிபதியின் கொள்கை நாட்டை வங்குரோத்து நிலைக்கு தொடர்ந்து கொண்டு சென்று மீண்டும் யுத்தத்தை தோற்றுவிக்கும்.

13 ஆவது திருத்தத்திற்கு எதிராக ஒரு தரப்பினர் போர் கொடி அரச அனுசரனையுடன் தூக்குவிறார்கள். மீள் பறிக்க முடியாத வகையில் அதிகாரம் சமஷ்டி ஆட்சி ஊடாக வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம் என்றார்.

# ஒற்றையாட்சி என்ற விடயத்தை குப்பையில் போட்டு சமஷ்டியை ஏற்படுத்துங்கள்!

பெப்ரவரி 09, 2023

நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமாயின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். அதனை ஒற்றையாட்சிக்குள் செய்ய முடியாது. ஒற்றையாட்சி என்ற விடயத்தை குப்பையில் போட்டு தமிழர்களின் சுயநிர்ணய உரிமை உறுதிப்படுத்தி சமஷ்டியை ஏற்படுத்துங்கள்.

அதனை விடுத்து கவர்ச்சிகரமான வசனங்களின் மூலம் நாட்டை கட்டியெழுப்ப முடியதாது. ஜனாதிபதி பதவி வகிப்பவர் எந்நிலையிலும் உண்மையை குறிப்பிட வேண்டும் அதனை விடுத்து அப்பட்டமாக பொய்யுரைக்க கூடாது.

ஜனாதிபதியின் கருத்துக்கள்  தமிழ் மக்களை ஏமாற்றுவதுடன் தமிழ் மக்களுக்கு தொடர்ந்து இழைக்கும் துரோகமாக கருதப்படும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (9) இடம்பெற்ற அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

ஜனாதிபதியின் உரை எதிர்ப்புகளை ஏற்படுத்தி காத்திருக்கவைத்த உரையாக இருந்த நிலையில் அந்த உரை தமிழ் மக்களை பொறுத்தவரையில் அது நூறு வீதம் ஏமாற்றத்தையே தந்துள்ளது.

75 வருடங்களாக புரையோடி போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்றும், சுதந்திர தினத்திற்கு முன்னர் தீர்வு வழங்கப்படும் என்றும் கூறியிருந்தார்.

ஆனால் சுதந்திர தினம் முடிந்து அவர் அக்கிராசன உரையை மேற்கொண்ட போதும் இனப்பிரச்சினை தீர்வு குறித்து ஆக்கப்பூர்வமான எந்த திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை.

ஒற்றையாட்சிக்குள்  அதிகார பகிர்வுகளை மேற்கொள்ள தயார் என்று கூறியுள்ளார். ஜனாதிபதியாக இருப்பவர் எவ்வேளையிலும் உண்மைகளை கூறுபவராக இருக்க வேண்டும்.

தொடர்ந்தும் அப்பட்டமான பொய்களை கூறிக்கொண்டு இருக்கக் கூடாது. 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பிரசன்ன ரணதுங்க கூட்டமொன்றில் கூறியிருந்தார். அதுதான் உண்மை. 13 ஆவது திருத்தம் தொடர்பில் சில அதிகாரங்களை கையாள முயன்றபோது அது தொடர்பில் வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒற்றையாட்சிக்குள் உட்சப்பட்ட அதிகாரம் என்று கூறுவது ஏமாற்று கதை என்பதுடன் தமிழ் தரப்



புளுடன் சேர்ந்து தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக செய்யும் துரோகமும் சதியுமே ஆகும்.

இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமாயின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். அதனை ஒற்றையாட்சிக்குள் செய்ய முடியாது.

இதனால் ஒற்றையாட்சி என்ற விடயத்தை குப்பையில் போட்டு தமிழர்களின் சுயநிர்ணய உரிமை உறுதிப்படுத்தி சமஷ்டியை ஏற்படுத்துங்கள். அதனை விடுத்து கவர்ச்சிகரமான வசனங்களின் மூலம் நாட்டை கட்டியெழுப்ப முடியதாது என்பதனை கூறிக்கொள்கின்றேன் என்றார்.

# மகாநாயக்க தேரர்களுக்கு விக்னேஸ்வரன் பதில் கடிதம் அனுப்பியுள்ளார்!

பெப்ரவரி 10, 2023

13 ஆவது திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எண்ணமே நாட்டில் பொருளாதார ஸ்திரதன்மையற்ற நிலையை தோற்றுவித்துள்ளதாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தம் குறித்து மகாநாயக்க தேரர்கள் அண்மையில் ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை மேற்கோள் காட்டி, சி.வி. விக்னேஸ்வரன் பதில் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அகிம்சை என்பது இந்து, பௌத்தம், சமணம் ஆகிய மதங்களின் முக்கிய கோட்பாடு எனவும், ஒரு பகுதி மக்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய விடயத்தை தேரர்களால் எவ்வாறு போதிக்க முடியும் எனவும் சி.வி. விக்னேஸ்வரன் மகாநாயக்க தேரர்களிடம் வினாவியுள்ளார்.

அத்துடன், வடக்கு, கிழக்கில் 3000 வருடங்களுக்கும் மேலாக தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையின் புராதன வரலாற்றை உத்தியோகபூர்வமாக எழுதுவதற்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் இந்திய மற்றும் சர்வதேச வரலாற்றாசிரியர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமிக்க ஜனாதிபதியை கோருமாறும் மகாநாயக்க தேரர்களை வலியுறுத்தியுள்ளார்.

# சிறீலங்கா பொலிஸாரினால் கஜேந்திரன், சுகாஷ் உள்ளிட்ட 18 பேர் கைது!

பெப்ரவரி 11, 2023

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் யாழ்ப்பாணத்தில் இலங்கையின் 75வது சுதந்திர தின கொண்டாட்டத்தின் ஒரு பகுதி இன்று நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் இலங்கையின் சுதந்திர தினம் தமிழர்களின் கரிநாள் என பிரகடனப்படுத்தி தமிழ்தேசிய மக்கள் முன்னணி யாழ்.நகரில் எதிர்ப்பு போராட்டம் ஒன்றுக்கு நேற்று அழைப்பு விடுத்திருந்தது.

இதனையடுத்து யாழ்.நகரில் சுதந்திர தினத்துக்கு எதிரான போராட்டங்கள், பேரணிகள் நடத்துவதை தடுப்பதற்கு நீதிமன்றம் ஊடாக சிறீலங்காபொலிஸார் தடை உத்தரவு பெற்றிருந்தனர்.

எனினும் தடை உத்தரவை மீறி இன்று மாலை தமிழ் தேசிய மக்கள் முன்னணியினால் எதிர்ப்பு போராட்டம் திட்டமிட்டபடி நடத்தப்பட்டிருந்தது. இதனை அடுத்து சம்பவ இடத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டு போராட்டத்தை தடுக்க முயற்சிக்கப்பட்டது.

எனினும் போராட்டம் தொடர்ந்த நிலையில் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் பிரபல சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஸ் உள்ளிட்ட 18 பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.








# யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா சுதந்திர நாள் கொண்டாடப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்!

பெப்ரவரி 11, 2023

யாழ்ப்பாணத்தில் சிறீலங்கா தேசிய சுதந்திர நாள் கொண்டாடப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, யாழ். பல்கலைக்கழக மாணவர்களினால் எதிர்ப்பு போராட்டம் இன்று (11) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்பாக ஒன்று கூடிய மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் முன்னதாக பல்கலைக்கழக வளாகத் தினுள் உள்ள பிரதான கொடிக் கம்பத்தில் கறுப்புக் கொடியினை மாணவர்கள் ஏற்றினர்.

இதன்போது பொருளாதார பின்னடைவு நேரத்திலும் பெருந்தொகையான பணச் செலவில் இரண்டாவது தடவையாக சுதந்திர தினத்தை முன்னெடுக்க வேண்டிய தேவை ஏன் என கேள்வி எழுப்பிய மாணவர்கள், தேர் தலுக்கு பணம் இல்லை என கூறி, சுதந்திர தினத்துக்கு பணத்தை செலவழிப்பது எதற்கு என கேள்வி எழுப் பியுள்ளனர்.
















# திருக்கோணமலை குமாரபுரம் படுகொலை இடம்பெற்று இன்றுடன் 27 ஆண்டுகள் நிறைவு!

பெப்ரவரி 11, 2023




திருக்கோணமலை குமாரபுரத்தில் சிறீலங்கா இனவெறி இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலை இடம் பெற்று நீதிகிடைக்காமல் இன்றுடன் 27 ஆண்டுகள் நிறை வடைகின்றன.

1996ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதி, திருக்கோண மலை, கிளிவெட்டி, குமாரபுரம் கிராமத்தில், சிறீலங்கா இராணுவத்தினரால், பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட 26 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும், 39 பேர் படுகாயம் அடைந்தனர்.



மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட குமாரபுரம் கிராமத்தில் நுழைந்த சிறீலங்கா இனவாத இராணுவத்



தினர் மற்றும் ஊர்காவல் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூடு மற்றும் வாள் வெட்டு சம்பவங்களால் பெண்கள், சிறுவர்கள் உள்ளிட்ட அப்பாவி பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 15வயதான சிறுமி ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு படு கொலை செய்யப்பட்டார்.

இந்தப் படுகொலைகள் தொடர்பான ஆரம்ப விசா ரணைகள் மூதூர் நீதிமன்றத்தில் நடந்து வந்த நிலையில், தெகிவத்தை இராணுவ முகாமைச் சேர்ந்த 8 இராணுவத் தினருக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

பின்னர் போர்ச்சூழலைக் காரணம் காட்டி, இந்த வழக்கு சந்தேக நபர்களின் கோரிக்கைக்கு அமைய அனுராதபுர மேல்நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.

இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 8 இராணுவத்தினரும், இராணுவத்தில் இருந்து இடைநிறுத்தப்பட்ட நிலையில், இரண்டு பேர் மரணமாகிவிட்டனர்.

ஏனையவர்களான கோப்ரல்கள், நிசாந்த, அஜித் சிசிரகு மார, கபில தர்சன, அபேசிங்க, உபசேன, அபேரத்ன ஆகி யோருக்கு எதிரான இந்த வழக்கு, 20 ஆண்டுகளுக்குப் பின்னர், 2016 ஜூன் மாதமே, அனுராதபுர மேல் நீதி மன்றத்தில் மீளத் தொடங்கப்பட்டது.

இதன்போது சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள் பலரும் சாட்சியங்களை அளித்ததுடன், சந்தேக நபர்களை அடை யாளம்காட்டியும் இருந்தனர்.



எனினும், சாட்சியங்களில் முரண்பாடுகள் இருப்பதைக் காரணம் காட்டி, அனுராதபுர மேல் நீதிமன்ற நீதிபதி, இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட 6 இராணுவ கோப் ரல்களையும், எல்லாக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடு விப்பதாக தீர்ப்பளித்தார்.

முன்னதாக, இறுதிவாதத்தின் போது, இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஆறு பேருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான அரசசட்டவாளர் நீதிமன்றத்தைக் கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இருபது ஆண்டுகளாக இடம்பெற்றுவந்த குமாரபுரம் படு கொலை வழக்கில், குற்றம் சாட்டப்பட்ட ஆறு படுகொலை இராணுவ அதிகாரிகளும் கடந்த 27.07.2016 அனுரா தபுர சிறப்பு மேல் நீதிமன்ற நீதிபதியினால் அனைத் துவகை குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்கப்பட்ட சம்பவம் தமிழ் மக்களை ஆத்திரமடைய வைத்துள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் சுப்பையா சேதுராசா, அழகு துரை பரமேஸ்வரி, அருமைத்துரை வள்ளிப்பிள்ளை, கிட்ணன் கோவிந்தன், அருணாசலம் தங்கவேல், செல் லத்துரை பாக்கியராசா, வடிவேல் நடராசா, இராஜேந்திரம் கருணாகரம், சண்முகநாதன் நிதாந்தன், இராமஜெயம் கமலேஸ்வரன், கந்தப்போடி கமலாதேவி, சிவக்கொழுந்து சின்னத்துரை, சிவபாக்கியம் நிசாந்தன், பாக்கியராசா வசந்தினி, அமிர்தலிங்கம் ரஜனிகாந்தி, தங்கவேல் கலாதேவி, ஸ்ரீபன் பத்துமா, சுந்தரலிங்கம் பிரபாகரன், சுந்தரலிங்கம் சுபாஜினி, கனகராசா சுவாதிராசா, சுப்பிரமணியம் பாக்கியம், விநாயகமூர்த்தி சுதாகரன், ஆனந்தன் அன்னம்மா, விஜயகாந் லெட்சுமி, அரு மைத்துரை தனலெட்சுமி, ஆகியோர் உட்பட 26பேர் கொல்லப்பட்டனர்.




# மொன்றியால் பகுதியில் சிறுவர்கள் பராமரிப்பு மையத்தினுள் பேருந்து புகுந்ததில் இரு குழந்தைகள் பலி!

பெப்ரவரி 09, 2023

கனடாவின் மொண்ட்ரீல் அருகேயுள்ள லாவல் நகரில், குழந்தைகள் பராமரிப்பு மையத்தினுள் பேருந்து புகுந்து விபத்துக்குள்ளானதில் 2 குழந்தைகள் உயிரிழந்தனர்.

மேலும், 6 பேர் படுகாயமடைந்தனர். புதன்கிழமை காலை 8.30 மணியளவில் பெற்றொர் தங்களது குழந்தைகளை பராமரிப்பு மையத்தில் விட்டுச் சென்ற நேரத்தில், அரசு பேருந்து ஒன்று பராமரிப்பு மையத்தினுள் புகுந்து விபத்துக்குள்ளானது.

கொலை மற்றும் கவனக்குறைவுடன் பேருந்தை இயக்கி விபத்தை ஏற்படுத்தியதாக பேருந்து ஓட்டுநரை காவல்துறையினர் கைது செய்தனர். விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் குடும்பங்களுக்கு கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இரங்கல் தெரிவித்துள்ளார்.

இவ்விபத்து வேண்டுமென்றே நடத்தப்பட்டது என நாங்கள் நினைக்கிறோம். ஆனால் உள்நோக்கம் எங்களுக்குத் தெரியாது என்று லாவல் காவல்துறைத் தலைவர் பியர் ப்ரோசெட் கூறினார்.

பேருந்து ஓட்டுநர் சுமார் 10 ஆண்டுகளாக பேருந்து நிறுவத்தில் பணிபுரிந்து வருகிறார். ஆனால் அவரது கோப்பில் எந்தவித தவறான குறிப்புக்கள் இதுவரை இடம்பெற்றிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கனடாவில் கொள்ளையிடப்பட்ட பெருந்தொகை வாகனங்கள் மீட்பு!

பெப்ரவரி 11, 2023

கனடாவில் கொள்ளையிடப்பட்ட பெருந்தொகையான வாகனங்கள், மால்டா குடியரசுகளில் மீட்கப்பட்டுள்ளன.

றொரன்டோ பெரும்பாக பகுதிகளில் திருடப்பட்ட வாகனங்களே இவ்வாறு மால்டாவில் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட விருந்த நிலையில் மீட்கப்பட்டு, நாட்டுக்கு கொண்டு வரப் பட்டுள்ளன.

3.5 மில்லியன் டொலர்கள் பெறுமதியான 64 வாகனங்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

றொரன்டோ பெரும்பாக பகுதியில் இவ்வாறு வாகனங்கள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கடந்த 2021 மார்ச் மாதம் 18 பேரை பொலிஸார் கைது செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவில் கடத்தப்பட்ட வாகனங்கள் மால்டாவின் துறை முகத்தில் கொள்கலன் ஒன்றில் வைத்து அதிகாரிகளினால் மீட்கப்பட்டுள்ளன.

மொன்றியல் துறைமுகம் வழியாக இந்த வாகனங்கள் மால்டா விற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



# தகாத உறவு காரணமாக றொரண்டோ மேயர் ஜோன் டோரி பதவி விலகல்!

பெப்ரவரி 11, 2023

தகாத உறவு காரணமாக றொரன்டோ நகர மேயர் ஜோன் டோரி தனது பதவியைத் துரந்தார் செய்வதாக அறிவித் துள்ளார்.

பெருந்தொற்று காலப் பகுதியில் தனது பணியாளர் ஒருவருடன் தகாத உறவு பேணியதாக செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நகரின் மேயர் என்ற ரீதியிலும் குடும்பஸ்தர் என்ற ரீதியிலும் தாம் நடந்து கொள்ளத் தவறியதாக டோரி ஒப்புக்கொண் டுள்ளார்.

இந்த தொடர்பு தம்மால் இழைக்கப்பட்ட பாரதூரமான குற்றம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த செயலுக்காக வருந்துவதாகவும் மன்னிப்பு கோருவ தாகவும் ஜோன் டோரி தெரிவித்துள்ளார்.

தனது மனைவி மற்றும் குடும்பத்தாரிடமும் இந்த தவறுக்காக மன்னிப்பு கோருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

68 வயதான ஜோன் டோரி கடந்த 2014ம் ஆண்டு றொரன்டோ வின் மேயராக தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஜோன் டோரி இதுவரையில் தனது ராஜினாமா கடிதத்தை அதிகாரபூர்வமாக ஒப்படைக்கவில்லை என தெரிவிக்கப் படுகின்றது.



# கனடிய வானில் பறந்த மர்ம பொருள் சுட்டு வீழ்த்தப்பட்டது!

## கனேடியப் பிரதமர்

பெப்ரவரி 11, 2023


Justin Trudeau
@JustinTrudeau
Officiel du gouvernement - Canada

I ordered the take down of an unidentified object that violated Canadian airspace. @NORADCommand shot down the object over the Yukon. Canadian and U.S. aircraft were scrambled, and a U.S. F-22 successfully fired at the object.

4:55 PM · Feb 11, 2023 · 653.5K Views

என்ன காரணத்தினால் வானில் பறந்த மர்ம பொருள் சுட்டு வீழ்த்தப்பட்டது என்பது குறித்து கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.



கனேடிய மக்களின் பாதுகாப்பிற்கு நியாயமான அளவு அச்சுறுத்தலை ஏற்படுத்திய கரணத்தினால் மர்ம பொருள் சுட்டு வீழ்த்தப்பட்டது என தெரிவித்துள்ளார்.

யுகொன் பகுதியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் இந்த மர்ம பொருள் கனேடிய வான் பரப்பில் பறந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கனேடியர்களின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிவில் விமான போக்குவரத்து சேவைகளுக்கும், பொது மக்களுக்கும் ஏற்பட்ட அச்சுறுத்தல் நிலைமைகளை கருத்திற் கொண்டே விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது என அவர் குறிப் பிட்டுள்ளார்.

# தமிழக செய்திகள்



# முல்லை பெரியாறு ஆணையும் கேரள காவல்துறை அடாவடியும்!

பெப்ரவரி 06, 2023

கேரளா - முல்லைப் பெரியாறு அணையில் பராமரிப்பு பணிகள் நடந்து வரும் வேளையில், ஓட்டுநர்கள் மற்றும் வேலை யாட்கள் மீது கேரளா காவல்துறையினர் வழக்கு பதிவு செய்துள் ளனர். இச்சம்பவம் தமிழ்நாடு கேரளா எல்லைப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.

கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் உள்ள முல்லை பெரியாறு அணை, தமிழக நீர்வளத்துறையின் பராமரிப்பில் உள்ளது. இந்த அணையின் பராமரிப்பு பணிகளைச் செய்வதற் காக, நான்கு சிறிய சரக்குந்துகள் சில நாட்களுக்கு முன்பு ஜல்லி கற்கள், மணல், சிமெண்ட் போன்றவற்றை வல்லக்கடவு வனப் பாதை வழியாகக் கொண்டு சென்றனர்.

சிறிய சரக்குந்துகள் ஓட்டுநர்களுடன், அவர்களுக்குத் துணை யாக மூன்று வேலை ஆட்களையும் தடையை மீறிச் சென்றதாக கேரள காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

ஆபத்தான வனப்பகுதியில் செல்லும்போது ஓட்டுநர்களுக்குத் துணையாக வேலை ஆட்கள் செல்வது அவசியம் என்ற நிலை யில், கேரள காவல்துறையின் இந்த நடவடிக்கைக்கு தமிழக விவசாயிகள் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. போராட்டம் மேற்கொள்ளப் போவதாகவும் அறிவித்துள்ளது.

முல்லைப் பெரியாறு அணையை நம்பி ஒரு கோடி மக்களின் குடிநீர் ஆதாரம் இருப்பதாகவும், 10 லட்சம் விவசாயிகளின் வாழ்க்கை இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள விவசாயிகள் சங்கம், அணையின் கட்டுப்பாடு முழுவதையும் தமிழக நீர்வளத்துறை எடுத்துக் கொள்வதற்கான பணிகளில் இறங்க வேண்டும் என் றும், அணையில் உள்ள கேரள மாநில காவல்துறையினரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளது.

தமிழக கட்டுப்பாட்டில் இருக்கும் முல்லை பெரியாறு அணையில் தற்போது பராமரிப்பு பணி நடந்து வரும் சூழலில், சரக்குந்து



ஓட்டுநர்கள் மற்றும் அவர்களுக்குத் துணையாக மூன்று வேலை ஆட்களையும் கேரள காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்திருப்பது தமிழ் மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# ஈழத் தமிழர்கள் அகதிகளாக தஞ்சம்!

பெப்ரவரி 04, 2023

யாழ்ப்பாணம் - புங்குடுதீவை சேர்ந்த ஜெய பரமேஸ் வரன் (43), அவரது மனைவி மாலினி தேவி (43) மற்றும் அவரது 12 வயது மகள், 7 வயது மகன் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் நேற்று (3) மாலை படகில் புறப்பட்டு தனுஷ்கோடி அருகே உள்ள ஒத்தப்பட்டி தெற்கு கடற்கரைக்கு நள்ளிரவு வந்திறங்கி கடற்கரை அருகே உள்ள மீனவர் குடிசையில் தஞ்சமடைந்தனர்.

தகவலறிந்து தனுஷ்கோடி ஒத்தப்படடிக்கு சென்ற தனுஷ் கோடி பொலிஸார் மற்றும் க்யூ பிரிவு பொலிஸார் இலங்கை தமிழர்களிடம் விசாரணை நடத்தினர்.

விசாரணையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வால் குழந்தைகளை வைத்துக் கொண்டு இலங்கையில் வாழ வழி இல்லை என்ற நிலையில் , தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் சந்தோஷ மாக வாழ்வதையும் அவர்களது குழந்தைகள் நன்கு படிக்கும் வீடியோ பார்த்து குழந்தைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தமிழகத்திற்கு குடும்பத்துடன் புகலிடம் தேடி வந்ததாக தெரிவித்தார்.

மேலும் ஜெய பரமேஸ்வரனின் மனைவி மாலினி தேவிக்கு இருதய நோய் உள்ளதால் இலங்கையில் மருத் துவ செலவு செய்ய இயலாததால் வாழ்ந்தால் தமிழகத்தில் அகதியாக வாழ்வோம் அல்லது தமிழகம் செல்லும் போது கடலில் விழுந்து இறந்து விடுவோம் என உயிரை பணயம் வைத்து குடும்பத்துடன் தமிழகம் வந்ததாக தெரிவித்தார்.

பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்கு பிறகு 4 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட



உள்ளனர். பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழகத் திற்கு இலங்கையிலிருந்து வந்த அகதிகளின் எண் ணிக்கை 222 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஆதார் இணைப்பில் குழப்பம்!

## பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ்

பெப்ரவரி 06, 2023

மின் இணைப்பு எண்ணுடன் ஆதார் இணைப்பில் குழப்பம் உள் ளதாக பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத் துள்ளார், மேலும் இது தொடர்பாக மின்வாரியம் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தமிழ் நாட்டில் மின் இணைப்பு எண்ணுடன் ஆதாரை இணைப்பதில் பெரும் குழப்பங்கள் நிகழ்ந்திருப்பதாகவும், மின் இணைப்பு எண்களுடன் எந்த வகையிலும் தொடர்பில்லாத ஆதார் எண்கள் இணைக்கப் பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகி யுள்ளன. இது பெரும் அதிர்ச்சி அளிக்கிறது!

மேலும் எந்த ஒரு சீர்திருத்தத்திற்கும் முறையான திட்டமிடலும், காலக்கெடுவும் தேவையாகும். போதிய காலக்கெடு வழங்



காமல், நோக்கம் என்ன? என்பதை தெரிவிக்காமல் மின் இணைப்பு எண்ணுடன் ஆதாரை இணைக்கும் திட்டத்தை மக்கள் மீது திணித்ததன் விளைவு தான் இதுவாகும்!

அதேபோல் மின் இணைப்பு எண்களுடன் ஆதாரை இணைப் பதில் எத்தகைய குழப்பங்கள் நடந்துள்ளன? அதற்கான காரணங்கள் என்ன? அதனால் எத்தகைய பாதிப்புகள் ஏற் படக்கூடும்? அதை மின்வாரியம் எவ்வாறு சரி செய்யப் போகிறது? என்பது குறித்து தமிழ்நாடு அரசு விளக்கமளிக்க வேண்டும் என கேள்வி எழுப்பி உள்ளார்

மேலும் மின் இணைப்பு எண் - ஆதார் இணைப்புக்கான நோக்கம் என்ன? என்பதை இப்போதாவது மின்வாரியம் தெரிவிக்க வேண்டும். வீடுகளுக்கு மின்வாரிய ஊழியர்களை அனுப்பி ஆதார் மற்றும் மின் இணைப்பு எண்களைப் பெற்று அவற்றை இணைப்பதற்கு மின்வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

www.sangathamil.ca

# அஞ்சல் துறையில் தமிழர்கள் புறக்கணிப்பு - வேல்முருகன் எச்சரிக்கை!

பெப்ரவரி 08.02023

அஞ்சல்துறையில் தமிழர்களை திட்டமிட்டு புறக்கணிக்க சதி நடப்பதாகவும் இணைய விண்ணப்பத்தை மாற்றாவிட்டால் மாபெரும் போராட்டம் நடக்கும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவரும் பண்ருட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வேல்முருகன் எச்சரித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்தியா முழுவதும் 40000 கிராமின் டாக் சேவக் காலியிடங்களுக்குப் பணியிடங்களை நிரப்ப ஒன்றிய அரசின் அஞ்சல் துறை முடிவு செய்துள்ளது. இதில், தமிழ்நாட்டில் 3,167 காலியிடங்கள் உள்ளன.

இந்த பணியிடங்கள் 10ஆம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. இதற்காக கடந்த ஜனவரி 27ம் தேதி முதல் வரும் பிப்ரவரி 16ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இணைய விண்ணப்பத்தில் 10ம் வகுப்பு மதிப்பெண்கள் பாட வாரியாக கேட்கப்பட்டு உள்ளது. மாநில பாட முறையில் தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல், சமூக அறிவியல் ஆகிய 5 பாடங்களே உண்டு. ஆனால், இணைய விண்ணப்பத்தில் 6வது பாடமும் இடம் பெற்றுள்ளது. அது “தெரிவு மொழி” என்பது.

மற்ற மாநிலங்களில் தெரிவு மொழி இருப்பதால், அம்மாநிலங்களில் அஞ்சல்துறை தேர்வுக்கு விண்ணப்பிக்க எந்த வித சிக்கலும் இல்லை. ஆனால், 6வது பாடமே இல்லாத இருமொழித் திட்டம் நடைமுறையில் உள்ள தமிழ்நாட்டின் இளைஞர்கள் என்ன செய்வார்கள். 6வது பாட விவரங்களை நிரப்பாவிட்டால் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்ய முடியாது.

பன்முகத்தன்மை வாய்ந்த இந்தியாவில், தேர்வுகளை நடத்தும் போது, அம்மாநிலங்களில் உள்ள கல்விக்கொள்கையை, கணக்கில் கொள்ளப்படாதது அதிர்ச்சி அளிக்கிறது. இது வன்மையாக கண்டிக்கதக்கது.

குறிப்பாக அஞ்சல்துறை இணையத்தில் வெளியிட்டுள்ள விண்ணப்பம், திட்டமிட்டு தமிழ்நாட்டு இளைஞர்களை புறக்கணிப்பதற்கான சதித்திட்டமோ என்ற சந்தேகமும், அச்சமும் இயல்பாகவே எழுகிறது. ஏனென்றால், கடந்த கால நிகழ்வுகளும், அனுபங்களும் நமக்கு பல்வேறு கற்பிதங்களை கற்றுக்கொடுத்துள்ளது.

அதாவது தமிழ்நாட்டில் செயல்படும் இந்திய அரசு நிறுவனங்களான நெய்வேலி அனல் மின் நிலையம், ஆயுதத் தொழிற சாலைகள், துறைமுகங்கள், வானூர்தி நிலையங்கள், தொடர் வண்டித்துறை, அஞ்சல் துறை, தொலைபேசித் துறை, அரசுடமையாக்கப்பட்ட வங்கிகள், வருமான வரி, உற்பத்தி வரி, சுங்க வரி அலுவலகங்கள் உள்பட்ட அனைத்திலும் திட்டமிட்டு தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு, 85 விழுக்காடு வெளிமாநிலங்களைச் சேர்ந்தவர்களை வேலைக்குச் சேர்க்கும் அவலம் தொடர்ச்சியாக நடந்து வருகிறது. அதன் நீட்சியாக தான், தற்போது அஞ்சல்துறையின் அறிவிப்பையும் பார்க்க வேண்டியுள்ளது.

தமிழ்நாட்டின் கல்வி, வேலைவாய்ப்பு முதலியவை மண்ணின் மக்களாகியத் தமிழர்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கில்தான் மொழிவழி ஆட்சி மாநிலமாகத் தமிழ்நாடு 1956 நவம்பர் 1-இல் வடிவமைக்கப்பட்டது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் இந்த நோக்கத்துக்கு எதிராக, இந்திய அரசு அனைத்திந்தியத் தேர்வு என்பதைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ்நாட்டில் ஒன்றிய அரசுத் தொழிலகங்கள், அலுவலகங்கள் என அனைத்திலும் வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களையே சேர்த்துவருகிறது.

எனவே, இணைய விண்ணப்பத்தில் 6 வது பாட விவரம் கட்டாயமாகக் கேட்கப்படுவதை கைவிட வேண்டும். தமிழ்நாட்டு இளைஞர்கள் விண்ணப்பிக்கும் வகையில், விண்ணப்பிப்பதற்கான காலக்கெடுவை நீட்டிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் அஞ்சல்துறையில் உள்ள 3,167 காலிப்பணியிடங்களில், தமிழ்நாட்டு இளைஞர்களை மட்டுமே நிரப்ப, அஞ்சல்துறை முன்வர வேண்டும். இல்லாவிட்டால் தமிழ்நாட்டின் இளைஞர்களை ஒன்று திரட்டி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் மாபெரும் போராட்டம் நடக்கும் என எச்சரிக்கை விடுக்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார் பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன்.

# மதுரையில் 2,200 ஆண்டுகள் பழமையான தமிழ் கல்வெட்டு கண்டுபிடிப்பு!

பெப்ரவரி 11, 2023



மதுரை - திருப்பரங்குன்றம் மலைக் குகையில் சுமார் 2,200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான தமிழி கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டமை தொல்லியல் ஆர்வலர்களை ஆச்சரியப்படுத்தி உள்ளது. திருப்பரங்குன்றம் தொடருந்து நிலையம் எதிரிலுள்ள குன்றின் மேற்கு சரிவில் உள்ள 2 குகைகளில் கற்படுக்கைகளும், கி. மு. 1 மற்றும் கி.பி.1ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 3 தமிழி கல்வெட்டுகளும் மத்திய தொல்லியல் துறையால் பாதுகாக்கப்படுகின்றன. இதனிடையே மேலேயுள்ள குகைக்குச் செல்லும் வழியில், அதன் இடதுபுறம் ஒரு சிறிய குகை உள்ளது. இதனுள்ளே 5 கற்படுக் கைகள் உள்ளன. இதில் விதானத்தின் மேற்குப் பகுதியில் ஒரு தமிழி கல்வெட்டை தொல்லியல் ஆய்வாளர் வெ. பாலமுரளி கண்டறிந்தார். பின்னர் தொல்லியல் ஆய்வு நிறுவனத் தலைவர் வே. ராஜகுரு, பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மைய ஆய்வாளர் உதயகுமார் ஆகியோர் அந்த கல்வெட்டை படியெடுத்து, தொல்லியலாளர் சாந்தலிங்கம் துணையுடன் படித்ததில், அது சுமார் 2,200 ஆண்டுகள் பழமையான தமிழி கல்வெட்டு எனத் தெரியவந்தது.

இதுகுறித்து தொல்லியல் ஆய்வாளர்கள் வே.ராஜகுரு, வெ.பாலமுரளி ஆகியோர் கூறியதாவது: இக்குகையிலுள்ள கல்வெட்டில் 2 வரிகள் உள்ளன. முதல் வரியில் ‘த, ர’ தவிர மற்ற எழுத்துகள் சிதைந்துள்ளன. 2ஆம் வரியிலும் சில எழுத்துகள் அழிந்துள்ளன. சில எழுத்துகள் இடைவெளி விட்டு எழுதப்பட்டுள்ளன. முதல் வரியின் தொடர்ச்சியாக அமைந்த இரண்டாம் வரியில் உள்ள





திருப்பரங்குன்றம் மலையில் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தமிழி கல்வெட்டைப் படித்துக் காட்டும் ஆய்வாளர்கள் ராஜகுரு, பாலமுரளி

எழுத்துகளை ‘யாரஅதிறாஈத்த வதர’ என படிக்கலாம். குகையிலுள்ள 5 கற்படுக்கைகளை குறிக்க 5 கோடுகள் வெட்டப்பட்டுள்ளன. இக்கற்படுக்கைகளை அமைத்து கொடுத்தவர் பெயராக ‘யாரஅதிற’ எனக் கொள்ளலாம். அதிட்டானம் என்றால் இருக்கை என்ற பொருளும் உண்டு. எனவே இக்கல்வெட்டு கி. மு. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக கருதலாம்.

இக்கல்வெட்டை மத்திய, மாநில தொல்லியல் துறை ஆய்வு செய்து முழு தகவலையும் வெளிக்கொண்டு வந்தால் மதுரை அருகே 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த முதுகுடிகள் பற்றிய புதிய தகவல்கள் கிடைக்கலாம். இவ்வாறு அவர்கள் கூறினர .

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.

தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.

எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து கோருவது ஏன்?
## புதுவை முதல்வர் ரங்கசாமி

பெப்ரவரி 08.02023

புதுவை - தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்கு அதிகாரம் வேண்டும் என்பதால் மாநில அந்தஸ்து கூறுவதாக புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி, தனது கட்சியின் 13 ஆம் ஆண்டு தொடக்க விழாவில் பேசியுள்ளார்.

கொங்கிரசில் இருந்து பிரிந்த தற்போதைய புதுவை மாநில முதல்வர் ரங்கசாமி, 2011ம் ஆண்டு என்.ஆர்.கொங்கிரஸ் என்ற புது கட்சியை தொடங்கி மூன்று மாதங்களிலேயே ஆட்சியை பிடித்து தேசிய அரசியல் தலைவர்களை திரும்பி பார்க்க வைத்தவர்.

என்.ஆர்.கொங்கிரஸ் கட்சியின் 13ம் ஆண்டு தொடக்க விழா இன்று கொண்டாடப்பட்டது. கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள என்.ஆர்.கொங்கிரஸ் கட்சித் தலைமை அலுவலகத்தில் கட்சியின் நிறுவனத்தலைவரும், புதுச்சேரி முதல்வருமான ரங்கசாமி கட்சியின் கொடியை ஏற்றிவைத்து அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

அப்போது பேசிய அவர், புதுச்சேரியில் கடந்த கால கொங்கிரஸ், திமுக கூட்டணி ஆட்சியில் மக்களுக்கான பல திட்டங்களைச் செயல்படுத்தவில்லை. தற்போது தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பொறுப்பேற்ற பிறகு மீண்டும் மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 26 ஆயிரம் நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளதுடன் மாணவர்களுக்கான இலவச மடிக்கணினி, மிதிவண்டி, பாடசாலை சீருடைகள் இந்த மாதம் வழங்கப்படும் என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், புதிய தொழிற்சாலைகளைத் தொடங்கி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இதேபோல் அரசுத்துறையில் கலியாணப் பணிகள் நிரப்பப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.



புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து பெற வேண்டும் என்பதற்காக என்.ஆர்.கொங்கிரஸ் கட்சி தொடங்கப்பட்டதாகவும், ஆனால் தனக்கு நெருக்கடி வரும் போது எல்லாம் மாநில அந்தஸ்து விவகாரத்தைக் கையில் எடுத்துக்கொள்வதாக எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்து வருகின்றன.

என்.ஆர்.கொங்கிரஸ் கட்சிக்காக மட்டும் மாநில அந்தஸ்து கேட்கவில்லை. புதுச்சேரியில் உள்ள அனைத்து அரசியல் கட்சியினருக்காக மாநில அந்தஸ்து கோரி வருகிறோம் என்றார்.

மேலும் நிர்வாக ரீதியாகவும், மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் என்ன சிக்கல் உள்ளது என்பது ஆட்சியில் உள்ள வர்களுக்கு மட்டுமே தெரியும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்கு அதிகாரம் வேண்டும் என்பதால் அந்தஸ்து கோருவதாகவும், ஒன்றிய அரசு அதனை வழங்கும் என்ற நம்பிக்கையும் உள்ளதாகவும் தெரிவித்தார்.

# தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களைப் பற்றிய அறிவிப்பு!

## பழ. நெடுமாறன்

பெப்ரவரி 13.02023

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் நலமுடன் உள்ளார் என்று உலக தமிழர் பேரமைப்பு தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றத்தில் இன்றைய தினம் திங்கட்கிழமை கவிஞர் காசி ஆனந்தன், பழ. நெடுமாறன் ஆகியோர் செய்தியாளர்களைச் சந்தித்து, இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.




மேலும் தெரிவிக்கையில்,

1. சர்வதேசச் சூழலும், இலங்கையில் இராசபக்சே ஆட்சியை வீழ்த்தும் அளவுக்கு வெடித்துக் கிளம்பியிருக்கிற சிங்கள மக்களின் போராட்டங்களும், தமிழீழத் தேசியத் தலைவர் வெளிப்படுவதற்கான உகந்த சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

2. இந்தச் சூழலில் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் நலமுடன் இருக்கிறார் என்கிற நற்செய்தியை உலகம் முழுவதுமுள்ள தமிழர்களுக்கு உறுதியாகத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். இதுவரை அவரைப் பற்றித் திட்டமிட்டுப் பரப்பப்பட்ட யூகங்களுக்கும், ஐயங்களுக்கும் இது முற்றுப்புள்ளி வைக்கும் என்று நம்புகிறோம்.

3. தமிழீழ மக்களின் விடியலுக்கான திட்டத்தை விரைவில் அவர் அறிவிக்க இருக்கிறார். தமிழீழ மக்களும், உலகத் தமிழர்களும் ஒன்றுபட்டு நின்று அவருக்கு முழுமையான ஆதரவினை அளிக்க முன்வருமாறு வேண்டுகிறோம்.

4. விடுதலைப்புலிகள் வலிமையாக இருந்த காலம் வரை இந்தியா வுக்கு எதிரான நாடுகள் எதையும் தங்கள் மண்ணில் காலூன்ற அனுமதிக்க வில்லை இந்தியாவுக்கு எதிரான நாடுகள் எதனுடனும், எந்தக் காலகட்டத்திலும் எத்தகைய உதவியும் பெறுவதில்லை என்பதிலும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் மிக உறுதியாக இருந்தர். தற்போது இலங்கையில் ஆழமாகக் காலூன்றி இந்திய எதிர்ப்புத் தளமாக அதை ஆக்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளதையும், இந்துமாக்கடலின் ஆதிக்கம் சீனாவின் பிடியில் சிக்கும் அபாயம் இருப்பதையும் எண்ணிப் பார்த்து, அதனைத் தடுக்கும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இந்திய அரசை வேண்டகிறோம்.

4. இந்த முக்கியமான காலகட்டத்தில் தமிழக அரசும், தமிழ் நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும், தமிழக மக்களும் ஒன்றுபட்டு நின்று தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுக்குத் துணை நிற்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.



தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன்
அவர்களைப் பற்றிய உண்மை அறிவிப்பு

1. சர்வதேசச் சூழலும், இலங்கையில் இராசபக்சே ஆட்சியை வீழ்த்தும் அளவுக்கு வெடித்துக் கிளம்பியிருக்கிற சிங்கள மக்களின் போராட்டங்களும், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் வெளிப்படுவதற்கான உகந்த சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

2. இந்தச் சூழலில் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் நலமுடன் இருக்கிறார் என்கிற நற்செய்தியை உலகம் முழுவதுமுள்ள தமிழர்களுக்கு உறுதியாகத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். இதுவரை அவரைப் பற்றித் திட்டமிட்டுப் பரப்பப்பட்ட யூகங்களுக்கும், ஐயங்களுக்கும் இது முற்றுப்புள்ளி வைக்கும் என்று நம்புகிறோம்.

3. தமிழீழ மக்களின் விடியலுக்கான திட்டத்தை விரைவில் அவர் அறிவிக்க இருக்கிறார். தமிழீழ மக்களும், உலகத் தமிழர்களும் ஒன்றுபட்டு நின்று அவருக்கு முழுமையான ஆதரவினை அளிக்க முன்வருமாறு வேண்டுகிறோம்.

4. விடுதலைப்புலிகள் வலிமையாக இருந்த காலம் வரை இந்தியாவுக்கு எதிரான நாடுகள் எதையும் தங்கள் மண்ணில் காலூன்ற அனுமதிக்கவில்லை. இந்தியாவுக்கு எதிரான நாடுகள் எதனுடனும், எந்தக் காலகட்டத்திலும் எத்தகைய உதவியும் பெறுவதில்லை என்பதிலும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் மிக உறுதியாக இருந்தார். தற்போது இலங்கையில் ஆழமாகக் காலூன்றி இந்திய எதிர்ப்புத் தளமாக அதை ஆக்கும் முயற்சியில் சீனா ஈடுபட்டுள்ளதையும், இந்துமாக்கடலின் ஆதிக்கம் சீனாவின் பிடியில் சிக்கும் அபாயம் இருப்பதையும் எண்ணிப்பார்த்து, அதனைத் தடுக்கும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இந்திய அரசை வேண்டுகிறோம்.

5. இந்த முக்கியமான காலகட்டத்தில் தமிழக அரசும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளும், தமிழக மக்களும் ஒன்றுபட்டு நின்று தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களுக்குத் துணை நிற்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

அன்புடன்

(பழ. நெடுமாறன்)

நாள்: 13.02.2023 – திங்கள்
முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம். தஞ்சாவூர்

அன்புடன்
பழ.நொடுமாறன்

# உலக செய்திகள்

## ஆவுஸ்ரேலியா நணயத்தாளில் இருந்து இங்கிலாந்து மன்னர் சார்லசின் புகைப்படம் நீக்கம்!

பெப்ரவரி 03, 2023

ஆவுஸ்திரேலியாவின் பணத்தாளில் இருந்து இங்கிலாந்து மன்னர் 3ஆம் சார்லசின் புகைப்படத்தை நீக்குவது என அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

மறைந்த ராணி எலிசபெத் உருவப் படங்கள் பதித்த பணத் தாள்கள் ஆவுஸ்திரேலியாவில் புழக்கத்தில் இருந்தன.

அவரது மறைவுக்கு பின்னர், பழைய பணத்தாளில் இருந்த ராணி உருவப் படத்திற்கு பதிலாக, இங்கிலாந்து மன்னராக பதவியேற்ற 3ஆம் சார்லஸின் படங்களை இடம்பெற செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டன.

இந்நிலையில், ஆவுஸ்திரேலியாவின் ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இனிவரும் காலங் களில் பணத்தாள்களில் 3ஆம் சார்லஸின் புகைப்படம் இடம்பெறாது எனவும், புதிய ஆவுஸ்திரேலிய டொலரானது உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட அம்சங்களை கொண் டிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## துருக்கி மற்றும் சிரியாவில் பூகம்பத்தினால் பல்லாயிரம் மக்களுக்கு மேல் பலி!

பெப்ரவரி 07, 2023

துருக்கியில் இன்று ஏற்பட்ட 7.8 ரிக்டர் அளவிலான பாரிய பூகம்பத்தினால் துருக்கி மற்றும் சிரியாவில் 1,470 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

துருக்கியின் காஸியன்டெப் நகருக்கு அருகில் 17.9 கிலோ மீற்றர் ஆழத்தில் இப்பூகம்பம் ஏற்பட்டதாக அமெரிக்க பூகோளவியல் அளவை திணைக்களம் தெரிவித்துள்ளது.

உள்ளூர் நேரப்படி இன்று அதிகாலை 4.17 மணியளவில் இப்பூகம்பம் ஏற்பட்டது. அவ்வேளையில் பெரும்பான மக்கள் உறக்கத்திலிருந்தனர்.

உயிர்தப்பிய பலர், அதிர்ச்சியுடன் வீடுகளிலிருந்து வெளியே ஓடி, பனிபடர்ந்த வீதிகளில் திரண்டிருந்தனர்.

சைப்பிரஸ் தீவு மற்றும் ஈராக்கிலும் இப்பூகம்பத்தின் அதிர் வுகள் உணரப்பட்டுள்ளன.




இமீட்புப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், இதுவரை வெளியாகிய தகவல்களின் அடிப் படையில் 4,300 இற்கும் அதிகமானோர் உயிரிழந் துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மீட்புப் பணிகளுக்கு உதவுவதற்காக நிபுணர் குழுக்கள்,



மோப்ப நாய்கள், அதி நவீன சாதனங்கள் உள்ளிட்ட பல்வேறு உதவிகளை நாடுகள் பலவும் அனுப்பி வருகின்றன.

துருக்கியில் மாத்திரம் இதுவரை 2,900 பேர் உயிரிழந்துள்ளதாக மேற்கொள்காட்டி சர்வதேச செய்திகள் வெளி ியாகியுள்ளன.

துருக்கியின் மல்தாயா மாகாணத்தில் 13 ஆம் நூற்றாண் டில் நிர்மாணிக்கப்பட்ட பிரசித்தி பெற்ற பள்ளிவாசலொன்று



பகுதியளவில் உடைந்துள்ளது. அங்கு 28 குடியிருப் புகளைக் கொண்ட 14 மாடி கட்டடமொன்றும் இடிந்து வீழ்ந்தது.

தியார்பாகிர் நகரில் இடிபாடுகளுக்குள்ளிருந்து குரல்கள் கேட்பதாகவும் சுமார் 200 பேர் இடிபாடுகளுக்குள் சிக்கி யிருக்கலாம் எனவும் மீட்புப் பணியில் ஈடுபட்ட ஒருவர் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா ஆகியன துருக்கிக்கு அனுதாபங்களைத் தெரிவித்துள்ளதுடன், உதவிகளை அனுப்புவதாக அறிவித்துள்ளன. துருக் கியின் பரம வைரியான கிறீஸும் தனது ஆதரவை தெரிவித்துள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரேனின் ஜனாதிபதி வொலோடிமிர் ஸேலேன்ஸ்கியும், துருக்கிக்கு அவசிய மான உதவிகளை வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

# சிறீலங்கா அரசின் பயங்கரவாதச் சட்ட நடவடிக்கைகள் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் அதிருப்தி!

பெப்ரவரி 07, 2023

சிறீலங்கா அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை ரத்துச் செய்வது தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக் கைகள் போதுமானதாக இல்லை என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் அரசியல் அச்சுறுத்தல்களுக்கு இந்த சட்டம் பயன்படுத்தப்படலாம் என்ற அச்சத்தையும் ஐரோப் பிய ஒன்றியம் வெளியிட்டுள்ளது.



இதனையடுத்து, இந்த விடயம் எதிர்வரும் மார்ச்சில் வெளியாகவுள்ள சிறீலங்காவிற்கான ஜிஎஸ்பி மீதான அறிக்கை எதிர்பார்க்கப்படுவதாக ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், இலங்கையில் இன்னும் சிக்கல் நிறைந்ததாக அமைந்துள்ளது.

எனினும் அவற்றை தீர்ப்பதற்கு இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என்று ஐரோப் பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் டெனிஸ் சாய்பி நேர்காணல் ஒன்றின்போது தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் நீதித்துறை மீளாய்வு மேற்கொள்ளப்படவில்லை. எனவே பல அரசியல்வாதிகள் தங்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டதாக தம்மிடம் முறையிட் டுள்ளதாகவும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்துடன் மாற்றங்கள் ஏற்படுத் தப்பட வேண்டும் என்பதில் இலங்கை மக்கள் மத்தியில் பரந்த கருத்தொருமைப்பாடு உள்ளது.

2017 ஆம் ஆண்டில் பயங்கரவாத தடை சட்டத்தை சர்வ தேச தரத்திற்கு ஏற்ப அமைக்க சிறீலங்கா அரசாங்கம் உறுதி யளித்தது.

அத்துடன் கடந்த அரசாங்கம், பயங்கரவாத தடைச்சட் டத்தை பயன்படுத்துவதற்கு நடைமுறையில் தடை விதிக்கப்பட்டிருந்த போதிலும், பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தியதாக ஐரோப்பிய ஒன்றியத்தூதுவர் தமது ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதிலாக புதிய தேசிய பாதுகாப்பு சட்டம், சர்வதேச எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அமைவதையே தாம் எதிர்பார்ப்பதாக தூதுவர் குறிப்பிட் டுள்ளார்.



இலங்கைக்கு வந்திருந்த ஐரோப்பிய ஒன்றிய நிபுணர்களும் சிறீலங்காவுக்கு ஜிஎஸ்பி பிளஸின் முக் கியத்துவத்தை உணர்ந்துள்ளதாக அவர் தெரிவித் துள்ளார்.

எவ்வாறாயினும், பயங்கரவாத தடைச் சட்டம் உட்பட இலங்கைக்கு தீர்வு காண வேண்டிய சில பிரச்சினைகள் நிலுவையில் உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை ஜிஎஸ்பி பிளஸ் பயனாளிகள் குறித்த அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் வெளியிடப்படும் என்றும், ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் மற்றும் ஐரோப்பிய பேரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# தம்பியின் உயிரை காப்பாற்றிய சிறுமிக்கு உலக சுகாதார நிறுவனத் தலைவர் பாராட்டு!

பெப்ரவரி 09, 2023

கட்டிட இடிபாடுகளில் 17 மணி நேரம் சிக்கியிருந்தும் தன் தம்பிக்கு பாதுகாப்பாக துணிச்சலுடன் இருந்த சிறுமியை உலக சுகாதார நிறுவனத் தலைவர் டெட்ரோஸ் அதோனம் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

துருக்கி மற்றும் சிரியாவில் பூகம்ப பாதிப்பால் பலி எண் ணிக்கை 15 ஆயிரத்தைக் கடந்துவிட்டது. இந்நிலையில் சிரியாவில் மீட்புப் பணிகளின் போது இடிபாடுகளுக்கு இடையே இருந்து ஒரு சிறுமியும் அவரது சகோதரரும் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

அந்த சிறுமியின் வீடியோ உலகம் முழுவதும் வைரலான நிலையில் அதனைப் பகிர்ந்த உலக சுகாதார நிறுவனத் தலைவர் டெட்ரோஸ் அதோனம் சிறுமியை வெகுவாகப் பாராட்டியுள்ளார்.





சுமார் 17 மணி நேரமாக இவர்கள் கட்டிட இடிபாடுகளில் சிக்கியிருந்தனர். அதன்பின்பு இவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். வீடியோவில் அச்சிறுமி ஏதோ பேசுகிறார். அதனைப் பகிர்ந்துள்ள டெட்ரோஸ் அதோனம், “இந்த துணிச்சலான சிறுமிக்கு எல்லையில்லா பாராட்டு” என்று பதிவிட்டுள்ளார்.

இந்த போட்டோவை ஐ.நா பிரதிநிதி முகமது சபா பகிர்ந்து “இந்த 7 வயது சிறுமி இடிபாடுகளுக்கு இடையே தன் தம்பியுடன் 17 மணி நேரம் சிக்கிக் கொண்டார்.

தம்பியின் தலையில் கையை வைத்து காப்பாற்றிய இந்த சிறுமியின் புகைப்படத்தை அதிகம் பகிருங்கள். நேர் மறையான சிந்தனைகளை ஊக்குவியுங்கள்” என்று அவர் பதிவிட்டிருந்தார்.

# பாரிஸ் நகருக்குள் நுழைந்த விவசாயிகளின் போராட்டம்!

பெப்ரவரி 09, 2023



ஐரோப்பிய ஒன்றியத்தின் மிகப்பெரிய விவசாய சக்தியில் பண்ணை உற்பத்தியை அச்சுறுத்துவதாக அவர்கள் கூறும் பூச்சிக்கொல்லி கட்டுப்பாடுகள் மற்றும் பிற சுற்றுச் சூழல் விதிமுறைகளுக்கு எதிராக பிரெஞ்சு விவசாயிகள் நூற்றுக்கணக்கான டிராக்டர்களை பாரிஸுக்கு ஓட்டிச் சென்றனர்.

சர்க்கரைவள்ளிக்கிழங்கு விவசாயிகள் தடைசெய்யப்பட்ட பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்த அனுமதிக்கும் பிரெஞ்சுக் கொள்கையை ரத்து செய்த ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து, கடந்த மாதம் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது, மேலும் பயிரிடுதல் மற்றும் சர்க்கரை ஆலை மூடல்கள் மேலும் குறைந்துவிடும் என்ற கவலையை சர்க்கரைவள்ளிக்கிழங்கு விவசாயிகளிடம் எழுப்பியது.

இந்த தொடர்ச்சியான தடைகள் மற்றும் பல துறைகளை (செர்ரிகள், ஆப்பிள்கள், சிக்கரி, உருளைக்கிழங்கு ஸ்டார்ச்) ஆதரிக்கும் அரசாங்கத்தின் செயலற்ற தன்மை விவசாய உற்பத்தியைக் கண்டிக்கிறது என்று பிரான்சின் மிகப்பெரிய பண்ணை சங்கமான குளேநுயு, சர்க்கரை வள்ளிக்கிழங்கு சங்கம் CGB மற்றும் இளம் விவசாயிகள் குழு JA ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளன.

இதேபோன்ற பூச்சிக்கொல்லி கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட பயிர்களின் இறக்குமதி பிரெஞ்சு வேலைகளை அச்சுறுத்தும் என்று அவர்கள் எச்சரித்தனர். இந்நிலையில் பூச்சிக் கொல்லி எச்சங்கள் மண் மற்றும் வனவிலங்குகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

தொழிற்சங்கங்கள் பாரிஸைச் சுற்றியுள்ள 500 டிராக் டர்கள் மற்றும் 2,000 விவசாயிகளை எதிர்ப்பில் சேர எதிர்பார்த்தன. எண்களை உறுதிப்படுத்துவது மிக விரைவில், CGB இன் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

# பெரு நாட்டில் பரவிய பறவைக்காய்ச்சலால் 55,000 பறவைகள் மற்றும் 580க்கும் மேற்பட்ட கடற்சிங்கங்கள் பலி!

பெப்ரவரி 08, 2023



பெரு நாட்டில் பரவிய பறவை காய்ச்சலால் 55 ஆயிரம் பறவைகள் மற்றும் 580-க்கும் மேற்பட்ட கடற்சிங்கங்கள் உயிரிழந்து உள்ளன.

பெரு நாட்டில் சமீப வாரங்களாக எச்5என்1 வகை பறவை காய்ச்சல் பரவி வருகிறது. இதனால், பாதுகாக்கப்பட்ட 8 கடலோர பகுதிகளில் இருந்து 55 ஆயிரம் உயிரிழந்த பறவைகள் கண்டறியப்பட்டு உள்ளன.

இதுதவிர, பாதுகாக்கப்பட்ட 7 கடல்வாழ் பகுதிகளில் இருந்து 585 கடற்சிங்கங்கள் உயிரிழந்து உள்ளதும் கண்டறியப்பட்டு உள்ளது. இதனை செர்னான்ப் என்ற இயற்கை பகுதிகளை பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்து உள்ளது.

இவற்றில் பெலிகான்கள், கடல் பறவைகள் மற்றும் பென் குவின்கள் உள்ளிட்ட பறவைகளும் உயிரிழந்து உள் ளன. இதுபற்றி ஆய்வக பரிசோதனை நடத்தியதில் கடற் சிங்கங்களில் எச்5என்1 வகை பறவை காய்ச்சல் பரவி இருப்பது உறுதி செய்யப்பட்டது.



இதன் தொடர்ச்சியாக அதிகாரிகள் உயிர்சூழல் பாதுகாப்பு ஒழுங்கு விதிமுறைகளை அறிவித்து உள்ளனர். பீச்சில் உள்ள கடற்சிங்கங்கள் மற் றும் கடல் பறவைகளுடன் செல்ல பிரா ணிகளை தொடர்பு கொள்ள விடவேண்டாம் என பொதுமக்களுக்கு பெரு நாட்டின் தேசிய வன மற்றும் வனவாழ் சேவை அமைப்பு வலியுறுத்தி உள்ளது.

2021-ம் ஆண்டில் இருந்து ஐரோப்பிய நாடுகளில் பறவை காய்ச்சல் தீவிர பாதிப் புகளை ஏற்படுத்தி வருகிறது. வட மற்றும் தென் அமெரிக்க நாடுகளிலும் பல்வேறு பரவல்கள் அறியப்பட்டன. பண்ணை பறவைகளிலும், பாலூட் டிகளிலும் பாதிப்புகள் அறியப்பட்டு உள்ளன.

இங்கிலாந்து, ஸ்பெயின் நாடுகளிலும் இந்த வைரசின் பாதிப்பு பாலூட்டிகளிடையே பரவியிருப்பது கடந்த காலங் களில் கண்டறியப்பட்டது. அமெரிக்காவிலும் பாலூட் டிகளிடம் பாதிப்பு பரவியிருந்தது.

மத்திய மற்றும் தென் அமெரிக்காவில் உள்ள புதிய நாடுகளுக்கு பரவ கூடிய ஆபத்து உள்ளது என உலக விலங்கு சுகாதார அமைப்பு வருத்தம் தெரிவித்து உள் ளதுடன், பரவலின் வேகம் மனிதர்கள் மற்றும் பாலூட் டிகளிடமும் ஏற்பட கூடும் என தெரிவித்து உள்ளது.

இதன்படி பொலிவியா, கொலம்பியா, கோஸ்டாரிகா, ஈடுவேடார், ஹோண்டுராஸ், பனாமா, பெரு மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகள் புதிதாக பாதிக்கப்பட்ட நாடுகள் ஆகும். சிலியிலும் 20 ஆண்டுகளில் முதன்முறையாக பாதிப்பு ஏற்பட்டு உள்ளதாக தெரியவந்துள்ளது.

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4





சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# சத்தியம் என்றும் சாவதில்லை அது வரலாற்றின் ஆன்மா!

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



எமது விடுதலை இயக்கத்தின் அதிகார பூர்வ வானோசையான 'புலிகளின் குரல்' இன்றுடன் தனது நான்காவது ஆண்டு சேவையை நிறைவு செய்கிறது. இரண்டாம் கட்ட தமிழீழப்போர் தொடங்கியதை அடுத்து ஆரம்பமான எமது வானோசை, யுத்தசூழலால் எழுந்த நெருக்கடிகளுக்கும் சாவல்களுக்கும் ஈடுகொடுத்து பிரமாதமான முறையில் பெருவளர்ச்சி கண்டிருக்கிறது. விடாமுயற்சியாலும் கடின உழைப்பாலும் ஈட்டப்பட்ட இந்த சாதனை பாராட்டுக்குரியது.

உன்னதமான இலட்சியப் பாதையில் முன்னேறிச் செல்லும் எமது விடுதலைப் போராட்டத்தை களங்கப்படுத்தும் நோக்குடன் பல்வேறு சக்திகள் செயற்பட்டு வருகின்றன. நீண்ட காலமாகவே, இந்த சக்திகள் எமது போராட்டத்திற்கு எதிராக, திட்டமிட்ட ஒரு பிரச்சாரயுத்தத்தை நடத்தி வருகின்றன. உண்மைகளை மறைத்து, பொய்களை திரித்து, விசமத்தனமான பிரச்சாரத்தை செய்துவருகினற்ன. மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடித்து, மக்களை குழப்பித் திசைதிருப்பி போராட்டத்தை நசுக்கிவிடும் நாசகார நோக்கில் இந்தப்பிரச்சாரப்போர் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது.

பொய்மையையே பிரதான ஆயுதமாகக்கொண்டு எமது போராட்டத்திற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட இந்தக் கருத்துப்போரை முறியடிக்க நாம் உண்மையை ஆயுதமாக ஏந்தினோம். இந்த உண்மையின் குரலாகவே 'புலிகளின் குரல்' ஒலித்துக்கொண்டிருக்கிறது.

பொய்களுக்கு ஆயுள் குறைவு, அவை வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் சென்று விடுகின்றன. ஆனால் சத்தியம் என்றும் சாவதில்லை. அது வரலாற்றின் ஆன்மாவாக என்றும் நிலைத்து நிற்கும்.

ஒரு விடுதலைப்போராட்ட சூழலில் மக்கள் தொடர்பு சாதனங்களின் பங்கு முக்கியமானது. இவை மக்களுக்கு உண்மை நிலைமையை எடுத்துச்சொல்ல வேண்டும். உண்மையான விளக்கங்களைக் கொடுக்கவேண்டும். உண்மையையும், நேர்மையையும் தார்மீகநெறியாகக் கொள்ளவேண்டும். உண்மையைத் தாங்கிவரும் கருத்துக்களே மகக்ளை கவர்ந்துகொள்கிறது. மக்களை விழிப்புணர்வு கொள்ளச்செய்கிறது.

எமது விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலையை, செய்தித்தொகுப்பாக, கருத்துத் தொகுப்பாக, கலைவடிவமாக, மகக்ளுக்கு எடுத்துக்கூறி எமது வானோசை மக்களின் நல்லெண்ணத்தைப்பெற்று வருவதைக்கான நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். 'புலிகளின் குரல்' வானோசையின் அபாரமான வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அயராது உழைத்துவரும் நிர்வாகப் பொறுப்பாளர்களுக்கும், கலைஞர்களுக்கும், ஏனையோருக்கும் எனது பாராட்டுக்கள்.

'புலிகளின் குரல்' தனது பணிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க எனது நல்லாசிகள்.

('புலிகளின் குரல்' நான்காவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு, தலைவர் ஆவ்கள் வெளியிட்ட



மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்சுமி பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6




சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com




HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD Navien
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000




PEEL TAE KWON-DO
PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do
Training School
* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
2016 READERS' CHOICE AWARDS
* Top Quality Training for Kids, Teens and Adults
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268

# நாம் அணிவகுத்துள்ளோம்!



நாம் அணிவகுத்துள்ளோம்...
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்!
நாம் அணிவகுத்துள்ளோம்
இழந்த எமது நாட்டை மீட்க!

எதிரி எமது நாட்டை
வஞ்சகமாக அபகரித்துவிட்டான்!
அதைக்கண்டு நாம் அஞ்சவில்லை!

புயலெனச் சீறி
இழந்த நாட்டை மீட்க
நாம் அணிவகுத்துள்ளோம்...
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்!

எமது படையணி கடக்க வேண்டியது
நெருப்பாறென்பது எமக்குத் தெரியும்!
ஆனால்
அதைத் தாங்கக் கூடிய
மக்கள் ஆதரவென்னும்
கவசம் எம்மிடம் உண்டு!

எதிரியின் ஆயுதமோ பலம் பொருந்தியது!
எமது
ஆத்ம பலமோ அதைவிட வலிமைவாய்ந்தது!
எதிரியின் குண்டுகள் வெடிக்கும்...
ஆனால்
எமது விடுதலை நெஞ்சங்கள்
எரிமலையென வெடிக்கும் சத்தத்தில்
அதன் சத்தம் அமுங்கிவிடும்!

நாம் அணிவகுத்துள்ளோம்...
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்!
எமது அணிவகுப்பு
எமது தமிழ்ஈழ மக்களிடையே
அணிவகுத்துச் செல்கிறது!

நாம் செல்லும் இடமெல்லாம்...
எமது எதிரிகள் அஞ்சி ஓடுகிறார்கள்!
மக்களிடம் உள்ள
பிரதேசம் சாதி
மதமென்னும் பேய்களும்
அலறி ஓடுகின்றன...

எமது படையணி விரைகிறது...
எமது தேசத்தை மீட்க!

நாம் செல்லும் இடமெல்லாம்
காடுகள் கழனிகள் ஆகின்றன!
வெட்டிப் பேச்சு வீரர்கள்
மிரண்டோடுகின்றனர்...!

உழைப்போர் முகங்களில்
உவகை தெரிகிறது.
ஏழைகள் முகங்களில்
புன்னகை உதயமாகிறது.

(தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களால் 1981–ஆம் ஆண்டில் எழுதப்பட்ட கவிதை)

# தமிழீழ விடுதலைக்கு உணர்வூட்டிய குரல் ஒன்று ஓய்ந்தது!

05.02.2023

தமிழில் மல்லிகையாய் மணம்வீசி

ஏழு சுவரங்களுக்குள் எத்தனையோ பல பாடல்களை பாடிய பாடகி வாணி ஜெயராம் அவர்கள், பல ஈழ விடுதலைப் பாடல் களைப் பாடியிருக்கிறார் என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும் என்பது தெரியவில்லை.

**காலம் கடந்தும் வாழ்வார்!**

தமிழ், தெலுங்கு, கன்னடம் உட்பட 19 மொழிகளில் பாடல்கள் பாடிய மூத்த பின்னணி பாடகி வாணி ஜெயராம் அவர்கள் சுமார் பத்தாயிரம் பாடல்களை பலமொழிகளில் பாடியிருக்கும் அந்தக் குரலிசைக் கலைஞர் காலமானாலும் காலம் கடந்தும் வாழ் வார்.

பாடும் பறவைகள் வாருங்கள்...புலி வீரன் திலீபனை பாடுங்கள்...என்று தியாக தீபத்தின் தியாகத்தை உணர்வோடு பாடிய இசைக்குயில் வாணி ஜெயராம் உயிர் பிரிந்ததாலும் ஓயாத அந்த இசைக் குயில் எப்போதும் மீண்டும் மீண்டுமாய் எங்கோ ஒரு மூலையில் இசைத்துக் கொண்டே இருக்கும்.

“வீசும் காற்றே தூது செல்லு தமிழ்.

நாட்டில் எழுந்தொரு செய்தி சொல்லு...” மேகங்களே இங்கு வாருங்கள்... எனப்பல எழுச்சி பாடல்களை பாடிய தென்னிந்திய பிரபல மூத்த பாடகி வாணி ஜெயராம், இந்திய இராணுவ ஆக் கிரமிப்புக் காலப் பகுதியில் இருந்து, எமது தாயக விடுதலைப் பாடல்கள் பலவற்றை உணர்வுபூர்வமாக பாடி, விடுதலைக்கு உணர்வூட்டிய குரல் ஓய்ந்து போனமை ஈழ மக்களின் மனதை நெருடிக் கொண்டுள்ளது.

**வீசும்காற்றே தூது செல்லு...**

“ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல்... இதய சுரங்கத்துள் எத்தனை கேள்வி... காணும் மனிதருக்குள் எத்தனை சலனம்... வெறும் கற்பனை சந்தோஷத்தில் அவனது கவனம்...

ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல்...என கணீரென ஒலித்த இவரின் குரலிசை அமைதியின்றி தவிக்கும் அகங்களுக்கு என்றென்றும்.

‘நல்லூர் வீதியில் நடந்தது யாகம்..

நாலு நாள் ஆனதும் சுருண்டது தேகம்..

தியாகத்தின் எல்லையை மீறிய பிள்ளை

திலீபனை பாடிட வார்த்தைகள் இல்லை’ என வரலாற்றில் தன் பாடல்கள் மூலம் பங்களிப்பு செய்த வாணி ஜெயராம் அம்மை யாரை ஈழ மக்கள் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூருவர்.

**தாயக விடுதலைக்கு தோள் கொடுத்தவர்:**

தமிழகத்தில் பலரும் பாடத் தயங்கிய சூழலில் துணிச்சலாகக் ‘களத்தில் கேட்கும் கானங்கள்’ இறுவட்டிற்காக ‘

வீசும் காற்றே தூது செல்லு
தமிழ் நாட்டில் எழுந்தொரு சேதி சொல்லு
ஈழத்தில் நாம் படும் வேதனைகள் – அதை
எங்களின் சோதரர் காதில் சொல்லு

கத்திடக் கேட்டிடும் தூரமல்லோ – கடல்
கை வந்து தாங்கிடும் நீளமல்லோ
எத்தனை எத்தனை இங்கு நடந்திட
எங்களின் சோதரர் தூக்கமல்லோ

இங்கு குயிலினம் பாட மறந்தது
எங்கள் வயல் வெளி ஆடை இழந்தது.
இங்குள்ள பேய்களும் செய்ய மறந்ததை
உங்களின் ராணுவம் செய்து முடிக்குது..

எனும் உணர்ச்சிமிக்க பாடலைப் பாடி தாயக விடுதலைக்கு தோள் கொடுத்த வாணி ஜெயராம் அம்மையாரை ஈழ மண் ஒருபோதும் மறவாது.





**தமிழீழ விடுதலைக்கு குரல் கொடுத்த பாடகி வாணி ஜெயராம் அவர்கள் 04.02.2023 தனது 78வதுவயதில் காலமானார்.**

ஈழப் போரின் உச்சக் கட்ட காரங்களான 2007 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் எழுதிய “செண்பகமே செண்பகமே.. சிறகை விரித்து வா.. என்ற பாடலை வாணி ஜெயராம் அவர்கள் அவருடைய இனிமை யான குரலில் மிக அற்புதமாக பாடியிருக்கிறார். இசையமைப் பாளர் தேவேந்திரன் இசையமைத்த “ஈட்டி முனைகள்” என்ற இசைத் தொகுப்பில் இப்பாடல்கள் வெளியிடப்பட்டன.

கிட்டத்தட்ட இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் பாடியிருக்கிறார் வாணி ஜெயராம். எந்த மொழியில் பாடினாலும் அவரது உச்சரிப்பு துல்லியமாக இருக்கும். “எல்லா மொழிகளிலும் அவற்றினுடைய இலக்கணம் தவறாமல் உச்சரிக்கும் வல்லமை பெற்ற வாணி ஒரு ஆயுட்கால பாடகியே” - என்று கவியரசு கண்ண தாசனால் பாராட்டப்பட்டவர்.



**இசை மருந்து விருந்து:**

பேசும்போதும் மிக மென்மையாக பேசக் கூடிய அவர் தமிழ் திரைப்படங்களில் அவர் பாடிய பல பாடல்கள் பலருக்கும் மிகவும் பிடித்தமானவை. இசை என்பது ஒரு வித மருந்து. அதை தம் குரல்களால் விருந்தாக படைக்கும் இசை வைத் தியர்கள் வரிசையில் பாடகி வாணி ஜெயராம் முன்னிலையில் என்றும் நிற்கிறார் என்பதே உண்மை.

பிரபல தென்னிந்திய திரையிசைப் பாடகி, வாணி ஜெயராம் தனது 78வது வயதில் காலமாகியது பலரையும் கண்ணீரில் மூழ்க வைத்துள்ளது.

தியாக தீபம் திலீபன் அவர்களின் நினைவு சுமந்த “பாடும் பறவைகள் வாருங்கள் என்ற பாடலுடன், களத்தில் கேட்கும் கானங்கள் ஒலி நாடாவில் வீசும் காற்றே தூது செல்லு, தென்னங் கீற்றில் தென்றல் வந்து மோதும், என்னும் பாடல்கள், பாசறைப் பாடல்கள் ஒலி நாடாவில் பரணி பாடுவோம் புதியதான தோர் பரணி பாடுவோம், மேகங்கள் இங்கு வாருங்கள், வீரன் மண்ணில் புதையும் போது, போன்ற விடுதலைப் பாடல் களுடன், தலை வாரி பூச்சூடினேன், செந்தமிழ் வீரனடா சீறிடும் வேங்கையடா எங்கள்... போன்ற இன்னும் பல எழுச்சிப் பாடல்களைப் பாடி தாயக விடுதலைக்கு உயிர்க்குரல் கொடுத் தவர் வாணி ஜெயராம்

அவர்களை ஈழத்துக் கலைஞர்கள் கண்ணீர் வணக்கத்தை தெரிவித்துக் கொள்வதுடன் ஒருபோதும் மறவர்.

இசை வாணியின் இதயக்குரலால் எத்தனையோ மொழிகள், எத்தனையோ ஆயிரம் பாடல்கள் பிரசித்தி பெற்றன.

இசை வாணியின் மாயக் குரலில் மயங்கிக் கிடந்த காலங்கள் பல. வானலைகளில் தேனென ஒலித்த அந்த குரல் ஓய்ந்து போனாலும், ஈழத்துத் தெருக்கள் எங்கும் இசை வாணியின் இதயக் குரல் என்றும் ஒலித்த வண்ணமே இருக்கும்.


தமிழின அழிப்புக்கு நீதி கேட்டு ஐ.நா முன்றலில்
கவனயீர்ப்புப் போராட்டம்!
06-03-2023
திங்கள் 14:00-18:00
ஈகைப்பேரொளி முருகதாசன் திடலில்
நாம் உறுதியுடன் தொடர்ந்து போராடுவோம் எமது தாயக பூமியை எதிரியிடமிருந்து மீட்டெடுத்து சுதந்திர தமிழீழம் அமைக்கும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.
-தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்
CCTF
திரான்சி, எவ்றி, சேர்ஜி, லாச்சப்பலில் இருந்து
பேருந்துகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
காலை 06.00 மணிக்கு அனைத்து பேருந்துகளும் புறப்படும்.
மனித உரிமைகள் ஆணையகத்தின்
52 ஆவது
கூட்டத் தொடரினை முன்னிட்டு
சிறிலங்காப் பேரினவாத அரசினால்
திட்டமிட்டு நடாத்தப்படுகின்ற தமிழின அழிப்பிற்கு
அனைத்துலக சுயாதீன விசாரணை நடாத்த வேண்டியும்
தமிழீழமே தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வு
என்பதனை வலியுறுத்தியும்
ஐ.நா நோக்கிய
ஈருருளிப்பயணக் கவனயீர்ப்புப் போராட்டம்
17.02.2023 அன்று பிரித்தானியா பிரதமர் இல்லத்தின் முன்பு ஆரம்பித்து
அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றம், ஐரோப்பியப்
பாராளுமன்றம், ஊடாக 06.03.2023 அன்று
ஜெனிவா ஐக்கியநாடுகள் அவை
முன்றலை வந்தடையவுள்ளது.
ஆரம்பம்.
17.02.2023 பிரித்தானியா
17.02.23 பி.ப நெதர்லாந்து
அ.குற்றவியல் நீதிமன்றம்
20.02.2023
பெல்சியம்
ஐரோப்பிய ஒன்றியம்
26-02-2023
பிரான்சு
ஐரோப்பிய பாராளுமன்றம்
06.03.2023 ஜெனிவா
முருகதாசன் திடல்
தொடர்புகளுக்கு :
தமிழீழ மக்கள் பேரவை -பிரான்சு
06 52 72 58 67
தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு-பிரான்சு
06 62 84 66 06
மேலதிக தொடர்புகளுக்கு :
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு-பிரான்சு
01 48 22 01 75 -06 13 88 00 04


KEV
TAX
KNOWLEDGE & EXPERIENCE IS VITAL
* CORPORATE INCOME TAX
* BOOKKEEPING &
ACCOUNTING SERVICES
* PERSONAL INCOME TAXES
* QUALITY SERVICE WITH
REASONABLE FEES
* FREE YEAR-ROUND
CUSTOMER SERVICE
* CORPORATE AND SOLE
PROPRIETORSHIP BUSINESS
REGISTRATION
FREE
EFILE
SERVICE
SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE
www.kevtax.com
Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)
TEL: 416.841.1866 / FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com


AR
GROUP
Arasan
ARASAN
RAJADURAI
Real Estate & Developments
Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA

# சுடலைக்கழிவு அரசியல்!

06.02.2023

1970களில் தமிழ் இளைஞர் பேரவையில் உறுப்பினராக இருந்தவரும் தமிழரசு கட்சியோடு நெருங்கிச் செயற்பட்டவரும், பிந்நாளில் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவரும், இந்திய இலங்கை உடன்படிக்கையின் பின், இணைந்த வடக்கு கிழக்கில் முக்கிய பொறுப்பில் இருந்தவருமாகிய, ஒரு மூத்த அரசியல் செயற்பாட்டாளரின் நேரடி அனுபவம் இது… தமிழரசுக் கட்சியோடு நெருங்கிச் செயற்பட்ட காலப்பகுதியில் இளையவர்கள் அமிர்தலிங்கத்தின் வீட்டு முன் விறாந்தையில் தங்குவதுண்டாம். ஒருநாள் இரவு அவர்கள் சுவரொட்டி ஒட்டுவதற்காக போகும்பொழுது அவர்களோடு சேர்ந்து அமிர்தலிங்கத்தின் மகன் ஒருவரும் சென்றிருக்கிறார். இரவு முழுதும் மகனைத் தேடிக் காணாத அமிர்தலிங்கம் அடுத்த நாள் காலை இந்த இளைஞர்களோடு அவரைக் கண்டபொழுது பின்வரும் தொனிப்படப் பேசியிருக்கிறார்… “நீயும் படிக்காமல் இவங்களப்போல காவாலியாத் திரியப் போறியா?”



1970களில் அமிர்தலிங்கம் எந்த நோக்கு நிலையில் இருந்து அவ்வாறு கூறினாரோ, அதே நோக்கு நிலையில் இருந்துதான் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளின் பின் சுமந்திரனும் கதைக்கிறாரா? “20 வருடங்களாகக் கூட இருந்தவர்களை நல் வழிப்படுத்த எடுத்த முயற்சியிலும் நாம் தோல்வி அடைந்து விட்டோம்” இவ்வாறு சுமந்திரன் அண்மையில் சாவகச்சேரியில் வைத்துக் கூறியுள்ளார். முன்பு பங்காளிகளாக இருந்த கட்சிகளை நோக்கித்தான் அவர் அவ்வாறு கூறியுள்ளார். அவர்களை நல்வழிப்படுத்த முற்பட்டோம் என்று கூறுகிறார். ஆயின் அவர்கள் திருத்தப்பட வேண்டிய குற்றவாளிகள் என்று பொருள். ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை குற்றவாளிகள் அல்லது திருத்தப்பட வேண்டியவர்கள் என்று அவர் கருதுகிறாரா? இரண்டு தசாப்தங்களாக ஒன்றாகக் குடும்பம் நடத்திவிட்டு இப்பொழுது இனித் திருந்த மாட்டார்கள் என்று கூறுகிறாரா?

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நல்வழிப்படுத்துவது என்பது ஏறக்குறைய அரசாங்கம் கூறுவதுபோல புனர்வாழ்வழிப்பது என்ற பொருளில்தான். ஒரு ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அவ்வாறு கூறத்தக்க மனோநிலை எங்கிருந்து வருகிறது? நாங்கள் தூய மிதவாத கட்சி. ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடாதவர்கள். எமது கைகளில் இரத்தம் இல்லை. கொலைப் பழி இல்லை. நாங்கள் படித்தவர்ள் நாங்கள் எப்பொழுதும் நல்வழியில்தான் செல்கிறோம்… என்று நம்பும் ஒரு மிதவாத பாரம்பரியத்தில் இருந்தா அவ்வாறு கூறப்படுகிறது?

ஆனால் தமிழரசுக் கட்சி அப்படி கூறமுடியாது. ஏனெனில் இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்ட அரசியல் செயற்பாட்டாளரும் உட்பட ஆயிரக்கணக்கான இளவயதினரை ஆயுதப் போராட்டத்தை நோக்கித் தூண்டியதே தமிழ் மிதவாதிகள்தான். குறிப்பாக தமிழரசு கட்சியானது தேர்தல்களில் தோற்கும் பொழுது தீவிர தேசிய நிலைப்பாட்டை கையில் எடுக்கும். (இப்பொழுது, பேச்சுவார்த்தை மேசையில் தீவிரமான நிலைப்பாட்டை எடுப்பது போல). அப்பொழுது அவர்கள் பேசும் வீர வசனங்களில் மயங்கி இளையோர் அவர்கள் பின் செல்வார்கள். அந்த இளையோரை தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராகத் திருப்பி அவர்களைத் தண்டிக்குமாறு தூண்டியது தமிழ் மிதவாதிகள்தான். மேடைகளில் அவர்கள் செய்த முழக்கங்களை கலாநிதி சிதம்பரநாதன் “வார்த்தை வன்முறை - வேர்பல் வயலன்ஸ்” என்று வர்ணிப்பார். இவ்வாறு தமிழ் மிதவாதிகளால் தூண்டப்பட்டு போசிக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்பட்டதே தமிழ் ஆயுதப் போராட்டம் ஆகும். எனவே தமிழரசுக் கட்சி இதில் தனக்கு சம்பந்தமில்லை என்று கூறமுடியாது. தனது கையில் இரத்தம் இல்லை என்றும் கூறமுடியாது.

தமிழரசு கட்சியின் தேர்தல் மேடைகளில் இளையோர் உணர்ச்சிவசப்பட்டு விரலை வெட்டி தலைவர்களின் நெற்றியில் இரத்தத் திலகம் வைத்தார்கள். அவ்வாறு இரத்தத்தால் பொட்டு வைத்த ஒருவர் பின்னாளில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் புலனாய்வுத்துறை பொறுப்பாளராக வந்தார். அவருக்கு இயக்க பெயரும் பொட்டு என்று வைக்கப்பட்டது. இப்படியாக இளைஞர்களை இரத்தம் சிந்துமாறு ஊக்குவித்த ஒரு கட்சி இப்பொழுது தன்னை ஒரு தூய மிதவாதக் கட்சியாக கூறிக்கொள்ள முடியாது.



ஏன் அதிகம் போவான்? தமிழரசுக் கட்சியின் தலைவர் அமிர்த லிங்கத்தின் மகன் இந்தியாவில் ஒரு இயக்கத்தைத் தொடங்கிய பொழுது அதை அமிர்த லிங்கம் தடுக்கவில்லை.

இவ்வாறு தமது இயலாமை, பொய்மை, போர்க்குணமின்மை என்பவற்றிற்கு எதிராகத் திரண்டு வந்த இளையோரின் கோபத் தைத் திசைதிருப்பி ஆயுதப் போராட்டத்தை நோக்கி ஊக்கிவித் ததன்மூலம் தமிழ்த் தலைமைகள் தந்திரமாக போராட்ட பொறுப்பை இளைய தலைமுறையின் தலையில் சுமத்தின. ஆயுதப் போராட்டம் படிப்படியாக அரங்கில் முன்னேறத் தொடங் கிய பொழுது அதன் தர்க்கபூர்வ விளைவாக தமிழ் மிதவாதிகள் பின்னரங்கிற்கு தள்ளப்பட்டார்கள். ஒரு கட்டத்தில் ஆயுதப் போராட்டம் மிதவாதிகளுக்கு எதிராகவும் திரும்பியது. அதாவது ஆயுதப் போராட்டத்தால் தண்டிக்கப்படுவோரின் பட்டியலில் தமிழ் மிதவாதிகளும் இருந்தார்கள் என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

எனினும் அதே ஆயுதப் போராட்டம் அதன் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு பின் ஒரு பண்புருமாற்றத்துக்கு தயாராகியது அதன் விளைவுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. கூட்டமைப்பு எனப்படுவதே 2009க்கு முந்திய ஒரு பண்புருமாற்றத்தின் - Trasformation - விளைவுதான். நவீன தமிழ் அரசியலில் தோன்றிய சாம்பல் பண்பு அதிகமுடைய (Grey) ஒரு கட்டமைப்பு அது. அப்பண்புருமாற்றத்தை 2009 க்குப் பின் அடுத்த கட்டக் கூர்ப்புக்கு எடுத்துச் செல்ல சம்பந்தர் தவறிவிட்டார். வரலாறு அவருக்கு நிர்ணயகரமான, உன்னதமான ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியது. ஆனால் வரலாறு அவருக்கு வழங்கிய பொறுப்பை அவர் பொருத்தமான விதத்தில் நிறைவேற்றவில்லை. ஒரு பண்புருமாற்ற காலகட்டத்தை அவர் வீணடித்து விட்டார். ஒரு பண்புருமாற்றத்துக்குத் தலைமைதாங்க அவரால் முடியவில்லை. அதற்கு அவசியமான அரசியல் உள்ளடக்கமும் அவரிடமில்லை.

தமிழ் மக்கள் ஓர் ஆயுதப் போராட்டத்தை கடந்து வந்த மக்கள். ஆயுதப் போராட்டம் என்றாலே எல்லாருடைய கைகளிலும் இரத்தம் இருக்கும். இதில் எல்லாருக்கும் ஏதோ ஒரு விகித மளவுக்குக் கூட்டுப் பொறுப்பு உண்டு. தமிழ் மக்கள் தங்களுடைய இறந்த காலத்தைக் கிண்டத் தொடங்கினால் பிணமும் நிணமும் எலும்புக்கூடுகளுந்தான் வெளியேவரும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை இறந்த காலத்தை கிண்டுவது என்பது அதன் பெரும்பாலான அர்த்தத்தில் புதைமேடுகளைக் கிண்டுவதுதான். அப்படிக் கிண்டத் தொடங்கினால், ஒருவர் மற்றவரைக் குற்றவாளியாக்குவதிலேயே தேசம் பல துண்டுகளாக சிதறிப் போய்விடும்.

ஓர் ஆயுத மோதலுக்கு பின்னரான அரசியல் என்ற அடிப்படையில், தமிழ் மக்கள் இரண்டு தளங்களில் தமது அரசியலை முன்னெடுக்க வேண்டியிருக்கிறது. ஒன்று நீதிக்கான போராட்டம். இரண்டு, அந்தப் போராட்டத்துக்காக தேசத் திரட்சியை ஆகக்கூடியபட்சம் உடையவிடாமல் பாதுகாப்பது. அவ்வாறு தேசத்திரட்சியை பலமான நிலையில் பேணுவதென்றால், அதற்கு தமிழ் அரசியலில் பண்புருமாற்றம் அவசியம். அதாவது வெளி நோக்கிய நீதிக்கான போராட்டம் உள்நோக்கிய பண்புருமாற்றம். அதற்கு பரந்த மனம் கொண்ட பெருந்தலைவர்கள் வர வேண்டும்.

ஆனால் சம்பந்தர் அவ்வாறான ஒரு பெருந் தலைவரல்ல. தமிழ் அரசியலில் முன்னெப்பொழுதும் தோன்றியிராத ஒரு சாம்பல் பண்புமிக்க கூட்டுக்கு சுமார் 20 வருடங்கள் அவர் தலைமை தாங்கினார். தமிழ் மிதவாத அரசியலிலேயே அதிகளவு ஆசனங்களை (22) வென்ற அக்கூட்டு படிப்படியாகச் சிதைந்து போய்விட்டது. அதற்கு அவரும் பொறுப்பு. அவர் தலைமை தாங்கிய ஒரு கூட்டுக் கலைந்தபொழுது, அதன் தலைவராக, அதைக்குறித்து அவர் உத்தியோகபூர்வமாக எதையும் சொல்லவில்லை. அல்லது சொல்ல முடியவில்லை. கூட்டமைப்பின் சிதைவு என்பது சம்பந்தருடைய தலைமைத்துவத்தின் தோல்வியுந்தான். தமிழ் பண்புருமாற்ற அரசியலின் தோல்வியுந்தான். அது தமிழரசுக் கட்சியின் தோல்வியுமா என்பதை இனிவருங்காலமே தீர்மானிக்கும்.

கடந்த சில கிழமைகளுக்குள் கூட்டமைப்பு மட்டும் சிதையவில்லை தமிழரசு கட்சியும் இறுக்கமான ஒரு கட்சியாக உள்ளதா என்ற கேட்குமளவுக்கு நிலைமைகள் காணப்படுகின்றன. கடந்த கிழமை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும்போது மார்ட்டின் வீதியில், கட்சித் தலைமையகத்தில் மூத்த தலைவர்கள் காத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். ஆனால் வேட்பு மனுக்கள் சுமந்திரனின் அணியைச் சேர்ந்த ஒருவருடைய அலுவலகத்தில் தயாரிக்கப்பட்டு நேரடியாக கச்சேரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக குற்றஞ் சாட்டப்படுகிறது. அதாவது கட்சித் தலைமையின் கட்டுப்பாட்டுக்குள் கட்சி இல்லை என்று பொருள். அது மட்டுமல்ல, கிளிநொச்சியில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பொழுது, சுமந்திரனுக்கு விசுவாசமான அணியைச் சேர்ந்தவர்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் சுயேச்சைக் குழுவாக போட்டியிடுகிறார்கள். அவர்களில் சிலர் சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியில் இணைந்து விட்டார்கள். சிறீதரனின் அன்ரன் பாலசிங்கம் கட்சியை எங்கே கொண்டு போகிறார்?

பிரதேசசபைத் தவிசாளரின் வீட்டின் முன் போடப்பட்ட சுடலைக்கு கழிவு

கடந்த திங்கட்கிழமை கரைச்சி பிரதேச சபையின் தவிசாளரின் வீட்டுக்கு முன் சுடலைக் கழிவுகள் ஒரு மூட்டையாகக் கட்டிப் போடப்பட்டுள்ளன என்பதனை அவர் முகநூலில் பதிவேற்றியுள்ளார். அதை யார் செய்தது என்பது நிரூபிக்கப்படவில்லை. எனினும் முகநூலில் பிரதேச சபை தவிசாளர் எழுதிய குறிப்பில், சுயேட்சைக் குழுவின் மீதே குற்றஞ் சாட்டப்படுகிறது. ஒரே கட்சிக்குள் ஒரே தேர்தல் தொகுதிக்குள் ஏற்பட்ட மோதல்கள் சுடலைக் கழிவுகளை வீட்டின் முன் போடும் அருவருப்பான ஒரு வளர்ச்சிக்கு வந்து விட்டனவா? இருபது வருடங்களாக ஒன்றாகக் குடும்பம் நடத்திவிட்டு இப்பொழுது முன்னாள் பங்காளிகளை ஒட்டுக் குழுக்கள். தூள் கடத்திகள், தலையாட்டிகள் என்று அழைக்கலாமென்றால், நாளை, கட்சியை உடைத்துக் கொண்டு வெளியேறுபவர்களுக்கு என்னென்ன பட்டங்களைச் சூட்டப் போகிறார்கள்?

நன்றி: நிலாந்தன்




# சுண்டிக்குளத்தில் அதிரடித் தாக்குதல் 20.10.1996

20 ஒக்டோபார் 1996, அதிகாலை வேளையில் சுண்டிக்குளப் பகுதியும் அதனையொட்டிய கடற்பிரதேசமும் அமைதியாகக் காணப்படுகின்றன. ஆனால் அவ்வமைதியிலும் அடுத்து நடக்கப் போவதை எதிர்பார்த்தது போல ஒருவித திகில் காணப் படுகின்றது. சமுத்திர அலைகள் கரையோடு மோதி வெண் ணிற நுரையை உருவாக்கி அதை அழித்து விளையாட, தூரத்தே இயந்திரங்கள் இரையும் சத்தம் கேட்கின்றது.

வானத்தில் முன்னும் பின்னும் M1-24 HIND ரக உலங்கு வானூர்திகள் பாதுகாப்பளிக்க, பிரமாண்டமான M1-17 ரக உலங்குவானூர்திகள் சுண்டிக்குளத்தை நோக்கி வந்து கொண்டிருக்க அப்பிரதேசத்தின் அமைதி கலைகின்றது. தரைப்பகுதியிலோ எவ்வித சலனமுமில்லை.

திடீரென சமுத்திரத்திலும் டோராக்கள், பீரங்கிப் படகுகள் புடை சூழ நீளமான பைபர் கிளாஸ் படகுகள் இரண்டு கரையை நோக்கி வந்து கொண்டிருக்கும் காட்சி உதயமாகின்றது.

M1-24, M1-17 களுக்கு மேலே திடீர் மிகை ஒலி யுத்த விமானங் களும், புக்காரா குண்டுவீச்சு விமானங்களும் உயரே பறந்து கீழே நடப்பவற்றைக் கண்காணிக்கின்றன.

சாதாரணமாக மிகுந்த அமைதியான பிரதேசமாகக் கருதப்படும் சுண்டிக்குளம் கணநேரத்திற்கு தென் ஆசியாவில் ஆரவார மான பகுதியாக மாற்றப்பட "ஒப்பரேசன் டிரிதர" எனப் பெயரிடப் பட்ட முப்படைக்களின் இணைந்த இராணுவ நடவடிக்கை ஒன்று அரங்கேறுகின்றது.

"சுண்டிக்குளத்தில் இயங்கி வந்த கடற்புலிகளின் "ராடர்" நிலை யத்தை அழிப்பதற்காகவே இந்நடடிவக்கை மேற்கொள்ளப் பட்டது" எனப் பின்னர் இராணுவப் பேச்சாளர் தெரிவித்த போதிலும், தாக்குதலின் பின்னணியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கடற்புலிகளின் ராடர் நிலையத்தை அழிப்பதோடல் லாமல் வேறு பல காரணங்கள் உள்ளதாகவே கருதவேண்டும்.

முல்லைத்தீவு சமரின் போதும் அதைத் தொடர்ந்த "ஒப்ரேசன் திருவிட பகர" நடவடிக்கையின் போதும் முப்படைகளிடையே (இராணுவம், கடற்படை, வான்படை) கடும் கருத்து வேற் றுமைகள் நிலவியதும், தோல்விக்கு ஒருவரை ஒருவர் சாடிக் கொண்டதும் நன்கு அறியப்பட்ட விடயம். ஆகவே முப்படை களையும் இணைத்து ஒரு வெற்றிகரமான தாக்குதலை நடத்து வதற்கு இராணுவத்தின் தலைமைப்பீடம் நிர்ப்பந்திக்கப்பட்டது. இதைத் தவிர கடல், தரை, வான் கொமாண்டோக்களையும் முதன் முறையாக ஒன்றிணைத்து தாக்குதல் நடாத்தவும், இது வெற்றியளிக்கும் பட்சத்தில் இதேபோல் தொடர்ச்சியான பல ஒன்றிணைந்த தாக்குதல்களை நடாத்தவும் திட்டமிடப்பட்டது. இத்தாக்குதலுக்காகன நேரடி தலைமைப் பொறுப்பை கடற்படை தளபதிகளில் ஒருவரான வைஸ் அட்மிரல் தசநாயக்க ஏற்க நடவடிக்கையின் மேற்பார்வையை அப்போதைய வடக்கு கிழக்கு அனைத்து நடவடிக்கைக்குப் பொறுப்பாளரான (OOC) மேஜர் ஜெனரல் சிறீலால் வீரசூரிய பொறுப்பேற்கின்றார். இவர்களைத் தவிர முப்படையைச் சேர்ந்த பல முன்னணித் தளபதிகளின் நேரடி கண்காணிப்பில் நடத்தப்பட்டதாக இந் நடவடிக்கை சிறப்புப் பெறுகின்றது.



முப்படைகளும் பங்கேற்ற ஒரு தாக்குதலுக்கு கடற்படைத் தளபதி ஒருவர் தலைமை தாங்கியது பலருக்கு வியப்பைத் தரும். ஆனால், தாக்குதலில் முக்கிய பங்கு வகித்த கடற்படை கொமாண்டோக்கள் (SBS – Special Boat Squadran) பற்றி ஆராயும் பட்சத்தில் வியப்பு மறைந்துவிடும். SBS ஒரு பெருமை மிகுந்த கடற்படைப் பிரிவாகும். மேலும் சில கடற்படைத் தளபதிகளின் தீவிர முயற்சியினாலேயே அமெரிக்காவின் கடற் கொமாண்டோ பிரிவான SEALS, பிரித்தானியாவின் கடற் கொமாண்டோ பிரிவான SBS என்பவற்றை நினைவில் வைத்து உருவாக்கப்பட்டதாகும். கடற்படையின் அதிசிறந்த வீரர்கள் இதில் சேர்க்கப்பட்டு SEALS. SBS (UK) பயிற்சி முறைகளைத் தழுவிய ஒரு பயிற்சியே இவர்களுக்கு வழுங்கப் பட்டதும், இது தவிர மேற்குலக நாடகளினாலேயே "நவீன ஆயுதங்கள்" எனக் கருதப்படும் ஆயுதங்களே இவர்வளுக்கு வழுங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.




SBS உருவாக்கப்பட்டதின் பின் மிகப் பெரிய அளவில், மற்றைய கொமாண்டோக்களுடன் இணைந்து நடத்திய முதலாவது தாக்குதல் "ஒப்பரேசன் டிரிதர" எனவே இந்நடவடிக்கைக்கு கடற்படைத் தளபதி ஒருவர் தலைமை தாங்கியத்தில் வியப் பேதுமில்லை. மேலும் SBS-இன் செயல் திறனை அரசிற்கும், இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் காட்டுமுகமாகவும் இத்தாக் குதல் நடாத்தப்பட்டதாக கூறலாம். ஏனெனில் மிகுந்த செலவில் உருவாக்கப்பட்ட SBS-இன் செயற்திறன், அதை உருவாக் குவதற்காக மிகுந்த பிராயச்சித்தம் எடுத்த அரசிற்கு காட்டியே ஆகவேண்டும் என்றொரு நிலைமை இருந்ததாகவும் கூறலாம்.

ஆகையால் "ஒப்பரேசன் டிரிதர" நுனுக்கமாக திட்டமிடப்பட்ட ஒரு தாக்குதல் நடவடிக்கை என்றே கூறவேண்டும். அத்துடன் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த கடற்புலிகளின் ராடர் நிலை யத்தை இலக்காகத் தேர்ந்தெடுத்ததிலும் வயப்படைய ஏது மில்லை. இதைவிட தாக்குதலை வெற்றிகரமாக நடத்துவதற் காக பல வாரங்கள் உளவறிய செலவிடப்பட்டன. இதன்போது குறிப்பாக கடற்புலிகளின் "ராடர்" நிலையத்தை அவதானிக்க அதிநவீன கருவிகள் பயன்படுத்தப்பட்டன.

இப்போது கரையை நோக்கி டோராக்கள், பீரங்கிப் படகுகள் புடைசூழ, கடற்கொமாண்டோக்களை (SBS) ஏற்றியபடி, 13 மீட்டர் நீளமான இரு பைபர் கிளாஸ் படகுகளும் எச்சரிக் கையோடு கரையை நோக்கிச் செல்கின்றன. இவ்வகையை நேர்ந்த படகுகள் (Water Jet) பாரம் குறைந்தவை. ஆனால் மிகுந்த வேகத்தில் செல்லக்கூடியவை. ஆகையால் அதிர்ச்சித் தாக்குதல்களுக்கு பல்வேறு நாட்டு கொமாண்டோ பிரிவினரால் பரவலாக பயன்படுத்தப்படுபவை.

கரையை அடைந்து கடற்புலிகள் மேல் அதிர்ச்சித் தாக்குதல் நடத்தவந்த கடற் கொமாண்டோக்கள் கரையில் இருந்து சில மீட்டர்கள் தூரத்தில் வைத்து, நன்கு உருமறைப்புச் செய்த கடற்புலிகளினால் தாக்கப்பட்டு அதிர்ச்சியடைகின்றார்கள். பைபர் கிளாஸ் படகொன்று தீப்பற்றி மூழ்கின்றது. கடற் கொமாண்டோக்களுக்கு தலைமை தாங்கி வந்த அதிகாரி குண்டடி பட்டு மரணமடைய, கடல் சிவக்கின்றது. மற்றைய பைபர் கிளாஸ் படகு ரொக்கட் தாக்குதலுக்கு இலக்காகி பயன்படுத்த முடியாத அளவிற்கு சேதடைகின்றது.

இதேவேளை MI-24 உலங்கு வானூர்திகள் ஒருமுகப்படுத் தப்பட்ட ரொக்கட் தாக்குதல்களை சுண்டிக்குளம் மத்திய பிர தேசத்தில் மேற்கொள்ளுகின்றன. 57 மி.மீற்றர் ரொக்கட் தாக்குதலினால் மரங்கள் முறிந்து விழுகின்றன. தரையில் ஏற்படும் சிறு அசைவுக்கும் ரொக்கட்டுக்களும் 50 கலிபர் ரவைகளும் அனுப்பப்படுகின்றன. MI-24-களின் அகோர தாக்குதலுக்கிடையே தரையிறங்கும் MI-17 உலங்குவானூர் திகள் கனரக ஆயுதங்களை தாங்கிய கொமாண்டோக்களை தரையிறக்குகின்றன.

சுண்டிக்குளத்தை அண்டிய பிரதேசங்கள் "கிபீர்" யுத்த விமானங்களாலும், MI-24 உலங்குவானூர்திகளாலும் தாக்கப் படுகின்றன.

"வெளியில் இருந்து புலிகள் உதவிக்கு வருவதை தடுப்பதற்காக" என வான்படையினர் நியாயம் கற்பிக்க மக்களது வீடுகள், பொது இடங்கள் என்பன தாக்கப்படுகின்றன.

தரையிறக்கப்பட்ட இராணுவ கொமாண்டோக்கள் கடற் புலிகளின் தந்திரமான தாக்குதலுக்குள்ளாகி பின்வாங்க ஆரம்பிக்கின்றனர். அவர்களின் பயணத்திற்கு பயன்படுத்தப் பட்ட MI-17 உலங்குவானூர்திகள் கடற்புலிகளின் விமான எதிர்ப்பு படையணியால் சேதத்துக்குள்ளாக்கப்படுகின்றன.

கடலிலோ SBS கொமாண்டோக்கள் தம்மில் பலரை பறி கொடுத்து, காயமடைந்தவர்களைத் தூக்கியபடி பின்வாங்குகின் றார்கள். இதனைத் தொடர்ந்து சுண்டிக்குளத்திலும், அதனை அண்டிய பிரதேசங்களிலும் "கிபீர்", MI-24, "புக்காரா" தாக் குதல்களால் பல வீடுகள் சேதமடைய, பலர் காயமடைகின் றார்கள். காயமடைந்தவர்களை ஏற்றிச் சென்ற வாகனங்கள் கூட MI-24 களினால் தாக்கப்படுகின்றன.

பிற்பகல் அளவில் சண்டை முடிந்தநிலையில் சுண்டிக்குளம் மீண்டும் தனது அமைதி நிலைக்கு திரும்புகின்றது.

இத்தாக்குதலில் SBS அணியினருக்கு தலைமை ஏற்று வந்த அதிகாரி உட்பட 12 SBS-இனர் கொல்லப்பட, 9 பேர் காயமடை கின்றனர். இராணுவக் கொமாண்டோக்கள் காயமடை கின்றனர். இரண்டு 13 மீட்டர் நீளமான பைபர் கிளாஸ் அதிவேகப் படகுகள் முற்றாக சேதத்திற்குள்ளாக்கப்பட, 3 MI-17 மற்றும் 1 MI-24 என்பனவும் சேதமடைகின்றன.

இத் தாக்குதல்களின் போது புலிகள் தரப்பில் மூவர் வீரச்சாவு அடைகின்றார்கள். மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டு பலர் காயம அடைந்தார்கள். - வோன் நாடோடி.


AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install used &
new Walk in Cooler, Walk in Freezer
Kapil: 647.515.8643
kapil.afr@gmail.com


New
RANGANAS
JEWELRY
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
NEW RANGANAS JEWEL HOUSE
SINCE 1996
கனடா வரலாற்றில்
எங்கும் கண்டிடாத
சேவை
சிங்கப்பூர், டுபாய் நகைகள்
மிகவும் மலிவான விலையில்
Singapore, Dubai Jewellery
for Lowest Price
1%
முதல் தங்க
நகை
அடைகு
சேவை
Markham & Steeles
(Yellow Building)
திருமணத்துக்கான தாலிக்கொடி
குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ள கனடாவில்
நம்பிக்கை நாணயம் கைராசி
ஒரே இடம் நியூ ரங்கனாஸ்
Tel: 647.702.2159
647.947.2864
New
RANGANAS
JEWELLERY
647-947-2864
OPEN
6055 Steeles Ave., E. Unit C102, Scarborough ON M1X 0A7
www.newranganasjewelhouse.com kprranga@hotmail.com


MORTGAGE
Residential/Commercial/Industrial
& Investment Properies
SUBRA
MORTGAGES INC.
1st, 2nd & 3rd Mortgages
Purchase Refinance
Renewal Switches
Equity Line of Credit
Pre-Approvals
Self-Employed
Multi Rental Properties
New Immigrants
Mortgage In
Any Situations
LOAN
LINE OF
CREDIT
MORTGAGE
ALLIANCE
Independently Owned & Operated
Lic. No: M15001465, Brokerage No: 10530
Corp Off: 2005 Sheppard Ave E, Suite 200
North York, ON M2J 5B4
NESAN
416-908-5656
www.subra.com or www.nesan.ca
email:mortgage@subram.com
WE
DEAL
WITH
ALL
BANKS
Office: 1585 Markham Rd, Unit 406, Scarborough ON M1B 2W1
Off: 416-660-5656/Fax: 647-351-3099/ Toll: 1-844-878-2721




# உடும்பன்குளம் படுகொலை 19.02.1986

ஒவ்வொரு வருடமும் மாசி மாதம் மக்கள் விவசாய நிலங்களில் அறுவடை செய்யும் காலமாகும். உடும்பன் குளத்தில் தங்களது வயல்களில் நூற்றுக்கணக்கான குடம்பங்கள் கொட்டகை அமைத்து வயல் வேலைகள் முடியுமட்டும் அங்கேயே தங்கியிருந்து தமது அறுவடையினை முடித்துகொண்டு நெல் மூட்டைகளுடனேயே திரும்புவது வழக்க மாகும். இவ்வாறே 1986ஆம் ஆண்டு மாசி மாதமும் வயல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களது பிள்ளைகளுடன் தங்கி யிருந்து வயலில் அறுவடை செய்து கொண் டிருந்தார்கள். 1986.02.19 அன்று காலை 6.30 மணியளவில் கொண்டைவெட்டுவான் இராணுவ முகாமிலிருந்து கவச வாகனங் களில் வந்த இராணுவத்தினரால் உடும்பன் குள வயல்களில் அறுவடை செய்து கொண் டிருந்தவர்களும், அங்கு தங்கியிருந்தவர் களும் சுற்றி வளைக்கப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் இராணுவத்தினராற் கைது செய்யப்பட்டு கைகள், கண்கள் கட்டப்பட்டார் கள். இவ்வாறு கைது செய்தவர்களில் பெண்கள் இராணுவத்தினராற் பாலியல் வல்லுறவிற்குட்படுத் தப்பட்டார்கள். ஆண் களின் ஆண் உறுப்பு வயலில் நெல் வெட்டு வதற்கு பயன்படுத்தப்படும் அரிவாளினால் வெட்டப்பட்டது. இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அனைவரும் மிகவும் மோசமான முறையில் துன்புறுத்தப்பட்டார்கள் பலர் இராணுவத் தினரின் துன்புறுத்தலினாலேயே தமது உயிரினை இழந்தார்கள். பின்னர் எஞ்சியிருந்தவர்களைச் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்ததுடன், அவர்களின் உட லினை அறுவடை செய்யப்பட்ட நெற்சூட்டினுள் ஒன்றாகப் போட்டு எரித்தார்கள். இவ்வாறு 1986.02.19 அன்று காலை இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வயலில் வேலை செய்துகாண்டிருந்தவர்கள், வாடியில் தங்கியிருந்தவர்கள் என நூறறு முப்பத்து மூன்று பேரிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந் தார்கள். இவர்களில் ஒரு சிலர் பலத்த காயங் களுடன் உயிர் தப்பியிருந்தார்கள். இரண்டு நாட்கள் கழித்து 21.02.1986 அன்று மட்டக் களப்பு பிரசைகள் குழு வணபிதா சந்திரா பெர்ணான்டோ, நாளேட்டாளர்கள் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று




அரைகுறையாக எரிந்த நிலையிலிருந்த தொண்ணூற்றெட்டுப் பேரினது உடல்களை எடுத்து அடக்கம் செய்தார்கள். உடும்பன் குளத்தில் வயல்களில் அறுவடை செய்து கொண்டிருந்தவர்கள் மீதான தாக்குதலை நடத்திய இராணுவத்தினருக்குப் பொறுப்பாக லெப்டினனட் சந்திரபால தலைமை தாங்கினார். இச்சம்பவத்தில் இராணுவத்தினருடன் இணைந்து முசுலிம் குழுக்களும் தாக்குதல் களை நடத்தியிருந்தார்கள்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. இராசையா தவேந்திரன் 18
02. இராமசாமி கந்தையா 48
03. ந.கோபாலகிருஸ்ணன் -
04. ந.விநாயகமூர்த்தி –
05. க.பாக்கியராசா –
06. கதிரேசபிள்ளை வைரமுத்து –
07. குமரவேல் நாகராசா 27
08. கணேசமூஉத்தி பேரின்பன் 28
09. கணேசபிள்ளை மோகனராசா 22
10. கணபதி வடிவேல் 27
11. பத்மநாதன் –
12. மைலன் தியாகராசா 18
13. த.உமன் 22
14. தாசப்பு செபமாலை –
15. தாசப்பு செல்லையா –
16. துரை இராமலிங்கம் -
17. தம்பிப்பிள்ளை குமாரவேல் -
18. மயில்வாகனம் தியாகராசா. 13
19. மார்க்கண்டு ரவீந்திரன் -
20. முத்துப்போடி சுமனாவதி –
21. முத்துசாமி முத்துலிங்கம் -
22. மசன்னா ஜெயராஜ் -
23. ஆ.நல்லதம்பி –
24. ஆ.சோமசுந்தரம் -
25. பொன்னன் இராசதுரை –
26. பொன்னம்பலம் யோகராசா 18
27. சோமசுந்தரம் கருணாநிதி 21
28. வெங்கிட்டன் குழந்தை –
29. ஞானமுத்து புவனேந்திரன் -
30. சுந்தரம் சின்னவன் 20
31. சீனித்தம்பி –
32. சீனித்தம்பி தவநாகன் 30
33. சீனித்தம்பி அருள்செல்வன் 18
34. சில்வஸ்ரர் இன்னாச்சி 32
35. சுவாமி டேவிட் 29
36. வயிரமுத்து சுந்தரலிங்கம் -
37. வர்ணகுலசிங்கம் புண்ணியமூர்த்தி 21
38. விஸ்வகேது இராசா 23
39. ரங்கன் போல் -

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விரபங்களையும் பெறமுடியவில்லை.

# வங்காலை படுகொலை 17.02.1991

வங்காலைக் கிராமமானது, மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேசசெயலர் பிரிவில் வடக்குத் திசையாக கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது. 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் மன்னார்த்தீவின் நுழைவாயிலிலுள்ள பாரிய சங்கிலிப் பாலமும் தொடருந்துப் பாலமும் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுப் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை உண்டா கியதன் காரணமாக தாழ்வுப்பாட்டுக் கடற்கரையிலிருந்து கடல் வழியாக கற்பிட்டியூடாகக் கொழும்புக்கு மக்கள் பிரயாணம் செய்தனர். இந்நிலையில் வங்காலையைச் சேர்ந்த மக்கள் இராணுவத்தின் கெடுபிடிகளினால் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர். வீடுகளிலிருந்து வெளியேறாதவர்களை இராணுவத்தினர் பலவந்தமாக வெளியேற்றிவிட்டு வீடு களிலுள்ள பெறுமதி வாய்ந்த பொருட்கள் அனைத்தையும் சூறையாடினார்கள். வங்காலை மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய செபமாலை அவர்களும் ஜஸ்டின் லம்பேட் என்ற வங்காலையைச் சேர்ந்த ஆசிரியரும் இன்னும் சிலரும் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்காகக் கற் பிட்டி வழியாக கொழும்பு சென்று பொருட்களை வாங்கிக் கொண்டு 16.02.1991 இல் படகில் தாழ்வுப்பாட்டுக்கு வந்து அன்றிரவு அங்கு தங்கியிருந்து மறுநாள் 17.02.1991ன்று காலை பத்து மணிக்கு துவிச்சக்கர வண்டியில் வங்காலை வழி யாக காத்தான்குளம் சென்றார்கள். இவர்கள் வங்காலைப் பாடசாலைச் சந்திக்கு வரும்போது இராணுவத்தினர் செப மாலை (அதிபர்), ஜஸ்டின் லம்பேட் (ஆசிரியர்), சூசையப்பு (ஆசிரியர்), நவரட்ணம் குருவிக்கந்தையா ஆகியோருடன் ஒரு சிறுவனையும் தடுத்து நிறுத்தி கயிற்றினால் கைகளையும் துணியினால் கண்களையும் கட்டிவிட்டு சூசையப்பு ஆசிரியரைக் கத்தியால் குத்தினார்கள். பின்னால் வந்தவர்கள் இந்த நிகழ்ச்சியை நேரிற் பார்த்துகொண்டு சென்று முருங்கன் பங்குத்தந்தையிடம் முறையிட்டனர். மறுநாளாகியும் கைது




செய்யப்பட்டவர்கள் வீடு திரும்பாததினால் உறவினர்களும் பங்குத்தந்தையும் தள்ளாடி இராணுவமுகாமிற்குச் சென்று உத்தரவுபெற்று அவர்களைத் தேடுவதற்கு வங்காலைக்கு வந்தபோது வங்காலைச் சந்தியிலிருந்து உள்ளே செல்லவிடாது இராணுவத்தினர் தடுத்தனர். அப்படியிருந்தும் உறவினர்களில் இருவர் மட்டும் சென்று, சந்திக்கு அருகிலிருந்த பூர்சியல் பீரிஸ் ஆசிரியரின் பூட்டியிருந்த வீடு திறந்திருந்ததைக் கண்டு அதனுள் சென்றபொழுது அந்த வீட்டு அறைகளெல்லாம் இரத்த வெள்ளமாகக் காணப்பட்டது. இரத்தத் தடயங்களின் வழியே சென்று பார்த்தபொழுது வீட்டின் பின்னாலிருந்த கிணற்றுக்குள் ஐந்து சடலங்களும் துண்டங்களாக்கப்பட்டுப் போடப்பட் டிருந்தது. எனினும் அப்போதைய சூழ்நிலையில் உடனடியாக சடலங்களை மீட்க முடியாதிருந்தது.

1993ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர்ந்தபோது பூர்சியன் ஆசிரியரின் வீட்டிற்குப் சென்று பார்த்தபொழுது கிணறு மட்ட மாக்கப்பட்டிருந்தது. பூர்சியன் ஆசிரியரின் வீட்டுக் கிணற்றில் முன்னர் ஐந்து சடலங்கள் போடப்பட்டிருந்தன என்பதைக் காவற்றுறையினருக்குத் தெரியப்படுத்தி, அவர்களின் உதவி யுடன் உயிரிழந்த ஐவரினதும் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன. பின்னர் ஐவரின் எலும்புக்கூடுகளும் மேலதிக பரிசோதனைகக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டன. இனறு வரை இவை தொடர்பாக எந்த மேலதிக விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. அந்தோனி கொபின்லெம்பேட் ஆசிரியர் 36
02. அந்தோனிப்பிள்ளை செபமாலை பாடசாலை அதிபர் 49
03. அப்புக்குட்டி கந்தையா கமம் 51
04. செபமாலை அந்தோனி விவசாயம் 30
05. சீமான் தற்குரூஸ் சூசையப்பு பாடசாலை உப அதிபர் 43

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# வட்டக்கச்சி அரசநெற்பண்ணை குண்டுவீச்சு - 28.02.1991

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் வட்டக்கச்சி என்னும் கிராமம் காணப்படுகிறது. இங்கு வாழ்கின்ற மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும். அத்தோடு சிலர் பகுதிநேர நன்னீர் மீன்பிடி மற்றும் கூலித்தொழிலிலும் ஈடுபட்டுள்ளார்கள். இப்பிரதேசத்தில் "அரச நெற்பண்ணை" என்னும் பெயரில் நெல்வயல்கள் காணப்பட்டன. இங்கு வேலை செய்பவர்கள் தங்கி வேலை செய்வதற்காக வட்டக்கச்சி மூன்றாம் வாய்க்காற் பகுதியில் அரச நெற்பண்ணை விடுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. இங்கு ஐந்து குடும்பத்தை சேர்ந்தவர்கள் தங்கியிருந்தனர்.

28.02.1991ன்று காலை 7.00 மணியளவில் வேலைக்குச் செல்வதற்காக விவசாயிகள் விடுதிகளில் காலை உணவு அருந்திக்கொண்டிருந்த வேளையில் விமானப்படையினரின் இரண்டு "பொம்பர்" விமானங்கள் வட்டக்கச்சிப் பிரதேசத்தைச் சுற்றிவந்து மூன்று குண்டுகளை வீசியது. இதில் ஒரு குண்டு விடுதிக்குள் வெடிக்க மற்றைய இரண்டும் வயற்பிரதேசங்களிலும் வீழ்ந்து வெடித்தன. இதில் ஒன்பது பேர் உயிரிழந்தனர். மூன்று பேர் காயமடைந்தனர். உயிரிழந்த ஒன்பது பேரில் ஆறு பேரின் உடல்கள் சிதறுண்டு உருக்குலைந்துபோக ஏனைய மூன்று பேரின் உடல்களையும் காயப்பட்ட மூவரையும் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றார்கள். இந்தச் சம்பவத்தை அடுத்து தம் உறவுகளை இழந்த நிலையில் அக்குடும்பங்கள் விடுதிகளை விட்டு வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றன. இந்தச் சம்பவத்தின் போது சம்பவ இடத்திலிருந்த்த இராமையா பரமசுந்த்தரம் அவர்க்கள் தெரிவித்ததாவது,

"நான் நெற்பண்ணையில் இருந்த வேளை 28.02.1991ன்ற பொம்மர் விமானம் வந்து குண்டு போட்டது. இந்தச் சம்பவத்தில் சம்பவ இடத்திலேயே ஒன்பது பேர் கொல்லப்பட்டார்கள். மூன்று பேர் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு போய் காப்பாற்றிவிட்டார்கள். இறந்தவர்கள் அனைவரையும் ஒரே குழியிற் போட்டு புதைத்தோம். இச்சம்பவத்தில் பண்ணையிலிருந்த கிட்டத்தட்ட நாற்பது ஆடுகள், இருபது கோழிகள் இறந்தன. அவற்றையும் மனித உடல்களுடன் ஒரே குழியிற் போட்டுப் புதைக்க வேண்டிய சூழல் இருந்தது. ஏனென்றால் திரும்பவும் புக்காரா வந்து குண்டு போடுமோ என்ற பயம் இருந்துகொண்டே இருந்தது. சம்பவம் நடந்த இடத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வந்து பார்வையிட்டுச் சென்றது. மக்களை அழிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்த இடத்தில் குண்டு போட்டதாக நான் கருதுகிறேன். ஏனென்றால் காலையில் தொழிலுக்குப் போகமுன் 7.30 மணியளவில் வந்து குண்டு போட்டால் எல்லோரும் இறப்பார்கள் என்ற திட்டம்தான். இன்று நேற்றல்ல, 1990ம் ஆண்டிலிருந்தே சிறீலங்கா இராணுவம் தமிழ் மக்களை கொலை செய்து கொண்டுதான் இருக்கிறது."

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம்

01. இராசேந்திரம் சித்திரம்மா
02. நாகமுத்து ஆறுமுகம்
03. முனியாண்டி செல்வம்
04. முருகையா சுமதி
05. முருகையா சித்திரா
06. ஆறுமுகம் இராசேந்திரன்
07. ஆறுமுகம் கமலாதேவி
08. ஆறுமுகம் விஜயலட்சுமி
09. சின்னத்தம்பி உமாதேவி

# சுண்டிக்குளம் மீனவர் படுகொலை - 18.02.1994

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவில் அடங்கியுள்ள சுண்டிக்குளம் எனும் பிரசேத்திலுள்ள ஒரு மீனவர் குடியிருப்பு தொடுவை வாய்க்கால் ஆகும். இங்கு வாழ்பவர்களது சீவனோபாயத் தொழில் மீன்பிடி ஆகும். 18.02.1994 அன்று அதிகாலை 5:15 மணியளவில் இப்பகுதி மீனவர்கள் மீன் பிடிப்பதற்காகக் கட்டு மரங்களில் கடலை நோக்கிச் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்தவேளை அங்கு வந்த கடற்படையின் "டோறாப்படகு" மீனவர்கள் மீது திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவேளை அங்கிருந்த மீனவர்கள் சிலர் தப்பிச் செல்லும் நோக்கில் கட்டுமரங்களை விட்டு கடலில் குதித்து நீந்தியவண்ணமும் மற்றவர்கள் வலைகளை அறுத்து விட்டும் கரையை நோக்கிக் கட்டுமரங்களை நகர்த்திய வண்ணமும் இருந்தனர். கடற்படையினரோ மீனவர்களை நோக்கித் தொடர்ந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் கரையோரக் குடியிருப்புக்களிலிருந்த அனைவருக்கும் தெளிவாகக் கேட்க தங்கள் உறவுகள் மீன் பிடிக்கச் சென்றதை எண்ணி ஏங்கிக் கரையை நோக்கி ஓடி வந்து அவர்கள் பார்த்தவேளை கடற்படையின் டோறாப்படகு கடற்கரையை மிகவும் அண்மித்து வந்து மீனவர்களைச் சுடுவதைக் கண்டனர். தாக்குதலுக்கு இலக்காகி மீனவர்கள் கடல் நீரில் சோர்ந்து விழுவதைக்கண்டு மக்கள் கதறியழுதனர். கடற்படையின் தாக்குதலில் பத்து மீனவர்கள் கடலில் உயிரிழந்தனர். தாக்குதல் நடந்தன்று மூன்று பேரின் உடல்களே கிடைக்கப்பெற்றன. ஏனைய ஏழு பேரது உடல்களும் மறுதினமே கரையொதுங்கியன. இந்த தாக்குதலினால் பீதியுற்ற மீனவர்கள் சிலமாதங்களாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடவில்லை. இதனால் அன்றைய காலகட்டத்தில் அப்பிரதேச மீனவர்கள் மிகவும் வறுமையான நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இயக்கோ கபிரியேல்பிள்ளை 29
02. இயக்கோப்பிள்ளை நிக்சன் 20
03. கரியோப்பிள்ளை அருள்ஜெயசீலன் 25
04. மனுவேற்ப்பிள்ளை மரியசீலன் 26
05. அந்தோனிப்பிள்ளை இயக்கோப்பிள்ளை 46
06. அமிர்தநாயகம் யோன்பொ்னான்டோ 35
07. ஆசிர்வாதம் வினஞ்சேநிதிமரிசலின் 44
08. யேசுராசா அலோசியஸ் சாந்தகுமார் 22

# கிராஞ்சி படுகொலை - 22.02.2008

**கிராஞ்சி படுகொலை – 22 பெப்பிரவரி 2008**

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேசசெயலர் பிரிவிலுள்ள கிராஞ்சி சிவபுரம் என்னும் கிராமத்தின் முருகன் கோயிலுக்கு அருகாக உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது 2008 22ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 8.15 மணியளவில் சிறீலங்கா வான்படையினரின் குண்டுவீச்சு விமானங்கள் குண்டு வீச்சுத்தாக்குதலை மேற்கொண்டன. இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு மாதக் குழந்தை, 04வயதுச் சிறுவன், அவர்களின் தாயார் மற்றும் ஆங்கில ஆசிரியர் ஒருவர் என எட்டுப் பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்படடனர். மேலும் படுகாயமடைந்த நிலையில் 12 பொதுமக்கள் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் மிகவும் ஆபத்தான நிலையிலுள்ள 07 பேர் உடனடியாக நோயாளர் காவுவண்டி மூலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். மறுநாள் பூமணி என்ற வயோதிபர் சிகிச்சை பலனளிக்காது மரணமானார்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. சசிகரன் கௌரிநாயகி, 34
02. சசிகரன் தமிழ்வேந்தன், 06மாதம்
03. சசிகரன் கஜீவன், 04
04. கதிரவேலு திருநீலகண்டன், 79
05. கிருஸ்ணசாமி சிவாநந்தி, 27
06. விஜயகுமார் விதுஜா, 21
07. இந்திரன் லலிதா
08. சுதாகரன் சுமதி, 30
09. தர்மலிங்கம் பூமணி, 68

22.02.2008 அன்று கிராஞ்சியில் காணமடைந்தவர்களின் விரபம்

1. சசிகரன் காருன்னியன் (08)
2. சிறீபதி இராஜேஸ்வரி (33)
3. சத்தியநாதன் தேவநாயகி (43)
4. சதாசிவம் கமலாதேவி (60)
5. சுதாகரன் பானுசன் (06)
6. விஜயகுமார் சிவாநந்தினி (36)
7. விஜயகுமார் டினோசன் (21)
8. அருளாநந்தம் லீலாதேவி (68)
9. அருளாநந்தம் சத்தியவரதன் (43)
10. தேவநாயகி (43)
11. தர்மலிங்கம் பூமணி (68)
12. விஜயகுமார் கிநோசன் (02)







# 13ஆவது சட்டத்திருத்தம் ஈழத்தமிழர் பிரச்சனையைத் தீர்க்குமா?

## பழ. நெடுமாறன்

பெப்ரவரி 01, 2023

1987ஆம் ஆண்டு சூலை 29ஆம் நாள் இந்திய - இலங்கை உடன்பாட்டில் அன்றைய இந்திய தலைமையமைச்சர் இராசீவ் காந்தியும், இலங்கை குடியரசுத்தலைவர் செயவர்த்தனாவும் கையெழுத்திட்டனர்.

உடன்பாடு கையெழுத்திட்டப் பிறகு சுமார் 3 மாதம் கழித்து இலங்கை அரசியல் யாப்பிற்கான 13ஆம் ஆவது சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டது. அரசியல் யாப்பில் 17ஆம் அத்தியாயத்தின் 'அ' பிரிவாகவும், உறுப்பு 154 'அ' பிரிவாகவும் இத்திருத்தம் சேர்க்கப்பட்டது. மாகாண சபை சட்டமும் இதே நாளில் நிறை வேற்றப்பட்டது.

தொன்றுதொட்டு ஈழத் தமிழர்களின் தாயகமான வடக்கு - கிழக்குப் பகுதிகளை இணைத்து ஒரு மாகாணமாக உருவாக் குவது என்ற திட்டம் இந்திய - இலங்கை உடன்பாட்டில் முதன்மையாக இடம்பெற்றிருந்தது. இதையொட்டி சென்னை கடற்கரையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய தலைமையமைச்சர் இராசீவ்காந்தி "ஈழத் தமிழர்களின் நீண்ட கால கோரிக்கையான தமிழீழம் உருவாக்கப்பட்டுவிட்டது" என்று தம்பட்டம் அடித்தார். ஆனால், உண்மையில் நடந்தது என்ன?



இந்திய - இலங்கை உடன்பாட்டில் கூறப்பட்ட முதன்மை வாய்ந்த அம்சங்களான தமிழர் தாயகப் பகுதியில் சிங்களர் குடி யேற்றத்தைத் தடுத்து நிறுத்துதல், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், தமிழர் பகுதியில் உள்ள சிங்கள காவலர் களையும், படை வீரர்களையும் திரும்பப் பெறுதல் போன்ற பல வற்றை சிங்கள அரசு நிறைவேற்றாத காரணத்தினால் மாகாண சபை தேர்தலை ஈழத்தமிழர்கள் புறக்கணித்தனர். ஆனால் இந்தியப் படைவீரர்களின் உதவியுடன் மோசடியான தேர்தல் நடத்தப்பட்டு வரதராசபெருமாள் என்பவர் தலைமை






யில் அதிகாரமில்லாத அமைச்சரவை பதவியேற்றது.

**அடிப்படைத் தவறுகள்**

ஈழத் தமிழர் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட மாகாண சபைச் சட்டம் அடிப்படையிலேயே பல தவறுகளைக் கொண்டிருந்தது.

**1.** யாருடைய பிரச்சனையைத் தீர்ப்பதற்காக மாகாண சபை சட்டம் கொண்டுவரப்பட்டதோ, அந்தப் பிரச்சனைக்குரிய ஈழத் தமிழர் தரப்புடன் கலந்தாலோசனை செய்யாமலும், அவர் களின் பங்களிப்பு இல்லாமலும் ஒப்புதலைப் பெறாமலும் இச் சட்டம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**2.** இலங்கைக் கூட்டாட்சி நாடல்ல ஒற்றையாட்சி நாடாகும். இலங்கை அரசியல் யாப்பின்படி "இலங்கை குடியரசு ஒற்றை யாட்சி அரசாகும் என்பது தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. இதைத் திருத்த வேண்டுமானால், நாடாளுமன்றத்தில் 2/3 பங்கு பெரும்பான்மையோடு அரசியல் யாப்புத் திருத்தம் நிறை வேற்றப்படுவதுடன், மக்களின் பொதுவாக்கெடுப்பு மூலமும் அவர்களின் ஒப்புதல் பெறவேண்டியது இன்றியமையாததாகும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் மக்கள் தொகையில் 75 சதவீதம் சிங்களரே. 25 சதவீதம் தமிழர்கள். இந்நிலையில் நாடாளுமன்றத்திலும், நாட் டிலும் சிங்களரே பெரும்பான்மையினராக இருக்கும் நிலையில், இலங்கையைக் கூட்டாட்சி நாடாக மாற்றவேண்டும் என்ற சட்டத் திருத்தம் ஒருபோதும் நிறைவேற்றப்பட முடியாததாகும். பொதுமக்களின் வாக்கெடுப்பின் மூலமும் ஒப்புதல் பெற முடி யாது.

**3.** ஆனால், அரசியல் சட்டத்தின் 76 ஆவது உறுப்பின் கீழ் கொண்டுவரப்படும் சட்டத் திருத்தத்திற்கு 2/3 பங்கு பெரும பான்மை இருந்தால் போதும். இத்திருத்தம் குறித்து பொது வாக்கெடுப்பு நடத்த தேவையல்ல. அன்றைய செயவர்த்தனா ஆட்சிக்கு 2/3 பங்கு பெரும்பான்மை இருந்தது. எனவே, 76 ஆவது உறுப்பின்கீழ் அரசியல் சட்டத் திருத்தத்தை அவர் சுலபமாக நிறைவேற்றியிருக்கலாம். ஒற்றையாட்சி அரசான இங்கிலாந்து அரசு முறையில் வட அயர்லாந்து, சுகாட்லாந்து போன்ற பகுதிகளுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பங்கீடு அளிக்கப் பட்டதைப் போல, வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு 76 ஆவது சட்டத் திருத்தத்தின் கீழ் ஓரளவு அதிகாரத்தை வழங்கியிருக் கலாம். ஆனால், அதற்கான முயற்சிகளைச் செய்வதற்கு சிங்கள அரசு விரும்பவில்லை. அவ்வாறு செய்யும்படி அதை வற்புறுத்த இந்திய அரசும் தவறிவிட்டது.

**4.** 13 ஆவது சட்டத் திருத்தம் தொடர்பாக இலங்கை உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்ட போது பெரும்பான்மை நீதிபதிகள் அரசியல் யாப்பு 76 ஆவது உறுப்பின்படி நாடாளு மன்றத்திற்கு இருந்த அதிகாரங்களை இத்திருத்தம் கேள்விக் குட்படுத்தவில்லை எனத் தீர்ப்பளித்தனர். அதாவது, நாடாளு மன்றத்தின் அதிகாரத்திற்குட்பட்டே மாகாண சபை இயங்க வேண்டும் என்பதே இத்தீர்ப்பாகும்.

**5.** இலங்கையில் சிங்களர் - தமிழர் என இரு இனங்கள் வாழ் கின்றன. எனவே மாகாணங்கள் அமைக்கும் போது இன ரீதியான அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட்டிருந்தால், சிங் களருக்கு ஒரு மாகாணமும், தமிழருக்கு மற்றொரு மாகாண மும் ஆக இரு மாகாணங்கள் மட்டுமே உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். ஏற்கெனவே மத்திய ஆட்சி சிங்கள ஆட்சியாகவே உள்ளது. ஆனால், செயவர்த்தனா மிக தந்திரமாக பிரதேசங் களை அடிப்படையாகக் கொண்டு சிங்களருக்கு எட்டு மாகாணங்களையும், தமிழருக்கு ஒரு மாகாணத்தையும் அளிக்கும் வகையில் ஒன்பது மாகாணங்களை உருவாக் கினார். ஆனால், வடக்கு - கிழக்குப் பகுதிகளை இணைத்து ஒரு மாகாணமாக ஆக்குவது குறித்து 13ஆவது சட்டத்திருத்தத்தில் தெளிவாக எதுவும் கூறப்படவில்லை. இணைப்புக் குறித்து நாடாளுமன்றம் ஒரு சட்டம் மூலம் நிறைவேற்றலாம் என்று கூறப்பட்டிருந்தது அல்லது குடியரசுத் தலைவர் ஒரு பிரகடனத் தின் மூலம் இணைப்பை ஏற்படுத்தலாம் என்று கூறப்பட் டிருந்தது. தற்காலிக இணைப்பிற்குக் கூட அரசியல் யாப்புத் தகுதி வழங்கப்படவில்லை. எனவே, பிற்காலத்தில் உச்சநீதி மன்றம் மூலம் இந்த இணைப்பு செல்லாததாக்கப்பட்டு வடக்கு - கிழக்கு மாகாணம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இவ்வாறு பிரிக்கப்பட்ட போது இந்தியாவில் காங்கிரசு கட்சிதான் ஆட்சியில் இருந்தது. ஆனாலும்கூட இந்திய - இலங்கை உடன்பாட்டிற்கு சிறு எதிர்ப்பைக்கூட இந்திய அரசு தெரிவிக்கவில்லை.

**6.** இலங்கை மத்திய அரசுக்குரிய அதிகாரங்களும், மாகாண அரசுக்குரிய அதிகாரங்களும் திட்டவட்டமாக வரையறுக்கப்பட வில்லை. இதன் விளைவாக மாகாண அரசுகள் மத்திய அரசின் ஆணைகளுக்கிணங்கவே செயல்படவேண்டி வந்தது. அப்பட்ட மாகக் கூறினால் மாகாண அரசுகள் பொம்மை அரசுகளாகவே விளங்கின.

**7.** மாகாண அரசிடம் இருந்த அதிகாரங்கள்கூட ஆளுநருக்குக் கட்டுப்பட்டவையாக இருந்தன. அவரை மீறி மாகாண முதலமைச்சரோ, அமைச்சர்களோ செயல்பட முடியவில்லை.

வடக்கு - கிழக்கு பிரிவும், புலிகளின் பின்னடைவும் சிங்கள அரசுக்கு மேலும் ஊக்கம் அளித்தன. முன்பு செய்யப்பட்டதை விட, விரைவாகவும், அதிகமாகவும் தமிழர் பகுதிகளில் சிங்கள

குடியேற்றங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன. மாவட்ட எல்லைகளை திருத்தியமைத்தல், முதலீட்டு முயற்சிகளுக்காகவும், இராணுவ முகாம்களுக்காகவும் நிலங்களை ஒதுக்குதல், சிங்கள மீனவர்களுக்கு வாடிகளை அமைத்தல், சிங்கள வணிகர்களின் கடைகளைத் திறத்தல் போன்றவை இராணுவ உதவியுடன் நிறைவேற்றப்படுகின்றன.

**8.** மாகாண சபைக்கு தன்னிச்சையாக சட்டம் இயற்றும் அதிகாரம் வழங்கப்படவில்லை. சட்ட முன் வடிவுகளை ஆளுநருக்கு அனுப்பி அவரின் அனுமதியை பெறவேண்டும் என்ற நிலையில் அத்தகைய அனுமதி எளிதில் கிடைக்கவில்லை. அனுமதி பெற்று சட்டங்களை நிறைவேற்றினாலும், ஆளுநரின் ஒப்புதலை பெறுவதிலும் பெரும் இடர்ப்பாடு உருவானது. ஆளுநர் ஒப்புதல் கொடுத்தாலும் அச்சட்டங்களை உச்சநீதிமன்றத்தின் பரிசீலனைக்குக் குடியரசுத் தலைவர் அனுப்பலாம்.

**9.** மாகாண முதலமைச்சரின் ஆலோசனைப்படி காவல் துறைத் தலைவரை ஆளுநர் நியமிக்கவேண்டும். ஆனால், இதில் முரண்பாடு தோன்றுமானால், குடியரசுத் தலைவரே அந்த நியமனத்தை மேற்கொள்வார். இதன்மூலம் காவல் துறையின் அதிகாரம் முதலமைச்சரிடமிருந்து பறிக்கப்பட்டது.

**10.** குறிக்கப்பட்ட கல்வி நிலையங்களைத் தவிர, ஏனைய கல்வி நிலையங்கள் அனைத்தும் மாகாண அரசின் அதிகாரத்திற்குட்பட்டதாக இருக்கும் எனக் கூறப்பட்டது. ஆனால், குறிக் கப்பட்ட கல்வி நிலையங்கள் சிறிது சிறிதாக தேசிய கல்வி நிலையங்களாக அறிவிக்கப்பட்டு மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டன. மற்றும் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவை மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் என அறிவிக்கப்பட்டது. இவற்றில் மாகாண அரசுக்கு எந்த அதிகார மும் கிடையாது.

**11.** நிலம் தொடர்பான அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கும் என அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ளது. எனினும், நிலங் களைப் பயன்படுத்தும் உரிமை மாகாண அரசிடம் அளிக்கப்படும் என்று கூறப்பட்டது. ஆனால், மத்திய அரசின் கொள் கைக்கு ஏற்பவே மாகாண அரசு நிலத்தைப் பயன்படுத்த வேண்டும் எனக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசுக்குத் தேவையானால் நிலங்களை எடுத்துக்கொள்ளும் அதிகாரம் உண்டு.

நிலத்தின்மீது அதிகாரம் இல்லாமல் ஒரு தேசிய இனம் தனது பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது. இத்தகைய கட்டுப்பாடுகளின் விளைவாக தமிழர் பகுதியில் சிங்கள குடியேற்றங்களைத்தடுக்க மாகாண அரசினால் இயலாமல் போய்விட்டது.

**12.** நீதித்துறை அதிகாரப் பகிர்வுக்கு உட்படுத்தப்படவில்லை. மத்திய அரசின் நீதித்துறையின் கட்டுப்பாட்டின் கீழேயே மாகாண நீதித்துறை நீடிக்கிறது. மாகாண அரசுக்கும், மாகாண மேல் நீதிமன்றத்திற்கும் எத்தகைய தொடர்பும் இல்லை.




**13.** இலங்கையின் இணை ஆட்சிமொழியாக தமிழ் விளங்கும் என அறிவிக்கப்பட்டாலும், இன்று வரையிலும் அது நடை முறையில் செயற்படுத்தப்படவில்லை.

மேற்கண்ட யதார்த்த உண்மைகளை சிறிதளவுகூட உணராமல் இந்திய அரசு 13ஆவது சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என சிங்கள அரசிடம் வற்புறுத்தி வருகிறது. இந்தியாவின் நிலைப்பாட்டையொட்டி மேற்கு நாடுகளும் இக்கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. இலங்கை இனப் பிரச்சனைக் குறித்தோ. 13ஆவது சட்டத் திருத்தம் குறித்தோ சிறிதளவுகூட புரிந்துகொள்ளாமல் இந்நாடுகள் செயல்படுவது என்பது போகாத ஊருக்குப் புரியாத வழியைக் காட்டுவதாகும்.

13ஆவது திருத்தம் குறித்து சிங்கள ஆய்வாளர்கள் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்கள். இலங்கை இனப் பிரச்சனையின் தீர்வுக்கு 13ஆவது திருத்தம் எந்த வகையிலும் உதவாது, சற்றும் பொருத்தமற்றது என அக்கட்டுரைகளில் வலியுறுத்தியுள்ளனர்.

13ஆவது திருத்தம் பல்வேறு குறைபாடுகளைக் கொண்டது. இலங்கை இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்குத் தேவையான அதிகார அலகோ, பகிர்வு அதிகாரங்களோ, கூட்டு அதிகாரங்களோ, அதிகாரங்களுக்கான பாதுகாப்போ எதுவும் இல்லாததாகும். இப்பிரச்சனையில் சம்பந்தப்பட்ட ஈழத் தமிழர்களைக் கலந்து ஆலோசித்து இத்திருத்தத்தை முன்மொழிந்திருந்தால் மேலே கூறப்பட்ட குறைபாடுகளை அகற்றியிருக்க முடியும். ஆனால், ஈழத் தமிழர்களை முற்றிலுமாகப் புறக்கணித்துவிட்டு அன்றைய இந்திய தலைமையமைச்சர் இராசீவ்காந்தி இலங்கையுடன் உடன்பாடு செய்துகொண்டார்.

இந்தியா போன்ற சில நாடுகளில் பல்வேறு தேசிய இனங்கள் வாழ்ந்தாலும் எந்தவொரு தேசிய இனமும் மிகப் பெரும்பான்மையாகவோ அல்லது மிகச் சிறுபான்மையாகவோ இருக்கவில்லை. எனவே, ஏதாவது ஒரு தேசிய இனம் பாதிக்கப்படும்போது அந்த இனத்துடன் சேர்ந்து மற்றும் பல தேசிய இனங்களும் குரல் கொடுக்கின்றன. அதன் விளைவாக உருவாகும் அரசியல் அழுத்தம் இந்திய அரசை செயல்பட வைக்கிறது.

ஆனால் இலங்கையில் அதற்கான சாத்தியக் கூறுகள் அறவே இல்லை. அங்கு நிரந்தர பெரும்பான்மையினராக சிங்களரும், நிரந்தர சிறுபான்மையினராகத் தமிழரும் உள்ளனர். இலங்கை அரசும் சிங்கள அரசாகவே அமைந்துள்ளது. அந்த நாட்டின் குடியரசுத் தலைவராகவோ தலைமையமைச்சராகவோ ஒரு தமிழர் எக்காலத்திலும் வர இயலாது. ஆனால் இந்தியாவில் சிறுபான்மை மதமான சீக்கியர்களில் ஒருவரான ஜெயில் சிங் குடியரசுத் தலைவராகவும், மற்றொரு சீக்கியரான மன்மோகன் சிங் தலைமையமைச்சராகவும் வர முடிந்துள்ளது. மற்றும் சிறுபான்மை மதமான முசுலீம்களில் ஜாகிர் உசேன், பக்ருதீன் அலி அகமது, அப்துல் கலாம் ஆகிய மூன்று பேர் குடியரசுத் தலைவர்களாகப் பதவி வகிக்க முடிந்துள்ளது. மேலும் இந்திய அமைச்சர்களாக, அதிகாரிகளாக, மாநில அமைச்சர்களாக, அதிகாரிகளாகவும் இந்திய இராணுவத்தில் உயர் தளபதிகளாகவும் சிறுபான்மை மதங்களைச் சேர்ந்தவர்கள் வருவதற்கு எவ்விதத் தடையும் இல்லை. ஆனால், இலங்கையில் இதற்கு நேர் மாறாக உயர் பதவிகளில் எதிலும் தமிழர்கள் நியமிக்கப்படுவதில்லை.

ஈழத் தமிழர்கள் 50 ஆண்டு காலத்திற்கு மேலாக இனப்படுகொலைக்கு ஆளாகி வந்தபோதிலும் இந்தியாவோ அல்லது உலக நாடுகளோ அல்லது ஐ.நா. பேரவையோ அவர்களைப் பாதுகாக்க முன்வரவில்லை.

எனவே, ஈழத் தமிழர் பிரச்சனையில் தமிழ்நாட்டுத் தமிழர்களும், உலக நாடுகளில் வாழும் தமிழர்களும் அரசியல் மத, சாதி பேதங்களுக்கப்பால் ஒன்றுபட்டு நின்று குரல் கொடுத்தாலொழிய, அழிவின் விளம்பில் நின்று கதறும் ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க முடியாது என்பதை உணர்ந்து செயல்பட முன்வருமாறு உலகத் தமிழினத்தை வேண்டுகிறோம்.

# வடக்கிலிருந்து கிழக்கை நோக்கிய பேரணி

# மட்டக்களப்பு பிரகடனம்

07.02.2023

இன்று 2023 பெப்ரவரி 7 ம் திகதி, தமிழ் மாணவர்களும் மக்கள் சமூக அமைப்புக்களும், தமிழ் மக்களுமாக ஒன்றிணைந்து ஈழத் தமிழராகிய நாம் மரபுவழித் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமைக்கு உரித்துடைய ஒரு தேசிய இனம் என்பதை மீண்டும் உலகுக்குப் பிரகடனப்படுத்துகின் றோம். வட்டுக்கோட்டைத் தீர்மானம், திம்புக் கோட்பாடு, பொங்குதமிழ் பிரகடனம் எனபவற்றினூடாக வரலாற்றில் தமிழ் மக்களின் அபிலாசைகள் கூட்டாகப் பலமுறை வெளிப்படுத்தப் பட்ட போதிலும், ஈழத் தமிழரின் இனப்பிரச்சனைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய நிரந்தர அரசியல் தீர்வைக் காண்பதற்காக, மீண்டும் ஒருதடவை எமது ஏகோபித்த வெளிப்படுத்தலை வலியுறுத்திக் கூறவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, இன்று பேரெழுச்சியாக எமது தாயகத்தின் தென் பகுதியாகிய மட்டக்களப்பு நகரில் ஒன்றுதிரண்டுள்ளோம். தமிழ் மக்களுக் கான எந்தவொரு அரசியல் தீர்வும் எட்டப்பட முன், தமிழ் மக் களின் அடிப்படை உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி, தமிழ் மக்களின் பாரம்பரியத் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் தமிழ் மக்கள் கூட்டாகப் பேரெழுச்சி கொண்டுள்ளனர்.

உலகெங்கிலும் உள்ள எமது உறவுகளின் ஆதரவுடன் இன்று தாயகத்தில் பெருமெழுச்சியாக திரண்டுள்ள மாணவர்களும், மக்களும், மக்கள் அமைப்புப் பிரதிநிதிகளுமாக முன் னெடுத்துள்ள இன்றைய பாரிய எழுச்சிப் பேரணி தமிழ் மக்களது ஏகோபித்த குரலின் தெளிவான வெளிப்பாடாகும். ஈழத் தமிழ் மக்கள் தொடர்பான எந்தவொரு அரசியல் நகர் விலும் தமிழர் தேசத்தின் பிரதிநிதிகள், சிங்கள தேசத்தின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள் அனை வரும் பின்வரும் ஈழத் தமிழர் வரலாற்று உண்மைகளைக் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள் கின்றோம்.

**முன்னுரை:**

இலங்கைத் தீவின் வரலாற்றில், தமிழர்களும் சிங்களவர்களும்




தம்மை தாமே ஆளும் சுயாதீன இராச்சியங்களை கொண் டிருந்தனர். காலனித்துவ ஆட்சியாளர்களான போத்துக்கீசர், ஒல்லாந்தர் மற்றும் பிரித்தானியர்கள் தங்களுடைய சுமார் 300 வருட ஆரம்ப ஆட்சிக் காலத்தில் சிங்கள இராச்சியங்களையும், தமிழ் இராச்சியங்களையும் தனித்தனியாக நிர்வகித்து வந்தனர். 1833ம் ஆண்டு கோல்புரூக் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் தம்முடைய நிர்வாக நடைமுறையை இலகுபடுத்துவதற்காக சிங்கள இராச்சியங்களும் தமிழ் இராச சியங்களும் பிரித்தானியர்களால் இணைக்கப்பட்டது என்ற வரலாற்று உண்மையை முதலில் சிங்கள தேசம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

மேலே சொல்லப்பட்ட வரலாற்று நிகழ்வுகளை முற்றாகப் புறந்தள்ளி, எண்ணிக்கைப் பெரும்பான்மை அடிப்படையில் முழுநாட்டினதும் அதிகாரங்கள் சிங்களதேசத்திடம் கைமாற்றப் பட்டது. அதன் மூலம் தமிழர் தேசம் என்பது மழுங்கடிக்கப் பட்டு, தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்பதைச் சுட்டிக் காட்டுவதோடு, இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து அடுத்தடுத்து வந்த சிங்கள ஆட் சியாளர்கள் எப்பொழுதும் சிங்களவர்களுக்கு கடும் தேசிய வாதத்தை போசித்தும், ஊக்கப்படுத்தியும் வந்துள்ளதோடு தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கு தமது இராணுவ பலத்தைப் பயன்படுத்துவதை உலகம் பாராமுகமாக இருந்து வருகிறது.

தமிழ் மக்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப் படையில் தனியான சுதந்திர தமிழீழ அரசை அமைப்பதற்காக 1976ம் ஆண்டு மே மாதம் 14ஆந் திகதி தமிழர் ஐக்கிய விடு தலை முன்னணியினால் நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு, 1977ம் ஆண்டுப் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் வழங்கப்பட்ட மகத்தான மக்கள் ஆணையே ஈழத் தமிழர்கள் சனநாயக முறையில் நடாத்தப்பட்ட ஒரு பொதுவாக் கெடுப்பில் தமது சுதந்தர வேட்கையை வெளிப்படுத்தியிருந்தது என்பதைப் பன்னாட்டு சமூகம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஒற்றையாட்சி அமைப்பைக் கொண்டு 1978ம் ஆண்டு இயற்றப்பட்ட அரசியலமைப்பானது தமிழ் மக்களின் விருப்புக்கு மாறாக அவர்களின் ஒப்புதல் இல்லாமலேயே நிறைவேற் றப்பட்டது என்பதை இந்தப் பிராந்தியத்தில் அக்கறையுள்ள அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

நான்கு தசாப்த காலமாக பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகளும், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வன்முறையற்ற அமைதியான அரசியல் போராட்ட வழிமுறையூடாக வென் றெடுப்பதற்காக அடுத்தடுத்து வந்த சிங்கள ஆட்சியாளர்களோடு ஒத்துழைத்து, தங்களது ஆகக் குறைந்தபட்ச அரசியல் உரிமை களைக் கூட பெற்றுக் கொள்வது சாத்தியமற்றது என்று நிரூபிக் கப்பட்டுதோடு, எமது சாத்வீகப் போராட்டங்கள் ஆயுதமுனை யில் அடக்கப்பட்ட காரணத்தாலேயே, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேறு வழிமுறைகள் இல்லாத சூழலில் தற்காப் புக்காக தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தோற்றம்பெற் றதோடு, தமிழர்களின் உரிமைக்கான கோரிக்கையாக சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு வலுப்பெற்றது என்பதை சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1985ம் ஆண்டு பூட்டான் தலைநகர் திம்புவில் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்ட தமிழ் அரசியல் கட்சிகள், மற்றும் ஆயுதப் போராட்ட அமைப்புகள் உள்ளடங்கலாக அனைத்துத் தமிழ் அரசியல் அமைப்புக்களும் ஏகமனதாக தங்களுடைய அடிப்படைக் கோரிக்கைகளாக தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் சுயநிர்ணய உரிமை என்பவற்றை முன்வைத்திருந்தமை கவனத்தில் கொள்ளப் படவேண்டும்.

ஈழத் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் வழியில் தீர்வு காண்பதற்குரிய நடைமுறைகளில் முன் னேற்றம் காணப்படாததன் விளைவாக, தமிழரின் ஆயுதப் போராட்டம் தொடர்ந்ததோடு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழரின் அரசியல் - இராணுவ பலமாக மேலெழுந்து. அடுத்தடுத்து வந்த ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களுடன், தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங் களைச் செய்துகொண்ட போதிலும் சிங்கள ஆட்சியாளரின் நேர்மையற்ற அணுகுமுறைகளால் பேச்சுவார்த்தைகளில் தீர்வுகள் எதுவும் எட்டப்பட முடியவில்லை என்ற கசப்பான உண்மை கருத்தில் கொள்ளப்படவேண்டும்.

தமிழர்கள் மீதான திட்டமிட்ட இனப்படுகொலை, கடந்த 70 வருடங்களுக்கு மேலாக அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்களின் துணையோடு, தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட, நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற கட்டமைக் கப்பட்ட படுகொலைகள் - 2009ல் மேற்கொள்ளப்பட்ட அதியுச்ச இனவழிப்புப் படுகொலைகள் உட்பட, மனிதப் படுகொலைகள், நிலங்களைக் கையகப்படுத்தல், பாலியல் வன்முறைகள், கலாச்சாரம் மற்றும் பொருளாதாரக் கட்டுமானங்களை அழித் தல் போன்ற வன்முறைகள் மூலம், தமிழ் மக்களுடைய தேசத்துக்கான தகுதிப்பாட்டைத் தாங்கிநிற்கும் அனைத்து விழுமியங்களும் அழித்தொழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை ஏற்றுக் கொண்டும்.

வடக்கு மாகாண சபையில் கடந்த 10.02.2015 இலும், பின்னர் 16.09.2015 இல் தமிழக சட்டசபையிலும் நிறைவேற்றப்பட்ட கண்டனத் தீர்மானங்களில், அடுத்தடுத்து வந்த ஸ்ரீலங்கா ஆட்சியாளர்கள் நிகழ்த்திய இனப்படுகொலைகளை உலகுக்கு அம்பலப்படுத்தியிருந்ததையும் நாம் கூட்டாக மீண்டுமொரு தடவை அனைவரின் கவனத்திற்கும் உட்படுத்துகின்றோம்.

மேற்குறித்த யதார்த்த நிலைகளை கருத்தில் கொண்டு, தமிழர் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக தமிழர்களை ஒரு தனித்த தேசமாக, அவர்களின் பாராதீனப்படுத்தப்பட முடியாத சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது மட்டுமே, மேலே குறிப்பிட்ட அனைத்து ஒடுக்குமுறைகளும் மீள நிகழாது இருப் பதை உறுதிசெய்யும் என்பதை வலியுறுத்தியும்.

தமிழர் தேசத்தின் வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்கள் தங்களுடைய தனியான இறைமையை யாருக் கும் கையளித்திருக்கவில்லை என்பதைக் கருத்தில் கொண் டும்.

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய இந்தப் பேரெழுச்சியின் பிரகடனமானது, தேசிய இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வாக, சர்வதேச சட்டத்தின் ஆட்சித் தத்துவங்களுக்கு ஏற்புடையதாகவும், மனித உரி மைகள் எல்லா நபர்களுக்கும் சமத்துவமானது என்ற அடிப் படையிலும், சுயநிர்ணய உரிமையினை மதித்தும், அக் கறையுள்ள அனைத்து தரப்பினர்கள் முன்னிலையிலும் நிரந் தர அரசியல் தீர்வை எட்டுவதற்குமாக முன்வைக்கப்படும் தீர் மானங்களைக் கவனத்தில் கொள்ளுமாறு இந்தப் பேரணி வலியுறுத்துகிறது.

**அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையானது அரசியலமைப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன், பின்வரும் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதில் இருந்து ஆரம்பிக்கப்படல் வேண்டும்.**

1. இந்த உடன்படிக்கையானது, ஏனைய விடயங்களிற்கும் மேலாக, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, அதன் இறைமை மற்றும் தமிழ் மக்களின் பாரம்பரிய மற்றும் வர லாற்றுத் தாயகம் அங்கீகரிக்கப்படுவதோடு, முதலில் தமிழர் தாயகத்திலிருந்து ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும்.

2. இந்த உடன்படிக்கையானது தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

3. இந்த உடன்படிக்கை ஒருதலைப்பட்சமாக ரத்து செய்யப் பட்டால், சர்வதேச மற்றும் ஐக்கிய நாடுகள் அவையின் ஒழுங்குபடுத்தல், கண்காணிப்பு என்பவற்றோடு, தமிழ் மக்கள் ஒரு பொது வாக்கெடுப்பு மூலம் தமது அரசியல் எதிர்காலத்தை தீர்மானித்துக் கொள்ளலாம் என்ற ஏற்பாடு இவ் உடன்படிக் கையில் உள்ளடக்கப்பட வேண்டும்.

4. இந்த உடன்படிகை மூன்றாம் தரப்பான சர்வதேச தரப் பினரின் முன்னிலையில் எழுதப்பட வேண்டும்.

**பேச்சுவார்த்தையின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்:**

1. தொடர்ச்சியாக, திட்டமிட்ட இனப்படுகொலைக்கு உள்ளாகி வரும் தேசம் என்ற வகையில், தமிழ் மக்கள் தமது அடை யாளத்தை பாதுகாக்க தொடர்ந்து போராடி வருகின்றனர்.

2. தமிழ் மக்கள் இனவழிப்பிற்கு முகங்கொடுத்து வரும் நிலையில், தமிழர்களின் தேசிய அடையாளத்தின் பாதுகாப்பு மற்றும் ஒரு தேசமாக இருத்தல் என்பவை சமரசத்திற்கு அப்பாற்பட்டதாகவும், உறுதியான உத்தரவாதம் அளிக்கப்பட

வேண்டியதும் அவசியமாகும்.

3. முதலில், இரு தரப்பும் கூட்டாக பேச்சுவார்த்தை செய்வதற்கான தெளிவான வழிவரைபடத்தை சர்வதேச மத்தியஸ்தத்துடன் தயார் செய்ய வேண்டும். இது தெளிவான அடைவுகளையும் அதன கால அட்டவணைகளையும் கொண்டிருக்க வேண்டும்.

4. பேச்சுவார்த்தைகள் இரண்டு தளங்களில் சமாந்தரமாக நடாத்தப்பட வேண்டும் ஒன்று தமிழ் மக்கள் எதிர்நோக்கும் உடனடிப் பிரச்சனைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவது மற்றையது இறுதி அரசியல் தீர்வை நோக்கியதாக இருக்க வேண்டும்.



**5. உடனடிப் பிரச்சினைகள் குறித்துப் பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்:**

5.1. தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், வனவள பாதுகாப்புத் திணைக்களம், மகாவலி அபிவிருத்தித் திட்டம் எனும் போர்வையில் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான நில அபகரிப்புத் திட்டங்களும் உடனடியாக நிறுத்தப்படுவதோடு அபகரிக்கப்பட்ட காணிகளை உரியவர்களிடம் மீள ஒப்புடைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

5.2. தமிழர் தாயகத்தில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட அனைத்து சிங்களக் குடியேற்றங்களும் அகற்றப்பட வேண்டும்.

5.3. அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படவேண்டும்.

5.4. உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை மாற்றங்களைப் பழைய நிலைக்குக் கொண்டுவரவேண்டும்.

5.5. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தொடர்பான சர்வதேச விசாரணைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படுவதுடன், அவர்களுக்கு சர்வதேச நீதி வழங்கப்படுவதோடு குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

5.6. பயங்கரவாதத் தடைச் சட்டம் உடனடியாகவும் நிரந்தரமாகவும் நீக்கப்படவேண்டும்.

5.7. மனித உரிமை மீறல்களை வெளிக்கொண்டு வரும் ஊடகவியலாளர்கள், திட்டமிட்ட இன அடக்குமுறைக்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுத்து வரும் மாணவர்கள் மற்றும் மக்கள் சமூகச் செயற்பாட்டாளர்கள் மீதான அச்சுறுத்தப்படுதல் மற்றும் கைதுசெய்யப்படுதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

5.8. தமிழ் மக்களின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு ஏற்படுத்தும் அனைத்து வகையான அச்சுறுத்தல்களையும், தடைகளையும் நிறுத்தவேண்டும்.

5.9. காலகாலமாக நடைபெற்று வரும் தமிழின அழிப்பிற்கு சர்வதேச நீதிப் பொறிமுறை (சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் – ICC, சர்வதேச நீதிமன்றம்- ICJ) ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிகார நீதி வழங்கப் படவேண்டும். அத்துடன் ஐக்கிய நாடுகள் அவையால் விசேடமாக உருவாக்கப்பட்ட தீர்ப்பாயத்தின் விசாரணைப் பொறிமுறைகளும் அனுமதிக்கப்படவேண்டும்.

5.10. இறுதி அரசியல் தீர்வொன்று எட்டப்படும் வரை தமிழ் மக்கள் தமது தாயகத்தின் அன்றாட விவகாரங்களை நடாத்துவதற்கு இடைக்கால நிர்வாகப் பொறிமுறையொன்று உருவாக்கப்படவேண்டும்.

**6. இறுதி அரசியல் தீர்வைக் காண்பதற்கு பின்வருவனவற் றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.**

6.1. இலங்கை அரசின் அரசியலமைப்பின் அடிப்படையாகிய ஒற்றையாட்சிமுறை ஒழிக்கப்படவேண்டும்.

6.2. இறுதித் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பம் முதலே ஆக்கப்பூர்வமாக நடாத்தப்பட வேண்டுமாயின் வட்டுக் கோட்டைத் தீர்மானம், திம்புக் கோட்பாடுகள், பொங்கு தமிழ் பிரகடனம் ஆகிய வரலாற்றுப் பதிவுகள் ஊடாக தமிழ் மக்களால் முன் வைக்கப்பட்ட, அதி முக்கிய அடிப்படைக் கோட்பாடுகளை மையப்படுத்தி, தமிழ் மக்களின் வேணவாவைப் பூர்த்தி செய்யும் தீர்வை இலக்காகக் கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் அடிப்படைக் கோட்பாடுகள் ஆவன

1. தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதை அங்கீகரித்தல்.

2. தமிழ் மக்களினுடையதாக அடையாளம் காணப்பட்ட, வரலாற்று ரீதியான மற்றும் பாரம்பரியமான தாயகப் பிரதேசத்தை அங்கீகரித்தல்.

3. மேற்குறிப்பிட்ட உரித்துடைமையின் அடிப்படையில், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்.

6.3. பேச்சுவார்த்தைகளின் போது சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் புத்திஜீவிகள் (பலதுறை நிபுணர்கள் குழு) சேர்க்கப்பட வேண்டும். அத்துடன் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய புலம்பெயர் தமிழ் மக்கள் பிரதிநிதிகளும் உள்வாங்கப்பட வேண்டும்.

6.4. தமிழ் மக்களுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைச் சூழல் ஏற்படும்பட்சத்தில், அது சர்வதேச மத்தியஸ்தத்துடனும், வெளிப்படைத்தன்மையுடனும், பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டும்.

6.5. இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது இஸ்லாமியத் தமிழ் மக்கள், மலையகத் தமிழ் மக்கள் ஆகியோரின் அடிப்படைப் பிரச்சனைகளுக்கும் நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும்.

6.6. முன்னைய பேச்சுவார்த்தைகளைப் போல் அல்லாமல் நடுநிலையுடனும், நேர்மையுடனும் நடுவராகச் செயற்படுமாறு சர்வதேச சமூகத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

மேலே கூறப்பட்டுள்ள விடயங்கள் நடைமுறையில் திருப்திகரமாக அமுலாக்கப்பட்டுள்ளதை ஆராய்ந்து உறுதிப்படுத்திய பின்னரே, எந்தவொரு நிதி வழங்கும் நாடுகளும் மற்றும் நிறுவனங்களும் ஸ்ரீலங்காவிற்கு பொருளாதார உதவி வழங்கத் தொடங்கவேண்டும் என நாம் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறோம்.

இறுதித் தீர்வை எட்டுவது என்பது, வன்முறைச் சுழற்சிகள் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கும், இலங்கையில் நிலையான அமைதியை அடைவதற்கும், இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் நிலையான அமைதியை நிலைநாட்டுவதற்கும் முக்கியமாக உள்ளதென்பதை இப்பிராந்தியத்தை அக்கறையோடு கையாளும் நாடுகள் உணர்ந்து செயற்படவேண்டும்.

ஈழத் தமிழரின் தேசிய இனப் பிரச்சனையில் மரபுவழித் தாயகம், தமிழ் தேசியம், தன்னாட்சியுரிமை என்ற அடிப்படையில்  எட்டப்படும் எந்தவொரு நிரந்தர அரசியல் தீர்வும், சர்வதேசத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டுக் கண்காணிக்கப்படும் பொதுவாக்கெடுப்பின் மூலம், தமிழ் மக்களின் ஆணை பெறப்படவேண்டும் என்பதே எமது உறுதியானதும் அறுதியானதுமான நிலைப்பாடாகும். அத்துடன் ஈழத் தமிழர்களின் தலைவிதியை ஈழத் தமிழர்களே தீர்மானித்து, எம்மை நாமே ஆளக்கூடிய நிரந்தரத் தீர்வும் பொதுவாக்கெடுப்பில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை தமிழ் மக்கள் சார்பாக இந்தப் பிரகடனம் உலகுக்கு அறிவிக்கின்றது.

**யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்காக நீதி வேண்டிப் போராடும் தமிழ் அமைப்புக்கள், மற்றும் தமிழ் சமூக அமைப்புக்கள்**



# JATHU RENOVATION




உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்

★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical

RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com



## Preparation of Income Taxes T1 and T2 with E/File

Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2

Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6

Tel: 905.554.5606
Fax: 905-554-3236



Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

# The ESTATE
BANQUET AND EVENT CENTRE

The ESTATE
BANQUET AND EVENT CENTRE



The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"

The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar

430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com

## Call today to Save energy

Free Estimate!
Call today
$50 OFF




### Let us help with...

- Replacement (Door & Windows)
- Custom Door & Windows
- Front Door & Patio Door
- Garden Door
- Door & Windows Re-Caulking (Important)
- Painting Doors & Windows
- Basement Separate Entrance Door
- Home Painting
- Spotlights installation
- California Shutters

## PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-

Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com






# சோழர்கால அழிபாடு திருகோணமலை திருமங்களாய் சிவாலயம் மீள் ஆய்வு

29.01.2023

யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் தலைமையில் தொல்லியல் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர்களான திரு.மணிமாறன், திரு.மதியழகன் மற்றும் யாழ் பல்கலைக் கழக முன்னாள் தொல்லியல் துறை மாணவன் கிரிகரன், கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் வரலாற்றுத்துறை மாணவன் சானுஜன் ஆகியோருடன் மீளாய்வு ஒன்றை கடந்த 29.01.2023 அன்று மேற்கொண்டோம்

சோழர்காலத்தில் மிக பிரமாண்டமான முறையில் நிர்மானிக் கப்பட்டு தற்போது கவனிப்பாரற்று காணப்படும் இவ்வாலய மானது





★ கர்ப்பகிரகம்
★ அர்த்த மண்டபம்
★ மகா மண்டபம்
★ மணி மண்டபம்
★ உள் சுற்று பிரகாரம்
★ வெளிச் சுற்று பிரகாரம்
★ பிரகாரத்தெய்வங்கள்
★ கருவறைத் தூண்கள்
★ தூண்கள்
★ செங்கல்சுவர்கள்
★ கருங்கற் செதுக்கள் தூண்கள்
★ அதன் மேலமைந்த விமானம்
★ முற்றாக அழிவடைந்து அதன் கட்டிடப் பாகங்கள்
★ கர்பக்கிரகத்திற்கு முன்னால் அழிவடைந்து காணப்படும் அந்தராளத்தில் ஆலய காலப் பொருட்கள்
★ பிற்காலத்தில் கொண்டுவந்து வைக்கப்பட்ட சிவலிங்கம்
★ அந்தராளத்திற்கு முன்னால் மகாமண்டபம்.
★ பலிபீடமும் இருந்ததற்கான அத்திவாரங்கள் அதற்குப் பயன் படுத்தப்பட்ட அலங்காரத் தன்மை கொண்ட பல கருங்கற் தூண்களும் காணப்படுகின்றன.
★ மகாமண்டத்திற்கு வலப்பக்கமாக பயன்படுத்தப்படாத நிலையில் கருங்கற்களான மாடங்கள்.
★ தெய்வச் சிலைகள் வைப்பதற்குப் பயன்படுத்திய பீடங்கள் மற்றும் புடைப்புச் சிற்பங்களும் காணப்படுகின்றன.
★ மகாமண்டபத்தின் இடப்பக்கமாக ஆலயத்தில் பயன்படுத தியிருந்த கோமுகிகள்.
★ சந்தனம் அரைக்கும் கற்கள்.
★ கபோத வடிவிலமைந்த அரைவட்டத் தூண்கள் காணப்படு கின்றன.
★ மகாமண்டபத்திற்கு மிக அருகில் கருங்கற்களைக் கொண்டு சற்சதுர வடிவில் ஆழமாகக் கட்டப்பட்ட ஆலயத்தின் தீர்த்தக் கிணறு காணப்படுகிறது.
★ இவ்வாலயத்தைச் சுற்றி சுற்று மதில்களும் அவற்றிடையே துணைக் கோவில்களும் (பரிவாரத் தெய்வங்கள்) இருந்திருக் கலாம் என்பதை அவற்றிற்குரிய அத்திவாரங்களும். பரவலாகக் காணப்படும் செங்கட்டிகளும். கருங்கற்களும் உறுதிப்படுத் துகின்றன.

இவ்வாலயத்தில் ஏராளமான தமிழ் கல்வெட்டுக்களும் காணப் படுகின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்னர் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் அவர்கள் திருகோணமலை திருமங்கலாய் காட்டுப் பகுதியில் அழிவடைந்து கொண்டிருக்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற் பட்ட சிவன் ஆலயம் - பாதுகாக்க முன் வாருங்கள் எனக்கூறி யிருந்தார் அதற்கான காரணமென்னவெனில்,

இலங்கையில் இந்து சமயத்திற்கு 2500 ஆண்டுகளுக்கு குறை யாத வரலாறு உண்டு. பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்தி எழுந்த பாளி இலக்கியங்கள் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் அறிமுகமாவதற்கு முன்னரே இலங்கையில் இந்து மதமும். அம்மதம் சார்ந்த ஆலயங்களும் இருந்ததாகக் கூறுகின்றன. அவற்றுள் கிழக்கிலங்கையில் இருந்த இற்



றைக்கு 1600 ஆண்டுகளுக்கு முற்பட்ட மூன்று சிவன் ஆல யங்கள் பற்றி மகாவம்சம் கூறுகின்றது.

சமகால இலங்கையில் அதிலும் குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஆயிரக்கணக்கான இந்து ஆலயங்கள் புதுப் பொலிவுடன் காணப்படுகின்றன. அவற்றுள் கணிசமான ஆல யங்கள் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் சுதேச மக்களுக்கு மத சுதந்திரம் வழங்கப்பட்டதன் பின்னர் பழைய ஆலயங்கள் இருந்த இடங்களில் அல்லது பழைய ஆலயங்களின் பெயரை நினைவுபடுத்தி புதிய இடங்களில் கட்டப்பட்டவையாக உள் ளன. போத்துக்கேயர் ஆட்சிக்கு முன்னர் இம்மாகாணங்களில் இருந்த ஆலயங்கள் பற்றி இலக்கியங்கள். புராணங்கள். கல்வெட்டுகள். ஐரோப்பியர் கால ஆவணங்கள் என்பவற்றில் பல வரலாற்றுக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

ஆயினும் தற்காலத்தில் அவ்வாலயங்கள் இருந்த ஒரு சில இடங்களில் மட்டும் அவ்வாலயங்களின் அழிபாடுகளை அடை யாளம் காணமுடிகின்றது. ஆயினும் அவ்வழிபாடுகளை வைத்து அவ்வாலயங்களின் கட்டிட அமைப்பையோ. கலை மரபையோ. வழிபாட்டிலிருந்த தெய்வங்கள் பற்றியோ அறிய முடியவில்லை. இதற்கு இம்மாகாணங்களின் கரையோரங் களில் ஆதிக்கம் செலுத்திய போத்துக்கேயரும். பின்வந்த ஒல்லாந்தரும் சுதேச மதங்களுக்கு எதிராகக் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கையால் இவ்வாலயங்கள் அழிக்கப் பட்டதே காரணமாகும்.

அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களின் கட்டிடப் பாகங்களைக் கொண்டே அவர்களின் ஆட்சிக்காலக் கோட்டைகள், கிறிஸ்தவ ஆலயங்கள். நிர்வாகக் கட்டிடங்கள் என்பன கட்டப்பட்டன. இந்த உண்மையை அவர்களின் ஆட்சி ஆவணங்களே உறுதி செய்கின்றன. இதை தற்போது யாழ்ப்பாணக் கோட்டையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் ஆய்வில் கிடைத்து வரும் இந்து ஆலயங்களுக்குரிய கட்டிடப் பாகங்கள் மேலும் உறுதிசெய்கின்றன. இருந்த போதிலும் போத்துக்கேயர். ஒல்லாந்தர் ஆட்சியில் அவர்களின் ஆதிக்கம் பெரும்பாலும் இலங்கையின் கரையோரப் பகுதிகளை அண்டிய மாகாணங் களில் ஏற்பட்டிருந்ததனால் அவர்களின் கலையழிவுக் கொள்கையில் இருந்து மாகாணங்களின் உட்பகுதியில் இருந்த ஆலயங்கள் தப்பித்திருக்க இடமுண்டு. அவற்றில் ஒன்றாகவே திருமங்கலாய்ச் சிவன் ஆலயத்தைப் பார்க்கின்றேன்.

இவ்வாலயம் திருகோணமலை மாவட்டத்தில் கிளிவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட திருமங்கலாய் என்ற வரலாற்றுப் பழமைவாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. இவ்வாலயம் பற்றி திருகோணமலை தலபுராணங்களில் ஒன்றான திருகரைசை புராணத்திலும் கூறப்பட்டுள்ளது. ஆயினும் தற்போது இவ் வாலயம் கிளிவெட்டியின் பிரதான வீதியில் இருந்து ஏறத்தாழ பத்து கிலோ மீற்றர் தொலைவில் மீன்சார வேலி போடப்பட்ட அடர்ந்த காட்டின் மத்தியில் காணப்படுகின்றது.

இவ்விடத்திற்குச் செல்லும் பாதையில் பிற்பகல் மூன்று மணிக் குப் பின்னர் யானைகளின் நடமாட்டத்தை எதிர்கொள்வது சாதாரண நிகழ்வாகவே இருக்கின்றது. இவற்றின் காரண மாகவே இதுவரை தொல்லியல். வரலாற்று ஆய்வாளர்கள் இவ்வாலயத்தை நேரில் சென்று ஆய்வு செய்வதில் தயக்கம் காட்டி வந்துள்ளனர் எனலாம். இந்நிலையில் திருமங்கலாய் பிரதேசத்தில் வாழ்ந்த மூதாதையினரின் வழித்தோன்றல்களாக தற்போது கிளிவெட்டியில் வாழ்ந்து வரும் திரு. வி.முத்து



லிங்கம். திரு.கே.குரேந்திரராசா திரு. கே. மாணிக்கராசா முதலியோர் இவ்வாலயத்தை ஆய்வு செய்வதற்கு எமக்கு வழங்கிய பாதுகாப்பு உத்தரவாதமும். உதவிகளும் அவ்வாலயத்தை நேரில் சென்று ஆய்வு செய்வதற்கு தூண்டுதலாக அமைந்தது.

தற்போது இவ்வாலயத்தின் பெரும்பகுதி முற்றாக அழிவடைந்து அதன் அழிபாடுகள் ஆங்காங்கே கற்குவியல்களாகக் காணப்படுகின்றன. ஆயினும் அவ்வாலயத்தின் கட்டிட அமைப்பையும். அதன் கலை மரபையும். ஆலயம் தோன்றி வளர்ந்த காலத்தையும் உறுதிப்படுத்தக் கூடிய நம்பகரமான ஆதாரங்களை அடையாளம் காணக்கூடியதாக இருக்கின்றது..



இந்த ஆய்வின் போது கட்டிட அழிபாடுகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட ஐந்து தமிழ்க் கல்வெட்டுக்கள் இவ்வாலய வரலாற்றுடன். கிழக்கிலங்கை வரலாறு பற்றிய ஆய்விலும் அதிக முக்கியத்துவம் வாய்ததாகக் காணப்படுகின்றது. எமக்குத் தெரிந்தவரை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள வரலாற்றுப் பழமைவாய்ந்த ஆலயங்களுடன் அவ்வாலயங்களின் வரலாறு கூறும் கல்வெட்டுக்களும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அந்த இரண்டு அம்சங்களும் முதன் முறையாகத் திருமங்கலாயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது... இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களின் எழுத்தமைதியைக் கொண்டு அவை வேறுபட்ட காலங்களில். வேறுபட்ட நோக்கங்களுக்காக பொறிக்கப்பட்டவை என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது. அவற்றுள் கி.பி. 10 ஆம், கி.பி. 11 ஆம் நூற்றாண்டுக்குரிய மூன்று கல்வெட்டுக்கள் ஆலய நிர்வாக ஒழுங்குகள் பற்றியும். அவ்வாலயத்திற்கு சிற்றம்பலம் உடையார். திருவெண்ணைக் கூற்றன். திருவரங்கம் முதலான அதிகாரிகள். சமூகப் பெரியவர்கள் வழங்கிய தானங்கள் (காசு) பற்றியும் கூறுகின்றன. கி.பி. 15 ஆம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டுக்குரிய ஏனைய இரு கல்வெட்டுக்களும் இவ்வாலயத்திற்கு பசுக்கள் தானமாக வழங்கப்பட்ட செய்திகளைக் கூறுகின்றன. இந்நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கங்குவேலி என்ற இடத்தில் திருமங்கலாய் ஆலயத்திற்குரிய மணி ஒன்று காணப்படுகின்றது.

இது திருமங்கலாய் ஆலயத்தில் இருந்து பிற்காலத்தில்



கங்குவேலிக்கு எடுத்துச் செல்லப்பட்ட மணியாகும். ஆவ்வாலய மணியில் திருமங்கலாய் கோவிலுக்கு அவ்வூரில் வசித்த (திருமங்கலாயில் வசித்த) "பத்திபெட்டி மகன் பத்தன் யுடைய உபையம்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இச்சாசனத்தின் எழுத்தமைதி கொண்டு இதன் காலம் கி.பி.17 ஆம் நூற்றாண்டிற்கு உரியதெனக் கூறலாம். ஆகவே மேற்கூறப்பட்ட கல்வெட்டுகள். ஆலய மணிச் சாசனம் என்பவற்றை ஆதாரங்களாகக் கொண்டு இவ்வாலயம் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஏறத்தாழ 17 ஆம் நூற்றாண்டு வரை அழிவடையாத நிலையில் இப்பிரதேச மக்களால் வழிபடப்பட்டு வந்துள்ளமை தெரியவருகின்றது..

இவ்வாலயம் இலங்கைத் தமிழர் குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாறு. பண்பாடு பற்றிய ஆய்வில் பின் வரும் அம்சங்களில் முக்கியத்துவம் பெறுகின்றதை அவதானிக்க முடிகின்றது:

1. இவ்வாலயம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டிலிருந்து திராவிடக் கட்டிடக்கலை மரபில் தோன்றி வளர்ந்ததற்குப் பின்புலமாக திருமங்கலாய்ப் பிரதேசத்தின் தொன்மையான. செறிவான தமிழ்க் குடியிருப்புக்கள் இருந்துள்ளமை தெரிகின்றது. இந்த உண்மையை எமது ஆய்வின் போது இப்பிரதேசத்தில் ஆங்காங்கே பிற தேவைகளுக்காக வெட்டப்பட்டிருந்த ஆழமான குழிகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட 10 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட மட்பாண்ட ஓடுகள். கூரை ஓடுகள். சுடுமண் உருவங்கள் முதலான சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

2. தமிழகத்தில் பல்லவர் ஆட்சியில் தோன்றிய பக்தி இயக்கத்தின் செல்வாக்கால் சமகால இலங்கையிலும் கற்களைப் பயன்படுத்தி திராவிடக் கலைமரபில் ஆலயங்கள் அமைக்கும் மரபு தோன்றி வளர்ந்ததைக் காணமுடிகின்றது. அவற்றுள் சோழ ஆட்சியின் தலைநகராக இருந்த பொலநறுவையில் கட்டப்பட்ட இரண்டாம் சிவதேவாலயமே இலங்கையில் இதுவரை ஓரளவு முழுமையாகக் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தால் முந்திய திராவிடக் கலைமரபில் கட்டப்பட்ட ஆலயம் எனக் கூறப்படுகின்றது. ஆனால் பொலநறுவை இராசதானி கால வரலாற்றில் எந்த இடத்திலும் சொல்லப்படாத திருமங்கலாய் சிவன் ஆலயம் அதன் கட்டிட அமைப்பிலும். கலைமரபிலும் சற்று



மேலோங்கிக் காணப்படுவதன் முக்கியத்துவம் எதிர்காலத்தில் விரிவாக ஆராயபட வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது.

3. சோழர் ஆட்சியிலும் சோழர் ஆட்சிக்குப் பின்னரும் பொலநறுவைக்கு அப்பால் வடக்கு - கிழக்கு இலங்கையிலேயே சோழ ஆட்சியாளர். தமிழ் அதிகாரிகள். தமிழ் வணிக கணங்கள் முதலியோரால் கட்டப்பட்ட ஆலயங்கள் பற்றிப் பல தமிழ்க் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ஆயினும் அக்கல்வெட்டுக்கள் கூறும் ஆலயங்கள் எந்த இடங்களில் இருந்துள்ளன என்பது பெரும்பாலும் இதுவரை அடையாளம் காணப்படாமலே உள்ளன. ஆனால் திருமங்களாயில் ஆலயம் பற்றிய கல்வெட்டுக்களுடன். ஆலய அமைப்பையும். அதன் கலை மரபையும் அறியக்கூடிய அரிய பல ஆதாரங்கள் முதன் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள்



கிழக்கிலங்கை இந்துக்களின் வரலாறு, பண்பாடு பற்றிய எதிர்கால ஆய்வுகளில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

4. இலங்கையில் அநுராதபுர இராசதானியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சில பௌத்த ஆலயங்களே தற்காலத்திலும் வழிபாட்டிற்குரிய ஆலயங்களாகக் காணப்படுகின்றன. ஆனால் அநுராதபுரத்திலும். இலங்கையின் ஏனைய இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட பெரும்பாலான ஆதிகால. இடைக்கால ஆலயங்கள் இலங்கையின் மரபுரிமைச் சின்னங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பிற்காலத்தில் அவை சுற்றுலாத் துறையின் முக்கிய மரபுரிமை மையங்களாகவே செயல்பட்டு வருகின்றன. ஆனால் திருமங்கலாய் சிவன் ஆலயம் கி.பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து 1964 ஆம் ஆண்டு வரை அங்கு வாழ்ந்த மக்களின் பிரதான வழிபாட்டு ஆலயமாகவே இருந்துள்ளது. இந்த உண்மையை அவ்வாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களும். ஆலய மணியில் பொறிக்கப்பட்டிருக்கும் சாசனமும். அங்கு பரம்பரையாக வாழ்ந்து வந்த மக்களின் நில உரிமைப் பத்திரங்களும் உறுதிப்படுத்துகின்றன.

இவ்வாலயத்தின் பழமையையும். அதன் வரலாற்றுப் பெறுமதியையும் எமது ஊடகங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டியதைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட சக்தி தொலைக்காட்சி நிறுவனம் இவ்வாலயத்தை ஆவணப்படுத்த முன்வந்தது. இதற்காக அரச திணைக்கள அனுமதியுடன் அன்றைய சக்தி வானொலி அலைவரிசை பிரதானி திருமதி உமாச்சந்திரா







பிரகாஷ் தலைமையில் தற்போதைய சக்தி வானொலி அலை வரிசை பிரதானி ஆர்.பி. அபர்ணா சுதன். திரு.ஞா.கணாதீபன் முதலியோரைக் கொண்ட குழுவினரை திருமங்கலாய்க்கு அனுப்பி வைத்தது. அவர்கள் ஏழு மையில் தூரம் கால் நடையாகவும். உழுவு இயந்திரத்திலும் அச்சத்துடன் காட்டு வழியாகப் பயணம் செய்து திருமங்கலாய் சிவன் ஆலயத்தில் காணப்பட்ட அனைத்து ஆதாரங்களையும் ஆவணப்படுத்தினர். இவ்வரிய பணியால் ஆய்வில் ஈடுபட்ட எமக்கும். அங்கு கூடியிருந்த மக்களுக்கும். தனது காலத்திலேயே இவ்வாலயத்தை மீளுருவாக்கம் செய்திட வேண்டும் என அயராது உழைத்து வரும் திரு. வி.முத்துலிங்கத்திற்கும் பெரும்





மகிழ்ச்சியையும். நம்பிக்கையும் ஏற்படுத்தி இருந்தது.

இவ்வாலயத்தை ஆவணப்படுத்திய சக்தி தொலைக்காட்சி நிறுவனம் அது பற்றிய செய்தியை மக்களிடம் கொண்டு சென்ற போது இவ்வாலயம் பற்றி மேலும் அறிய வேண்டும். நேரில் பார்வையிட வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. இதை உணர்ந்து கொண்ட நாம் இவ்வாலயத்தை மீளுருவாக்கம் செய்து பாதுகாக்கும் நோக்கில் திருமதி உமாச்சந்திரா பிரகாஷ் அவர்களுடன் இணைந்து பல முயற்சியகளில் ஈடுபட்டோம் அதற்காக சம்பந்தப்பட்ட திணைக்களங்கள். அமைச்சின் அதிகாரிகள். கௌரவ இராஜங்க கல்வி அமைச்சர் மற்றும் கௌரவ பாராளமன்ற உறுப்பினர்கள் முதலியோரின் உதவிகளை நாடினோம். இலங்கைத் தொல்லியற் திணைக்களம் தனது அதிகாரிகளை அனுப்பி இவ்வாலயத்தின் பழமையை உறுதிப்படுத்திக் கொண்டது. மத்திய கலாசார நிதியம் ஆலயத்தை மீள்புனரமைப்புச் செய்வதைப் பரிசீலிப்பதாகப் பதில் அனுப்பியது. ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின்னர் எமது கோரிக்கைகளைச் சாதகமாகப் பரிசீலிக்க முன்வந்த அதிகாரிகளும் பதவி மாற்றம் செய்யப்பட்டதால் தற்போது எல்லா முயற்சிகளையும் நாம் ஆரம்பத்தில் இருந்தே தொடங்க வேண்டிய நிலையில் உள்ளோம். அதற்கு நாட்டின் தற்போதைய நிலையும் சாதகமாகக் காணப்படவில்லை.

இருப்பினும் விலைமதிக்க முடியாத எமது மரபுரிமைச் சின்னம் ஒன்று எம் கண்முன்னே மண்ணுக்குள் மறைந்து போவதை வேடிக்கை பார்க்கும் நிலையும் இல்லை என்றே நம்புகின்றோம். ஏனெனில் கடந்த முப்பது ஆண்டுகால அனர்த்தத்தில் பல தடவைகள் இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிய போது தமது இருப்பிடங்களைக் காட்டிலும் தமது வழிபாட்டு ஆலயங்களை மீளுருவாக்கம் செய்வதற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்த பெருமைக்குரியவர்கள். இது மதத்தின் மீது எமது மக்களுக்கு உள்ள அதித நம்பிக்கையைக் காட்டுகின்றது. ஆனால் திருமங்கலாய் சிவன் ஆலயம் ஒரு வழிபாட்டு ஆலயமாக மட்டும் பார்க்க முடியவில்லை. பலதரப்பட்ட மக்களின் பார்வையில் இவ்வாலயம் இலங்கையில் உள்ள தேசிய மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக நோக்கப்படலாம். ஆனால் இந்து மக்களைப் பொறுத்தவரை இவ்வாலயம் அவர்களின் எதிர்காலச் சந்தனரிடம் கையளிக்கப்பட வேண்டிய நம்பிக்கை நாற்று. அதற்கும் அப்பால் இலங்கையில் இந்து மதத்திற்கு நீண்ட வரலாறு உண்டு என்பதை அடையாளப்படுத்தும் விலைமதிக்க முடியாத மரபுரிமையின் அடையாளம். இம்மரபுரிமைச் சின்னங்களுக்குப் பின்னால் தமிழ் மக்களின் வரலாறும். பண்பாடும் பொதிந்து காணப்படுகின்றது. ஆகவே இவ்வாலயத்தை மீட்டெடுத்து. மீளுருவாக்கம் செய்து. பாதுகாக்க அனைத்து தமிழர்களும் ஒன்றிணைந்து உழைக்க முன்வர வேண்டும். இப்பணி அரசியல். பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. இந்த உண்மையை உரியவர்களிடம் கொண்டு செல்வதற்கு எமது தகவல் தொடர்புச் சாதனங்கள் தமது பணியை தொடர்ந்தும் செய்வார்கள் என்ற நம்பிக்கை எப்போதும் எமக்குண்டு.

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

உலக வணிகம் ULAGA VANIKAM
2024

LIST YOUR BUSINESS
ON OUR BUSINESS DIRECTORY

உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

தொலைபேசி எண்: 437.345.4203




விளம்பரம் என்பது
உங்கள் வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு

437.345.4203





# தமிழீழ உட்கட்டுமானம்

## STRUCTURES OF THAMILEELAM



**சுயநிறைவான தன்னில்தானே தங்கிநிற்கும் பொருளாதார வாழ்வுடைய சமூகமாக எமது சமூகம் உருவாகவேண்டும் என்பதே, எனது விரும்பம்: மக்கள் தம்மைத்தாமே ஆளும் உரியையுடைய சனநாயக ஆட்சி முறையையே நான் விரும்புகின்றேன். இந்தப் புதிய சமூகத்தில், உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவ வேண்டும்.**

**தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு. திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வெளியீடு**




## தமிழீழத்தின் கைத்தொழல் மையங்கள்

### சீமேந்துத் தொழிற்சாலை

தற்போது காங்கேசன்துறையிலும், புத்தளத்திலும் சீமேந்து தொழிற்சாலை இயங்கிவருகின்றது. புத்தளம் சீமேந்து தொழிற் சாலை இப்போதும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. காங்கேசன் சீமேந்து ஆலை உடனடியாகப் புனரமைப்பு செய்தால் எங்கள் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். காங் கேசன்துறை சீமேந்து ஆலை முழு அளவில் இயங்கத் தொடங் கிய பின் அடுத்த கட்டமாக முருங்கனில் சீமேந்து அரைக்கும் தொழிற்சாலை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இவ் ஆலைக்குத் தேவைப்படும் கிளிங்கர் காங்கேசன்துறை ஆலையிலிருந்து முருங்கன் ஆலைக்கு புகையிரத் மார்க்க மாகச் சரக்கு புகைவண்டி மூலம் அனுப்ப வேண்டும். இப்புகை யிரத வண்டி முருங்கனில் இருந்து காங்கேசன்துறைக்குத் திரும்பி வருகின்ற வேளை காங்கேசன்துறை ஆலைக்கு தேவையான களிமண்ணை எடுத்துக் கொண்டு வரலாம். இந்த மூன்று ஆலைகளும் முழுஅளவில் இயங்கினால் எங்கள் தேவைக்கு மேலதிகமாக உற்பத்தியாகும் சீமேந்துகளை ஏற்று மதி செய்ய வழிவகுக்கும். முருங்கனில் நிர்மாணிக்கப்படும் கிளிங்கரை அரைத்து பொதி கட்டும் ஆலையானது கிழக்கு மாகாணத்துக்குத் தேவைப்படும் சீமேந்து தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும்.

### உப்பும், உப்புச் சார்ந்த உற்பத்திப் பொருட்களும் (Salt Based Industries)

எமது தேவைக்கும் மேலதிகமான உப்பு தமிழீழத்தில் உற்பத்தி செய்யலாம். தமிழீழத்தில் உப்புச் செய்கை ஆனையிறவு, செம்மணி, கல்லுண்டாய், புத்தளம் ஆகிய இடங்களில் தற் போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. மேலதிகமாகப் புதிய உப்பளங்களை சாவகச்சேரி, வல்லை ஆகிய இடங்களில் ஆரம்பிக்கலாம். உப்பை நேரடியாக ஏற்றுமதி செய்து அதிக ளவு அந்நியச் செலாவணியைப் பெறமுடியாது. எனவே இரசாயனத் தொழிற்சாலை மூலம் உப்பை எரிசோடாவாகவும், குளோரீனாகவும், ஐதரோக்குளோரிக் கமிலமாகவும் மாற்றி எமது தேவையைப் பூர்த்தி செய்வதுடன் மேலதிக உற்பத் திகளை ஏற்றுமதி செய்யலாம்.

### உர உற்பத்தி

தமிழீழத்தில் உர உற்பத்தியானது சாத்தியமாகாத ஒன்றாகும். ஆனால் உரக்கலவை ஆலை (Mixing Plant) ஒன்று தமிழீழத் தில் மையமான ஓரிடத்தில் (Central Spot) அமைக்கப்பட வேண்டும். இதற்கு முருகண்டி அல்லது முழங்காவில் பொருத்தமான ஓர் இடமாகும். தமிழீழத்தின் தேவைகள் அனைத்தையும் ஒரே உற்பத்தி ஆலை மூலம் நிவர்த்தி செய்யக்கூடியதாக இருக்கும்.

### கடதாசி உற்பத்தி

தமிழீழத்திற்குத் தேவைப்படும் கடதாசி வகைகள் அனைத் தையும் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் வாழைச்சேனை கடதாசி ஆலை மூலம் பூர்த்தி செய்யலாம். காலக்கிரமத்தில் மற்றுமொரு கடதாசி ஆலை ஒன்றை தம்பலகாமத்தில் நிர் மானித்தால் மேலதிக உள்ளூர் தேவைகளைப் பூர்தி செய் வதுடன் மிதமிஞ்சியவற்றை ஏற்றுமதி செய்யலாம்.

### புகையிலை பதனிடும் நிலையங்கள்

புகையிலையானது தீவுப்பகுதி, வலிகாமம், வடமராட்சி, கைதடிப்பகுதிகளில் கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகிறது. புகையிலை பதனிடும் நிலையங்கள் சிறிய அளவிலும் பெரிய அளவிலும் இப்பகுதிகளிலேயே அமைந்துள்ளன. சுருட்டுச் செய்வதற்கான புகையிலை இங்கு செய்கை பண்ணப்படுகிறது. சிகரட் செய்வதற்கான புகையிலையும் இங்கே உற்பத்தி செய் யலாம். இது முன்பு பண்டத்தரிப்பு, அளவெட்டி, மாதகல், சுன் னாகம் ஆகிய இடங்களில் செய்கை பண்ணப்பட்டது. எமது பிரதேசத்தில் இருபது கோடி ரூபா வரை சிகரட்டுக்காகச் செல வழிகிறது. இப்பணத்தை நாமே சம்பாதிக்கலாம். பீடி தயாரிப் பதற்கான புகையிலையையும் இறக்குமதி செய்து பீடி உற்பத் தியில் தன்னிறைவு காணலாம். பீடிக்காக பத்துக்கோடி ரூபா வரை நாம் செலவிடுகிறோம். சிகரட்டுத் தயாரிப்பதற்கான கடதாசி, வடிப்புப்பகுதி என்பவற்றையும் இங்கே உற்பத்தி செய்யலாம்.

### புகையிலை பதனிடும் நிலையங்கள்

இவ்வாறான நிலையங்களை ஊர்காவற்றுறை, அனலைதீவு, புன்னாலைக் கட்டுவன், சுன்னாகம், பண்டத்தரிப்பு, அச்சுவேலி என்னும் இடங்களில் அமைக்கலாம்.

### புகையிலைப் பொருள் உற்பத்தித் தொழிற் சாலைகள்

இவ்வாறான தொழிற்சாலைகள் கோண்டாவில், சுன்னாகம், ஊர்காவற்றுறை, மானிப்பாய், யாழ்ப்பாணம் என்னும் இடங் களில் நிறுவப்படலாம்.

### இறப்பர் தொழிற்சாலைகள்

எமது பிரதேசத்தின் காலநிலைக்கேற்ப நன்கு பயிரிடக் கூடிய இறப்பர் இனங்களை இனங்கண்டு அவற்றை எமது ஆற்றங் கரைகளில் வளர்ப்பதற்கு முயற்சிக்கலாம். தேவையான இறப்பர் மூலப்பொருட்கள் இறக்குமதி செய்து இறப்பர் பொருளை இங்கே தயாரிக்கலாம். நாம் பயன்படுத்தும் இறப்பர் பொருட்களான:- வாகனங்களின் ரயர்கள், ரியூப்புகள், வோசர்கள், இறப்பர் பட்டிகள், யன்னல் கண்ணாடிகளைப் பொருத்துவதற்கான பட்டிகள், விளையாட்டுப் பொருட்கள், பலூன்கள், தரை விரிப்புகள், ஒயில்சீல்கள், குழாய்கள், மைநிரப்பிகள், அடைப் புகள், செருப்புகள், எல்லா வகையிலுமான கையுறைகள், பாதுகாப்புச் சப்பாத்துக்கள், நீந்துவதற்கான உபகரணங்கள், மின்குமிழ்கள், இறப்பரையும் வேறு பொருட்களையும் ஒட்டு வதற்கான குளம்புகள், விபத்தின் அதிர்ச்சியை தணிப்பதற்காக வாகனங்களிற் பொருத்தக் கூடிய அமைப்புகள், இறப்பர் மெத்தைகள், இறப்பர் பஞ்சுகள், வால்வுகள் என்பன. பேற் றோலியத்தை இறக்குமதி செய்து செய்கை இறப்பரையும் இங்கே தயாரித்துக்கொள்ளலாம். காங்கேசன்துறை, புங்குடு தீவு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இவ்வாறான தொழிற் சாலைகள் அமையலாம். வல்கனைஸ் இறப்பர் தயாரிப் பதற்கான தொழிற்சாலைகளையும் இங்கே அமைக்கலாம்.

### பால் பதனிடும் நிலையங்கள்

எமது பிரதேசத்தில் மேய்ச்சல் நிலங்களில், மாடுகள் கூடுதலாகக் காணப்படும் இடங்கள் பின்வருமாறு, கிளிநொச்சி, புதுக் குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டிசுட்டான், மாங்குளம், வவுனியா, நெடுங்கேணி, குஞ்சுக்குளம், முருங்கன், நானாட்டான், பழம்பாசி, மாமடு, மாமாங்கம், திருக்கோவில், தம்பலகாமம், கல்முனை, வாழைச்சேனை, ஏறாவூர், பொத்து வில், மட்டக்களப்பு, மூதூர் என்பனவாகும்.

கிளிநொச்சி, வவுனியா, தம்பலகாமம், மாங்குளம், புதுக் குடியிருப்பு என்னும் இடங்களில் புதிதாகப் பெரிய மேய்ச்சல் நிலங்களை அமைத்து பாரிய பாற்பண்ணைகளை அமைப் பதற்கான திட்டங்களை அங்கே ஆரம்பிக்கலாம். மேற்குறிப் பிட்ட அத்தனையும் பால் பதனிடும் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு ஏற்ற இடங்களாகும். இங்கெல்லாம் பாலை விற்கமுடியாமல் அதனை கறக்காமலே கூட விட்டுவிடு கின்றார்கள்.

### பாற்பொருட் தொழிற்சாலைகள்

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம், ஓமந்தை, மட்டக்களப்பு பகுதிகளில் பாரிய பாற்பொருள் உற்பத்தித் தொழிற்சாலைகளை அமைக்கலாம். இங்கே ஏற்கனவே நடைபெற்றுக்கொண் டிருக்கும் நெய் உற்பத்தியை விரிவுபடுத்தலாம். இதனுடன் கட்டிப்பால், பாற்பொடி, வெண்ணெய், பால் ஆடைக்கட்டி, யோகட், கெவிர், லசி என்பனவும் தயாரிக்கப்படலாம். வன்னிப் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட பால் வெல்லம் உற்பத்தி ஒரு முன்னோடி நடவடிக்கையாகும். மற்றைய இடங்களுக்கும் இதனை விஸ்தரிக்க வேண்டும். பாலாடைக்கட்டியானது மிக நீண்ட காலத்திற்குக் கெட்டுப்போகாமல் இருக்கக் கூடியது. மிகவும் விலை கூடிய பாலாடைக்கட்டி என்னும் இந்த உணவுப் பொருளைத் தரமாக இங்கே தயாரித்தால் அதனை ஏற்றுமதி செய்து பெருமளவு அந்நியச் செலவாணியைப் பெற்றுக்கொள் ளலாம்.

பாலாடைக்கட்டி தயாரிக்கத் தேவையான றெனெட் என்னும் நொதியத்தை இங்குள்ள இரசாயனவியல் நிபுணர்கள் தயாரிக் கலாம். வெண்ணெய், யோகட், கெபில், லசி என்பவற்றைத் தயாரிப்பதற்கான பக்டீரியாக்களை வெளிநாடுகளிலிருந்தும் பெற்று எம் உயிரியல் நிபுணர்கள் தம் ஆய்வுக்கூடங்களில் வளர்த்து உற்பத்தயாளர்களுக்கு விநியோகிக்கலாம். யாழ் குடாநாட்டில் வாழும் மக்களுக்கு வருடமொன்றுக்கு அறுபது இலட்சம் பக்கட் பால்மா தேவைப்படுகிறது. இதனை நாமே தயாரித்துக் கொள்ளலாம்.




பாற்பொருள் உற்பத்தித் தொழிற்சாலைகள் அமைய வேண்டிய இடம் ஏரி, பூச்சிகள் அதிகம் இல்லாதவாறு நகரங்களிலிருந்து சிறிது தொலைவில் தண்ணீர் வசதி, வடிகால் வசதி, போக்கு வரத்து வசதி தாராளமாக உள்ள இடங்களில் அமைக்கப்பட வேண்டும்.

## சீனித் தொழிற்சாலைகள்

**கருப்பஞ் சீனித் தொழிற்சாலைகள்**

கிளிநொச்சி, அக்கராயன், முல்லைத்தீவு, துணுக்காய், மல்லாவி, மூதூர், மட்டக்களப்பு பகுதிகளில் கரும்புச் செய்கை பண்ணப்படலாம். அவுஸ்திரேலியாவில் இருந்து வெள்ளை நிறமான சீனி பீற்றூட் விதைகளை இறக்குமதி செய்து அதன் உற்பத்தியை ஆரம்பிக்கலாம். பல நாடுகளில் இந்த வெள்ளை நிற பீற்றூட்டில் இருந்து சீனி வெற்றிகரமாகத் தயாரிக்கப் படுகின்றது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மூதூர் பகுதிகளில் கருப்பஞ்சீனித் தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டும்.

**பனஞ்சீனித் தொழிற்சாலைகள்**

அச்சுவேலி, சண்டிலிப்பாய் என்னும் இடங்களில் பனஞ்சீனி சிறிய அளவில் தயாரிக்கப்படுகின்றது. அங்கு போதிய ஊக்குவிப்பு வழங்கப்பட வேண்டும். பனஞ்சீனித் தொழிற்சாலை ஒன்று இப்போது கிளி நொச்சியில் அமைக்கப்பட்டு வருகின்றது. இது மாத மொன்றுக்கு ஒரு இலட்சத்து இருபதாயிரம் போத்தல் பதநீரைப் பயன்படுத்தி ஆறுதொன் பனஞ்சீனியை உற் பத்தி செய்யக்கூடியது. இதனை பத்துத் தொன்னாக அதிகரிக்கலாம். வருடத்தில் ஆறு மாதங்களுக்கு இவ்வாறு உற்பத்தி செய்ய முடியும்.

**சீனித்தேவை**

எம் மக்களின் சீனித் தேவை ஆண்டொன்றுக்கு பதின்மூவாயிரத்து நூற்றி நாற்பது (13,140) மெற்றிக் தொன் ஆகும்.

**ஐந்தாண்டுத்திட்ட அமுலின் பின்**

பனஞ்சீனி உற்பத்தி 3,600 மெற்றிக் தொன் மிகுதி 9,540 மெற்றிக் தொன் சீனியைக் கரும்பில் இருந்து உற்பத்தி செய்யலாம்.

## ஆடைத்தொழிற்சாலை

ஆடைத்தொழிற்சாலைகள் அமைப்பதற்கு முன்னோடி யாக அப்பகுதியில் பருத்திப் பயிர் செய்ய வேண்டும். கிளிநொச்சி, ஓமந்தை, முல்லைத்தீவு, துணுக்காய், மூதூர், மட்டக்களப்பு பகுதிகளில் பருத்தி செய்கை மேற் கொள்ளலாம். கிளிநொச்சி, ஓமந்தை, முல்லைத்தீவு, துணுக்காய், மல்லாவி, மூதூர், மட்டக்களப்பு, மன் னார், வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, என்னும் இடங்களில் அப்பஞ்சில் இருந்து நூல் நூற் றவும், துணிகள் நெய்யவும், ஆடைகள் தயாரிக்கவும், தொழிற்சாலைகள் அமைக்கலாம். எமது பகுதியிலே முன்னொரு காலத்தில் கைத்தறிகள் எங்கும் பரவி இருந்து உற்பத்தி மேற்கொண்டன.

## பட்டு உற்பத்தி

மேற்கூறிற இடங்களுடன் யாழ்ப்பாணத்திலும், முசுக் கட்டைச் செடிகளை வளர்ந்து பட்டுப்பூச்சி வளர்ப் பையும் ஆரம்பிக்கலாம். பட்டு உற்பத்தி தொழிற் சாலைகளில் பட்டாடை உற்பத்தி தொழிற்சாலை களையும் மேற்கூறிய பகுதிகளில் அமைக்கலாம்.

## றேயன் உற்பத்தி

கிளிநொச்சி, மாங்குளம், ஓமந்தை, முருங்கள், முல் லைத்தீவு, மட்டக்களப்பு பிரதேசங்களில் வனவளம் மிக்க பகுதிகளுக்கு அருகில் இவ்வாறான தொழிற் சாலைகள் அமைக்கப்படலாம். றேயன் உற்பத்திக்கு முக்கிய மூலப் பொருள் மரக்கூழாகும். இதனை விஸ்கோஸ் முறை எனப்படும். இம்முறையிலே பல இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இங்கிருந்து பெறப்படும் றேயனைக்கொண்டு துணி நெய்யக் கூடியளவும், ஆடை தயாரிக்கக்கூடிய அளவும் தொழிற்சாலைகளை இந்த நகரங்களில் யாழ்ப் பாணம், திருகோணமலை, வவுனியா, மன்னார், மாங்குளம் என்பவற்றிலும் அமைக்கலாம்.

தொடரும்...

**முக்கிய அறிவித்தல்**

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின்
நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள்
அறிவித்தல்களையும்,
மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

விளம்பரம் என்பது
உங்கள் வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு
437.345.4203

# வெளிவந்துவிட்டது

உலக
# வணிகம்
ULAGA VANIKAM

2023




## விளம்பரமின்றி வியாபாரமில்லை

தங்கள் வணிகத்தை மேம்படுத்திக்கொள்ள உலக வணிகத்தில்
உங்கள் விளம்பரமும் இடம்பெற அழையுங்கள்

www.ulagavanikam.ca

437-345-4203

# பிச்சையெடுக்கச் சுதந்திரம்?

11.02.2023



"நான் பேசப்போவது எமக்கு கிடைத்த சுதந்திரத்தைப் பற்றி அல்ல. இன்று நாம் இழந்திருக்கும் சுதந்திரத்தை மீளப் பெறுவது பற்றியே நான் பேசப்போகிறேன்" இப்படிப் பேசியிருப் பவர் நாட்டின் ஜனாதிபதி. நடந்து முடிந்த சுதந்திர தின விழாவில் அவர் ஆற்றிய உரை அது. நாங்கள் சுதந்திரத்தை இழந்து விட்டோம் என்று ரணில் விக்கிரம சிங்க கூறுகிறார். இதை எப்பொழுது கூறு கிறார்? ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்து 13 ஆண்டுகளின் பின் கூறுகிறார். ஆயின், 2009 ஆம் ஆண்டு ராஜபக்ச சகோதரர்கள் வென்று கொடுத்த சுதந்திரம் எங்கே? அல்லது அது சுதந்திரமே இல்லையா?

ராஜபக்சக்கள் யாருக்காக நாட்டை மீட்டுக் கொடுத்தார்களோ, அந்த மக்களே இப்பொழுது நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக் கிறார்கள். அதைத் தனது உரையில் ரணில் குறிப்பிடு கிறார். அதன்பின் நான்கு நாட்கள் கழித்து நாடாளுமன்றத்தில் கொள்கை விளக்க உரையிலும் அவர் அதைக் குறிப்பிடுகிறார். நாட்டை விட்டுப் போகாதீர்கள் என்று. அண்மையில் முகநூலில் ஒரு மூத்த தமிழ் அரசியல் செயற்பாட்டாளரின் மகன் ஒரு பதிவைப் போட்டிருந்தார். தான் சந்திக்கும் பெரும்பாலான நண்பர்கள் எப்படி நாட்டை விட்டு வெளியேறலாம் என்பதைப் பற்றியே கதைக்கிறார்கள் என்று அவர் குறிப்பிட் டிருந்தார். இறுதிக்கட்டப் போரில் வன்னி கிழக்கில் வசித்த ஒரு ஊடக வியலாளர் சொன்னார்... அக்காலகட்டத்தில் ஒன்றில் சாலை கடற்கரையை அல்லது வங்கக் கடலைப் பார்த்தபடி எந்த வழியால் தப்பி போகலாம்? எப்பொழுது தப்பி போகலாம்? என்று சிந்தித்ததை ஒத்த நிலைமை இது. அக்காலகட்டத்தில் பெரும் பாலான பொது மக்கள் தப்பிப்போவதைப் பற்றியே சிந்தித் தார்கள். 13 ஆண்டுகளின் பின் இப்பொழுது நாடு முழுவதும் அந்த நிலைமை வந்திருக்கிறது.

ஆயின், ராஜபக்சக்கள் வென்று கொடுத்த சுதந்திரம் எங்கே? அல்லது அது சுதந்திரமே இல்லையா? அதைச் சாப்பிட முடியாதா? அதை வைத்து உழைக்க முடியாதா?

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை ராஜபக்சக்கள் தோற் கடித்தார்கள். ஆனால் அதற்காக அவர்கள் எந்தெந்த நாடுகளிடம் கையேந்தினார்களோ அந்த நாடுகளிடம் நாட்டில் ஏதோ ஒரு பகுதியை அல்லது ஏதோ ஒரு வளத்தை இழந்து விட் டார்கள். சீன விரிவாக்கம், அதற்கு எதிரான இந்தோ பசிபிக் வியூகம், குவாட் வியூகம் என்பதற்குள் இச்சிறிய நாடு சிக்கி விட்டது. நாட்டின் துறைமுகங்களில் ஒன்றாகிய அம்பாந் தோட்டை துறைமுகத்தை சீனா 99 ஆண்டு களுக்கு குத் தகைக்கு எழுதி பெற்றுக் கொண்டு விட்டது. கொழும்புத்துறை முகத்துக்கு அருகே சீனா ஒரு துறைமுகப் பட்டினத்தைக் கட்டி யெழுப்பிவிட்டது. அத்துறைமுகப் பட்டினத்துக்கு நாட்டில் உள்ள மாகாண சபைகளை விடவும் சில அதிகாரங்கள் விசேஷமாக கொடுக்கப் பட்டிருப்பதாக விமர்சிக்கப்படுகிறது. தன் சொந்த மக்களுக்கு கொடுக்கத் தயாரற்ற அதிகாரங் களை பிறத் தியாருக்கு கொடுக்கிறது சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பு. ஒரு காலம் தேரவாத சிங்கள பௌத்தத்தின் மரபுரிமை சின் னங்களே இந்த நாட்டின் அடையாளங்களாக இருந்தன. ஆனால் இப்பொழுது சீனா கட்டிக் கொடுத்த தாமரை கோபுரந் தான் நாட்டின் நவீன அடையாளமாக மாறியிருக்கிறது. சீன விரிவாக்கத்தின் பலனாக இலங்கை தீவின் வரைபடமே மாறிவிட்டது.




சீன விரிவாக்கத்துக்கு எதிராக இந்தியா தனது நிலைகளை இச்சிறிய தீவுக்குள் பலப்படுத்த முற்படுகின்றது. குறிப்பாக வடக் கில் கடலட்டை ஒரு ராஜதந்திரக் கருவியாக மாறிவிட்டது. அது மட்டுமல்ல போரை வென்ற ராஜபக்சக்களின் சுதந்திரம் பெரு மளவுக்கு நாட்டுக்குள்ளேயே சுருங்கத் தொடங்கிவிட்டது. அமெரிக்க கண்டத்தின் இரு பெரிய நாடுகளில் அவர்கள் பயணம் செய்யவும் சொத்துக்களை முதலீடு செய்யவும் தடை உருவாகியிருக்கிறது. அதுபோன்ற தடைகள் ஐரோப் பாவுக்கும் பரவக்கூடும். ராஜபக்சங்களுக்கு அமெரிக்க கண்டத்தில் மட்டும் தடையில்லை, உள்நாட்டிலும் அவர்களுக்கு கடந்த ஆண்டு பாதுகாப்பு இருக்கவில்லை. அதனால்தான் மூத்த ராஜபக்சக்கள் நாட்டின் படைத்தளங்களில் ஒழிந்தார்கள். அல்லது நாடு விட்டு நாடு ஓடிக்கொண்டிருந்தார்கள். சொந்த நாட்டிலேயே அவர் களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது. அவர்கள் வென்று கொடுத்த நாட்டிலேயே அவர்களுக்கு நிம்மதியாக உறங்க முடியாமல் போய்விட்டது. ஏன் இந்த நிலை வந்தது? அப்படி யென்றால் அவர்கள் பெற்ற வெற்றியின் பொருள் என்ன?



யுத்தந்தான் நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கியது என் றால், யுத்தம் முடிந்த பின்னரும் ஏன் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியவில்லை? நாடு ஏன் அதன் முதலீட்டுக் கவர்ச்சியை இழந்தது?

ஏனென்றால் யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்ற முடியவில்லை. அப்படி மாற்றவும் முடியாது. ஏனென்றால் நாட் டின் மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதியினரை பூச்சி, புழுக்களைப் போல கொன்று குவித்துப் பெற்ற வெற்றியது. ஒரு இனப் படுகொலையை அரசியல் தீர்வாக மாற்ற முடியாது. மாறாக இனப்படுகொலைக்கு எதிரான நீதிதான் அரசியல் தீர்வாக அமைய முடியும். அதைத்தான் தமிழர்கள் கேட்கிறார்கள். முழுமையான 13ஐ அல்ல.

ரணில் விக்கிரமசிங்க சுதந்திர தினத்துக்கு முன்னதாக இனப் பிரச்சினைக்கான தீர்வில் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிடப் போவதாக எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தினார். ஆனால் சுதந் திரதின விழாவன்று அவரால் அப்படிப்பட்ட அறிவிப்பு எதனையும் வெளியிட முடியவில்லை. அவர் கொழும்பில் 200 மில்லியன் ரூபாய் செலவில் சுதந்திர தினத்தை கொண்டாடிய பொழுது, தமிழர் தாயகத்தில் சுதந்திர தினம் ஒரு கரி நாளாக அனுஷ்டிக்கப்பட்டது. வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி தமிழ் மாணவர்கள் ஊர்வலம் போனார்கள்.

தமிழ் மக்கள் சுதந்திர தினத்தை கரி நாளாக அனுஷ்டிப்பது இதுதான் முதல் தடவையல்ல. கடந்த பல தசாப்தங்களாக அவர்கள் அவ்வாறுதான் அனுஷ்டித்து வருகிறார்கள். 1957



ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி சுதந்திர தினத்தை கரி நாளாக அனுஷ்டிக்குமாறு கேட்டது. அந்த அழைப்பை ஏற்று திருமலையில் நடராஜன் என்றழைக்கப்படும் இளைஞர் மணிக்கூட்டுக் கோபுரத்தில் ஏறி கட்டப்பட்டிருந்த சிங்கக் கொடியை அகற்றி கறுப்பு கொடியை கட்ட முற்பட்டார். அவரை திருக்கோணமலை சந்தையில் வியாபாரஞ் செய்த ஒரு சிங்களவர் வேட்டைத் துவக்கினால் சுட்டு வீழ்த்தினார். இன்றுவரை யிலும் நடராசனுக்கு நீதி கிடைக்கவில்லை. தமிழ் மிதவாதிகளால் தூண்டிவிடப்பட்டு தமிழ் இளையோர் எத்துணை துணிகரமான செயல்களில் இறங்கமுடியும் என்பதற்கு நடராசன் முதலாவது முன்னுதாரணம்.தமிழ் மக்களின் போராட்டத்தில் முதல்வித்து அவர். நடராசனுக்குப் பின் அவ்வாறு துணிச்சலாகத் தங்கள் உயிர்களை, உறுப்புகளை, சொத்துக்களை, கல்வியை, இழந்த தியாகிகளின் மிகநீண்ட பட்டியல் தமிழ்மக்களிடம் உண்டு. ஆனாலும் நடராசன் சுட்டு வீழ்த்தப்பட்டு 65ஆண்டுகளின் பின்னும், தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. சுதந்திர தினம் கரிநாளாகவே காணப்படுகிறது.



ஆனால் நடராசனை கறுப்புக்கொடி ஏந்துமாறு தூண்டிய தமிழ் மிதவாதிகளின் வழிவந்தவர்கள் பின்னாளில் தாங்களே சுதந்திரதின விழாவில் தேசியக் கொடியை கைகளில் ஏந்தி அசைத்தார்கள். கொல்லப்பட்ட நடராசனை அதைவிடக் கேவலமாக அவமதிக்கமுடியாது. அவ்வாறு ரணில் விக்கிரமசிங்கவின் நல்லாட்சி காலகட்டத்தில், சுதந்திரதின விழாவில் பங்குபற்றிய தமிழ்த் தலைவர்கள், இப்பொழுது மட்டக்களப்பில் காந்தி பூங்காவில் காந்திக் குல்லாயும் கறுப்புக் கொடியுமாக நிற்கிறார்கள். அவர்கள் எதற்காக காந்திக் குல்லாய் அணிந் தார்கள் என்று தெரியவில்லை. ஆனால் அவர்களுடைய நடப்பு அரசியலை வைத்து பார்க்கும்போது, அவர்களுடைய தோற்றம் வினோத உடைப் போட்டியில் வேசமிட்டு வந்தவர்களைப்போல காணப் பட்டது. அவர்கள் விதவிதமான வினோத உடைகளை அணிந்து தமிழ் மக்களைக் கவர முயற்சிக்கிறார்கள்.

ஒருபுறம் தமிழ் அரசியல்வாதிகள், அரசியலை வினோத உடைப் போட்டியாக மாற்றுகிறார்கள், இன்னொருபுறம் ஜனாதிபதி ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு தருவேன் என்கிறார். கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் போலீஸ் அதிகாரம் தொடர்பில் இப்போதுள்ள நிலைமைகளில் மாற்றம் இல்லை என்று கூறுகிறார். அதாவது 13 மைனஸ்? அதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் தமிழ் மக்களுக்கு போலீஸ் அதிகாரத்தைப் பெறும் சுதந்திரம் இல்லை. ஒற்றையாட்சிக்கு உட்பட்ட ஒரு தீர்வைப் பெறும் சுதந்திரந்தான் உண்டு. ஆனால் அதைக் கூறியது யாரென்றால் சுதந்திரமில்லாத ஒரு நாட்டின் தலைவர்?

புவிசார் அரசியல் விளக்கங்களின்படியும், பூகோள அரசியல் விளக்கங்களின்படியும் ஒரு பிராந்தியப் பேரரசின் செல்வாக்கு மண்டலத்தில் காணப்படும் ஒரு சிறியநாடு முழு அளவுக்கு சுதந்திரமானதாக இருக்க முடியாது. ஆனால் அச்சிறிய நாடு வெளிச்சக்திகள் தலையிட முடியாதபடி உருகிப்பிணைந்த ஒரு நாடாக இருந்தால், அது ஒப்பீட்டளவில் ஆகக்கூடிய பட்சம் சுதந்திரமாக இருக்கலாம். சிறிய நாடுகளைப் பொறுத்தவரை சுதந்திரத்தின் அளவு என்பது ஐக்கியத்தின் அளவு தான் நல்லிணக்கத்தின் அளவுதான். அந்தநாட்டில் வாழும் எல்லா மக்கள் கூட்டங்களையும் அந்த நாட்டின் சகநிர்மாணிகளாக ஏற்றுக்கொண்டு பல்லினத்தன்மைமிக்க ஒரு நாட்டைக் கட்டியெழுப்பினால், அது ஆகக்கூடியபட்சம் சுதந்திரமாக இருக்கலாம். இல்லையென்றால் தனக்குள் மோதிக் கொண்டிருக்கும் ஒரு நாட்டை வெளிச்சக்திகள் வேட்டையாடும். அதுவும் இலங்கை போன்று மூன்று பேரரசுகளின் இழுவிசைகளுக்குள், கேந்திர முக்கியத்துவம் மிக்க ஒரு ஜல சந்தியில், காணப்படும் மிகச்சிறிய நாடானது, தனக்குள் அடிபடுமாக இருந்தால் அது பேரரசுகள் பங்கிடும் ஓர் அப்பமாக மாறிவிடும். அதுதான் இப்பொழுது நடக்கிறது.

இலங்கைத்தீவு இப்பொழுது ஒரு சுதந்திரமான நாடு அல்ல. இறைமையுள்ள நாடும் அல்ல. தமிழ் மக்கள் சுதந்திரமாக இல்லாதவரை சிங்கள மக்களும் சுதந்திரமாக இருக்கமுடியாது என்பதைத்தான் கடந்த 13ஆண்டுகளும் நிரூபித்திருக்கின்றன.

போரில் வெற்றி பெற்ற பின்னரும் ஏன் இந்த நாடு சுதந்திரமாக இருக்க முடியவில்லை? ஏன் இந்த நாடு செழிப்பாக நிமிர முடியவில்லை? தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை தோற்கடித்த பின்னரும் தமிழ் அரசியலை முன்வைத்து ஏன் ஜெனிவாவில் ஒவ்வொரு ஆண்டும் பதில் கூற வேண்டியிருக்கிறது? வடக்கில் கடலட்டை எப்படி ஒரு ராஜதந்திரக் கருவியாக மாறியது? ஆயுத மோதல்களில் வெற்றி பெற்ற பின்னரும் இந்த நாடு ஐ.எம்.எப் போன்ற அனைத்துலக நிறுவனங்களின் சொற்கேட்டு கீழ்ப்படியும் ஒரு நிலைமை ஏன் ஏற்பட்டது?

இலங்கை அதன் 75வது சுதந்திர தினத்தை கொண்டாடும் ஒரு காலகட்டம் எனப்படுவது ஐ.எம்.எப். போன்ற வெளித்தரப்புகளிடம் கடன்கேட்டுக் கையேந்தும் ஒரு காலமாகவே காணப்படுகிறது. இவ்வாறு வெளிநாடுகளிடமும் உலகப்பொது நிறுவனங்களிடமும் கையேந்தும் ஒருநாடு தன்னை சுதந்திரமான நாடாக கூறிக்கொள்ள முடியுமா? கார்ல் மார்க்ஸின் வார்த்தைகளிற் சொன்னால் "ஒடுக்கும் இனம் என்றைக்குமே நிம்மதியாக இருக்கமுடியாது".அது சுதந்திரமாகவும் இருக்க முடியாது. ஒரே ஒரு விடயத்தில்தான் இப்போதைக்கு சுதந்திரமாக இருக்கலாம். பிச்சையெடுப்பதற்கான சுதந்திரம்.

நன்றி: நிலாந்தன்

# தேசியம் வரலாற்றின் தவிர்க்கப்படவியலாத ஒரு கட்டம்

*உலகில் ஒரு சாரரால் மிகவும் பிழையாக விளங்கிக் கொள்ளப்பட்ட விடயங்களில் ஒன்றாய் 'தேசியவாதம்' உள்ளது. 'தேசியவாதம்' குறுகிய மனப்பாங்கு கொண்டதென்றும், அது பிற்போக்கானது என்றும், அது கைவிடப்பட வேண்டியதென்றும் இன்று கொழும்புவாழ் தமிழ், சிங்களப் புத்திஜீவிகள் சிலர் அடுக்கடுக்காய் கருத்துக்களை முன்வைக்கின்றனர். மேற்குலகிலும் இவ்வாறான கண்ணோட்டம் கொண்டோர் உளர்.*

*அண்மைக்காலத்தில் வெளியான இத்தகைய பிழையான கருத்துக்களைக் கண்டு விசனமுற்ற சிலர் இதுபற்றிய ஒரு கண்ணோட்டத்தைக்குறிப்பாக இளம் தலைமுறையினர் மத்தியில் முன் வைக்கவேண்டியது அவசியம் என்று கூறிக் கொண்டதன் விளைவே இக் கட்டுரையாகும். இதில் தனித்தனியாக பெயர்களை குறிப்பிட்டோ, அல்லது அவரவர் கருத்துக்களை தனித்தனியாக எழுதியோ ஒரு பெரும் வாதப் பிரதிவாதம் புரிவதை விடவும் கருத்துக்களைப் பொதுமைப்படுத்தி நேர் கணியமான ஒரு கண்ணோட்டத்தை மிகச் சுரக்கமாக முன் வைப்பதாகவே இக்கட்டுரை அமைகின்றது.*

*மு. திருநாவுக்கரசு (25.02.1999)*

தேசியவாதம் மிகவும் சிக்கலானது இதனை விளங்குவதும் விளக்குவதும் சிரமமானது என்று ஒரு பொதுவான அபிப்பிராயம் உண்டு. இதில் உள்ள பிரதானமான பிரச்சனை, இது பிழையாக விளங்கிக் கொள்ளப்பட்டதிலிருந்தே ஆரம்பமாகின்றது.

தேசியவாதத்தை அதன் கருப்பையில் இருந்தும் அதன் இயல்பில் இருந்தும் அடையாளம் காணல் அவசியமாகின்றது. மனித குலம் கண்டகொண்ட மிகவும் முன்னேற்றகரமான விடயங்களில் ஒன்றாய் தேசியம் உள்ளது. இது சில வேளைகளில் பிழையாகப் பிரயோகிக்கப்பட்டு இனவெறியாகவும் மேலாதிக்க வாதமாகவும் ஆக்கிரமிப்பு வாதமாகவும் மாறிய உதாரணங்கள் உள்ளன. இங்குள்ள பிரச்சனை என்னவெனில் இனவெறி, மேலாதிக்க வாதம், ஆக்கிரமிப்பு வாதம், என்பவற்றை தேசியத்திலிருந்து பிரித்து இனம் காண வேண்டுமே தவிர இவற்றைத் தேசியத்துடன் சேர்த்துக் குழப்பக்கூடாது. அடுத்து தேசியத்தை ஒரு குறுகிய வாதம் என்று கூறுவோர். அதனை பிழையாக விளங்கிக் கொண்டோரும், ஒரு வரலாற்றுக் கால கட்டத்தில் சகல மனிதக் கூட்டமும் அதனை அடைந்தே ஆகவேண்டும். என்பதைத் தெரிந்து கொள்ளாதவர்களுமேயாவார். தேசிய வாழ்வைப் பூர்த்திசெய்யாமல் அடுத்த கட்ட வளர்சிக்கு இடமில்லை. அவ்வாறு வளர்வதாக யாரும் சொல்வார்களேயானால் அது ஒரு குறை விருத்தியே தவிர வேறில்லை. அதாவது குறைவிருத்தி என்பது பொருந்தாத வளர்ச்சி அல்லது சூம்பிய உடம்பிற்கு கனமான பெருத்த தலை போன்றதே அது.

நவீன் அத்தத்தில் தேசியத்தின் தொட்டில் மேற்கு ஐரோப்பாவாகும். தேசிய சமூகமும் தேசிய வாழ்வும் மனித குலம் அதுவரை கண்டறிந்த முன்னேற்றங்களில் ஒரு சிறப்புக் கூறாகும். மனிதன் என்றால் கூட்டுவாழ்வைக் கொண்டவன். கூட்டு வாழ்வின்றி எந்தவொரு மனிதனாலும் (தெய்வமே மனிதனாய் பிறந்தாலும் கூட) ஓர் அங்குலம் தானும் முன்னேறமுடியாது. மனிதனது கூட்ட வாழ்வில் அவனது ஆகச் சிறிய அலகு குடும்பமென்றால் கூட்டு வாழ்வின் ஒரு முக்கிய பெரிய அலகு தேசியமாகும். குடும்பம், கூட்டுக் குடும்பம், கிராமம், இனக்குழு எனப் பல கூட்டு வாழ்வு அலகுகள் உள்ளன. இந்தவரிசையில் பெரிய கூட்டலகாய் தேசியம் உள்ளது.

குடும்பம் எனும் தொடக்கக் கூட்டலகு தனது வாழ்விற்கும் வளர்ச்சிக்குமாக அடுத்த பெரிய கூட்டலகுடன் கூடி இசைவு படுகிறது. இதனை விடவும் வளர்ச்சிக்கு இன்னொரு பெரிய அலகு தேவைப்படும் போது அந்த அலகைத் தாண்டி அல்லது கரைத்து அடுத்த பெரிய அலகுடன் குடும்பம் தன்னை இணைத்து இசைவுபடுத்திக்கொள்கிறது. இந்த வகையில் குடும்பம் எனும் தொடக்க அலகு தன்னை இணைத்துக் கொள்ளும் பெரிய கூட்டலகாய் தேசியம் உள்ளது. (குடும்பம் எனும் தொடக்க அலகு சர்வதேசியத்தின் உச்ச வளர்ச்சியில் பரிணாம ரீதியில் கரைந்து போய்விடும் என்ற ஒரு கருத்து உண்டு இக் கட்டுரையின் தேவையில் அது விவாதத்துக் குரியதல்ல.)

இனக்குழு வாழ்வுமுறை, வட்டார வேறுபாடு (பிரதேச வேறுபாடு) பரம்பரை அந்தஸ்து (உதாரணம் நேரு பரம்பரை, பண்டாரநாயக்கா பரம்பரை) பிறப்பால் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற நிலைபோன்ற இத்தகைய வேறு பாடு மிக்க அலகுகளைத் தகர்த்து தேசியம் எனும் ஒரு வட்டத்துக்குள்




அனைவரும் ஒருவருக்கொருவர் சமதை ஆனவர் என்பதுடன் ஒரு தேசியத்துடன் மற்றைய தேசியம் உயர்வு தாள்வின்றி சமதையானது என்பதே தேசிய வரலாற்றின் குறிக்கோளாகும். தேசியத்தின் அடிப்படையில் அனேகருக்கும் பொதுவான வாழ்வுமுறை அரசியல் சமூக விடயங்களில் சாமானியர்களின் சகாப்தத்தை தோற்றுவித்தமை என்பன தேசியத்தின் சிறப்பம்சங்களாகும்.

பல்வேறு அடிப்படைகளை தனித்தனியே சிறு சிறு குழுக்களாக வாழ்ந்துவந்த மனிதர்களின் குறுகிய எல்லைகளைத் தகர்த்து ஒரு தேசிய அடையாளத்தின் கீழ் ஒரு பெரும் வெகுஜனத்திரட்சியை உருவாக்கியமைதான தேசியவாதமாகும். இத்தகைய வெகுஜனத்திரட்சியை ஐரோப்பாவில் கைத்தொழில் வளர்ச்சியே சாத்தியமாக்கியது. அதாவது கைத்தொழில் வளர்ச்சிதான் மூலப் பொருட்களை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு நகர்த்தவும் ஒன்று திரட்டவும் பின்பு பண்டங்களை உற்பத்தி செய்து அவற்றை பரந்த அடிப்படையில் விநியோகிக்கவும் சந்தைப் படுத்தவும் இதன் நிமித்தம் போக்குவரத்துச் சாதனங்களினாலும், போக்குவரத்து வீதிகளினாலும், தொலைத் தொடர்பு சாதனங்களினாலும் மனிதன் இடையறாது ஒருவருடன் ஒருவர் தொடர்பு படவும் ஒன்று குவியமும் முடிந்தது. இவ்வாறு உருவான வெகுஜன திரட்சிக்கேற்ப வெகுஜன அரசியல் உட்பட பல்வேறு வெகுஜன பண்புகள் தோன்றின. நிலத்துடன் ஒட்டிக் கொண்டிருந்த கிராமிய, நிலப்பிரபுத்துவ உள்ளொடுங்கிய வாழ்விற்குப் பதிலாக நிலத்திலிருந்து பிடுங்கப்பட்டு எங்கும் நகர்ந்து இடையறாது பல்வேறு புதிய தேடல்களுடன் மனிதன் குவிகின்ற வெகுஜன பண்பைத்தான் நாம் தேசிய கலாச்சாரம் என்று கூறுவோம். அதாவது பழைய சிறு வட்டவாழ்வையும் அதன் குறுகிய உறவுகளையும் உடைத்து தேசிய அடிப்படையில் குவியும் பெரிய பெரிய சனத்திரட்சிக்கு ஏற்ற ஒத்துப் போதலையும் அதற்குப் பொருத்தமான பழக்க வழக்கங்களையும் அதற்கேற்ற புதிய ஒழுங்குகளையும் சட்டதிட்டங்களையும் சேர்த்தே தேசிய கலாச்சாரம் என்று அழைக்கின்றோம். சிலர் கலாச்சாரம் என்ற உடன் ஆடை, அணிகலன்களையும் மேளதாளங்களையும் கொண்டாட்டங்களையும் நினைக்கிறார்கள்.

ஒரு தேசியத்திலிருந்து இன்னொரு தேசியத்தை வேறுபடுத்தி அடையாளம் காண உதவும் சில பண்பாட்டுக் குறியீடுகள் தான் இவை. ஆனால் இவைகள் மட்டுமே பண்பாடாகி விடாது. அதாவது தனித்துவமான தேசிய அடையாளங்களளுடன் கூடியதும் புதிதானதுமான வெகுஜனத் திரட்சிக்கேற்ப புதிய அரசியல், பொருளதார, சமூக பண்பாட்டினைத் தான் தேசியப் பண்பாடு என்கிறோம்.

சிறிய குழு அலகிலிருந்து வெகுஜனத் திரட்சியை நோக்கிய வெடிப்பு (உடைப்பு) ஏற்பட்டுச் செல்கையில் அத்தகைய உடைப்பானது மதம், அல்லது மொழி, அல்லது இனம் (உடல் அமைப்பு வேறுபாடு) அல்லது பெரிய அளவினதான பிரதேச தனித்துவம் என்ற எல்லை வரை விரிந்து ஆனால் அந்த எல்லையை உடைக்க முடியாத விடத்து அத்தகைய எல்லையின் பெயரால் (மொழி, மதம், இனம் என்பதன் பெயரால்) தம்மை ஒரு தேசியம் என அழைத்துக்கொள்ளுதலும், அந்தத் தேசியத்துள் அனைவரும் ஒருவருக்கொருவர் சமனானவர் என்பதுடன் ஒரு தேசியம் மற்றுமொரு தேசியத்துக்கு சமனானதும் என்பதே தேசிய வாதமாகும். இதனால் தேசிய வாதமென்பது முற்றிலும் வெகுஜனத் தன்மை கொண்டதும் (ஜனநாய உள்ளடக்கம் கொண்டதும் என்பதாகும்). சம உரிமை உண்டு என்பது ஒருவர் தனக்கு இருப்பது போன்ற அதே உரிமை மற்றவருக்கும் இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்வது. அதே போல ஒரு தேசியத்திற்கு இருக்கும் உரிமை போலவே மற்றத் தேசியத்திற்கும் உரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொள்வது என்ற ஒரு புதிய கலாச்சாரத்தையே தேசிய ஜனநாயகம் என்கிறோம்.

சிறு உள் வட்ட எல்லைகளை உடைத்துக்கொண்டு போகும் பாதையிலே மேற்கூறியவாறு மொழி, மதம் போன்ற பெரிய எல்லையில் தேசியம் தடைசெய்யப்பட்டு நின்றுவிடுவதால் பல தேசியங்கள் தோன்றவேண்டியிருந்தன. இவையே பிரிட்டிஸ் தேசியம், பிரெஞ்சுத் தேசியம், ஸ்பானியத் தேசியம், டச்சுத் தேசியம் எனத் தேசியங்கள் பலவாகக் காணப்படுகின்றன. எனவே தேசியத்தின் இறுதி எல்லையாக மதம் அல்லது மொழி அல்லது இனப்பிரதேசத் தனித்துவம் என்பன கூட்டாகவோ அன்றித் தனியாகவோ தேசியத்தின் புறஉருவ எல்லை களாயின. மேற்கூறிய அடிப்படையில் தேசியத்தை மூன்று முக்கிய அலகுகளாக வகுக்கலாம்.

**1. புறவுருவ எல்லை:**

மொழி, மதம் பிரதேசத் தனித்துவம் இனப் பண்பு போன்ற வகை

**2. அகவளர்ச்சி:**

புறவுருவ எல்லைக்குள் இடம் பெறுவதாகிய தேசிய ஐக்கியம், தேசிய ஒருமைப்பாடும், கூடிவாழும் பொதுவான பண்பாடும் பழக்கவழக்கங்களும், தேசியக் கலையும், வாழ்க்கை முறை யும் வெகுஜனத் திரட்சிக்கேற்ப புதிய பரந்த மனப்பாங்கு சட்டத் திட்ட அரசியல் முறைகள் என்பன அகரீதியான தேசிய அம்சங்களாகும்.

**3. தேசிய ஒருங்கிணைப்பிற்கான புறக்கட்டுமானங்கள்:**

போக்குவரத்துப் பாதைகள், வீதி, புகையிரத வீதி, மற்றும் போக்குவரத்தும், போக்குவரத்துச் சாதனங்களும், தொலைத் தொடர்புச் சாதனங்கள். வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள், சுகாதார ஏற்பாடுகள், தங்குமிட வசதிகள், பொது இடவசதிகள் இவற்றிற்கு மூலமான கைத்தொழில் வளர்ச்சிக்கான ஏற் பாடுகள், சந்தை வசதிகள் எனப்பலவாகும்.

மொழி, மதம், பிரதேசம், மற்றும் இனக்கூறுகள் போன்ற அம்சங்கள் தேசிய வாதம் தோன்றமுன் ஏற்கனவே இருந்த அம்சங்களாகும். அனைவரும் திரண்டு கூட்டிணைந்து பெரும் ஜனத்திரளாக வாழ்வதற்கான புதிய பண்பாட்டின் தோற்றமும் புறக்கட்டுமானமும்தான் தேசியத்தில் இடம்பெறும் புதிய அம் சங்களாகும். தேசியக்கட்டுமான வளர்ச்சி என்பது அகவளர்ச்சி, புறவளர்ச்சி தன்னியல்பாகவும் ஏற்படலாம். அல்லது உணர்வு பூர்வமாகவும், ஏற்படுத்தப்படலாம். தன்னியல்பான வளர்ச்சி போதாத இடத்தோ அல்லது இல்லாத இடத்தோ உணர்வு பூர்வமான வளர்ச்சி அத்தியாவசியமானதாகின்றது.

ஒரு மக்கள் கூட்டத்தின் தேசிய வளர்ச்சி இன்னொரு தேசிய வெறியாலோ அல்லது தேசிய மேலாதிக்கத்தாலோ அல்லது தேசிய ஆக்கிரமிப்பாலோ தடைசெய்யப்படுமிடத்து பாதிக்கப் படும் தேசியம் அத்தடையை அகற்றுவதற்கான போராட்டம் அன்னிய எதிர்ப்புத் தேசியப் போராட்டம் எனப்படும். அதே வேளை குறித்த தேசியத்திற்குள் தேசிய வாழ்வுக்குத் தடையாக இருக்கும் காரணிகளுக்கு எதிராகப் போராடுவது முதல் நிலையில் தேசிய சீர் திருத்தம் எனப்படும். அது உச்ச நிலையில் தேசியப் புரட்ச்சி எனப்படும். சில வேளைகளில் தேசிய விடு தலையும் தேசியப் புரட்சியும் ஒன்று சேர வேண்டியும் இருக்கும் உலகில் ஒரு பகுதியினர் அரசியல் பொருளாதார ரீதியிலும் தொழில் நுட்ப ரீதியிலும் தேசிய எல்லைகளைத் தாண்டி 'சர்வதேசியத்தில்' குதித்துள்ளனர். ஆனால் மறு பகுதியினரில் குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க மக்கள் தமக்குரிய குறைந்த பட்சத் தேசிய வாழ்வைக்கூட ஈட்டமுடியாமல் தவிக்கின்றனர்.



நன்றி: களத்தில்









வாழ்க்கையில் கொஞ்சம் வசதி குறைந்தவர்கள் இங்கேதான் படிக்க வருகிறார்கள். விவேகாநந்தா மகளிர் வித்தியாலயத்தில் அட்டகாசங்கள் இல்லை. ஏழ்மையின் நொந்துபோன உள்ளங்களுக்குக் கிளுகிளுப்பு ஏது? பெரிய இடத்துப் பெண்களின் கூச்சலையும் பாய்ச்சலையும் இங்கே பார்க்க முடியாது. காற்று வீசி அலை கிளப்பாத நேரத்தில் மட்டக்களப்பு ஏரி எப்படி அமைதியாக இருக்குமோ - அப்படித்தான் அந்தப் பள்ளிக்கூடமும் இருந்தது.

யோகராணி புத்தகங்களோடு பள்ளிக்கூடத்தை விட்டுத் தெருவில் இறங்கினாள்.

நீண்ட தூரம் குனிந்த தலை நிமிராமலே நடந்தவள்... தூரத்தில் வந்த சிறீலங்காப் படையின் "ட்றக்" வண்டியைப் பார்த்து பக்கத்தில் இருந்த வீட்டுக் "கடப்பின்" உள்ளே "விர்" என்று நுழைந்தாள். "வா புள்ள" என்று அழைத்து ஒரு பெரியவர் அவளை முற்றத்தில் உட்காரவைத்தபோது யோகராணிக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது. "ஆமிக்காறனுகள் வாறானுகள்" என்று சுருக்கமாக அவள் சொன்னாள். "ட்றக்" வண்டி உறுமிக்கொண்டே பெரியவரின் வீட்டைக் கடந்து போயிற்று.

சிங்களப்படை ஊர்களை வளைத்துக் கொண்டு தமிழ்ப்பெண்களைக் கற்பழிக்கும் கொடுமைகளை யோகராணி அறிந்திருந்தாள். இல்லையென்றால் முன்பின் தெரியாத பெரியவர் வீட்டுக்குள் திடுதிப்பென்று நுழைவாளா? "திருகோணமலையிலயும் கனக்கப் பொடிச்சிகள் பழுதாக்கிப் போட்டானுகளாம் அறுவானுகள்..." என்று யோகராணியின் அச்சத்தைப் புரிந்து கொண்ட கிழவர் ஆத்திரத்தோடு உறுமினார். யோகராணி வீட்டுக்குப் போக எழுந்ததும் "கடப்பு" வரை வந்து "கவனமாகப் போ புள்ள... சண்டாளனுகள் குறுக்காலையும் நெடுக்காலயும் திரியுறானுகள்" என்று கூறி அக்கறையோடு அவளை வழியனுப்பி வைத்தார். அவர்.

யோகராணி இப்படித்தான் ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடம் போய் வருகிறாள். தமிழீழ மக்களின் இழிந்த அடிமைநிலை பத்தாம் வகுப்புப் படிக்கும் அவளை உலுப்பிற்று. பள்ளிக்கூடம் போகும் வழியில் எத்தனை வீடுகள் எரிந்து சாம்பலாகிக் கிடக்கின்றன. இதே தெருவில் பல குடும்பங்களைச் சேர்ந்த "பொடியனுகள்" விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து தாய் மண்ணுக்காகப் போராடிப் பிணங்களாய் விழுந்ததை அவள் எண்ணிப் பார்த்தாள். எத்தனை பேர் "பூசா" முகாமில் அடைபட்டு...

யோகராணியின் கண்களில் நீர் தளதள என்று நிரம்பிற்று. வீட்டுக்கு வந்ததும் புத்தகங்களை மேசையில் எறிந்து விட்டுத் தாயைப் பார்த்து அவள் சொன்னாள்: "அம்மா... இனி என்னால் பள்ளிக்குப் போக ஏலாது..."

★★★★

தமிழரின் நாற்பது ஆண்டு கால விடுதலைப் போரில் ஆரையம்பதி என்றைக்குமே பின் நின்றதில்லை. மட்டக்களப்பு நகரில் இரந்து ஐந்து கல் தொலைவில் இருக்கும் இக்கிராமம் "அஹிம்சை" வழியில் தமிழர்கள் செல்வா தலைமையில் போராடிய காலத்திலும் சரி - சிங்கள இனவாதிகளுக்கும் அகிம்சைக்கும் தொடர்பே இல்லை என்பதைப் புரிந்து கொண்டு பிரபாகரன் அந்த வெறியர்களை எதிர்த்து துப்பாக்கிகளோடு போராடும் இன்றும் சரி; களத்திலேயே நிற்கிறது. மட்டக்களப்பில் இதுதான் பெரிய கிராமம். மீன்பாடும் மட்டுநகர் ஏரியோடு ஒட்டினாற்போல் "ஆத்தங்கரையில்" அமைந்த இக்கிராமம் அழகாகவே இருக்கும். மக்கள் தொகைப் பெருக்கத்தால் "செல்வா நகர்" என்ற புதிய கிராமம் ஒன்றை இவ்வூர் மக்கள் ஆரையம்பதிக்குப் பக்கத்திலேயே உருவாக்கியிருக்கிறார்கள்.

செல்வா நகரில்தான் யோகராணியின் வீடு. அவளுடைய குடும்பம் பெரியது. அப்பா செத்துப்போனார். ஏழு பேரைக் கவனிக்கவேண்டிய பொறுப்பு தாய்க்கு இருந்தது. மூத்தவர்கள் எதையோ உழைத்துவர வெளியே போய் வந்துகொண்டிருக்கிறார்கள். பத்தொன்பது வயது யோகராணி பள்ளிக்கூடத்தையும் படிப்பையும் உதறிவிட்டு வீட்டில்தான் கிடக்கிறாள். பொழுது போவதே இல்லை. அடிக்கடி சிங்களப் படை வெறியர்கள் ஆரையம்பதியை வளைத்துக்கொள்வார்கள். அந்தக் கிராமத்தில் துப்பாக்கிகளின் வேட்டோசை கேட்டுக்கொண்டே இருந்தது. "புலிப் பொடியனுகளுல ஒருவனைச் சுட்டு - சவத்த சிங்கள "ஆமி"க்காறனுகள் கட்டி இழுத்துதுற்றுப் போறானுகளாம்..." யாரோ "ஓ" என்று அழும் ஓசை கேட்கும். அச்சமும் நடுக்கமுமாய்...

★★★★

1987 ஜூலை 29-இல் இந்திய சிறீலங்கா உடன்படிக்கை ஏற்பட்டபோது வேகமாக ஓடிய ஒரு வண்டி திடீரென்று நின்று விட்டது போலவே தோன்றிற்று.

ஆரையம்பதி - செல்வா நகர் மக்கள் அசைந்து போனார்கள். யாருக்காக யார் உடன்படிக்கை செய்வது? அரசியல் தெளிவு மிக்க அம்மக்கள் உடன்டிக்கையில் எதுவுமே இல்லை என்பதை உறுதியாகவே தெரிந்துகொண்டார்கள். பிரபாகரனின் சுதுமலைப் பேச்சு அவர்களை உணர்ச்சிவசப்படுத்தியது - அதே வேளை விழிப்பாக இருக்கவும் செய்தது.

ஊரில் காந்தி காலக் கதை தெரிந்து ஓரிரு கிழவர்கள் இந்தியப் படை வந்ததில் நம்பிக்கை பெற்றார்கள் என்பதும் உண்மை. "எப்படியோ இனி மேல் சிங்கள "ஆமி"க்காறனுகளுற "அட்டாதுட்டித்தனங்கள்" நடக்காது தம்பி" என்று பேரனைப் பார்த்துப் பெருமையோடு சொல்லிக்கொண்டார் ஒரு கிழவர்.

தெருக்களில் இந்தியப் படையின் கரும்பச்சை "ட்றக்" வண்டிகள் பறக்கத் தொடங்கின...

★★★★

கண்ணகி பிறந்த சோழநாட்டிலும் - வழக்குரைத்த பாண்டிய நிலத்திலும் - மறைந்த சேர மண்ணிலும் கண்ணகி கோயில்களைக் காண்பது அரிதாக இருந்தாலும் மட்டக்களப்பில் கண்ணகி கோயில்கள் இல்லாத கிராமங்களே இல்லை. தமிழீழத்தின் இந்தத் தென் பகுதியில் தான் இன்று கண்ணகி வழிபாடே உயிரோடு வாழ்கிறது. ஒரு "மனிதப் பெண்ணை" - அவள் கற்பின் மாண்பை மட்டக்களப்பு மக்கள் போற்றி வழிபடுகிறார்கள். ஒவ்வொரு வைகாசித் திங்களிலும் கண்ணகி திருவிழா தடபுடலாக நடந்து "குளுத்திச் சடங்கோடு" நிறைவு பெறுகிறது.



ஆரையம்பதியிலும் "கண்ணகை கோயில்" உண்டு. சிறிய கோயில்தான் - ஆனால் கோயில் எப்போதும் கலகலப்பாகவே இருக்கும். பெண்களுக்குக் குறைவில்லை. கோயிலின் மணல் முற்றத்தில் பிள்ளைகளின் விளையாட்டு ஒரு பக்கம் நடக்கும். அங்கும் இங்குமாக நான்கு பெரியவர்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள்.

யோகராணி கண்ணகி கோயிலுக்குள் நுழைந்தபோதே தன்னை மறந்தவளாய்த்தான் நுழைந்தாள்.

"அம்மாளே! இவளவு நாளும் எங்கட ஊருல ஒரு பெண்ணுக்கும் தீங்கு வராம காப்பாத்துனியே... உன்னை ஒரு நாளும் மறக்கமாட்டம் தாயே... இனி எங்களுக்கு ஒரு கேடும் வராது... இந்தியப்படை வந்திருக்குது.'




யோகராணியின் கண்களில் நீர் கசிந்து "பொலபொல" என்று கொட்டிற்று.

அவள் அழுதாள்.

★★★★

ஆத்தங்கரையில் நண்டு வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போக வந்த மூன்றாம் குறிச்சி வாத்தியார் தெருவில் நின்று உரத்த குரலில் சொன்னார்:- "விடுதலைப் புலிகளுற "நிதர்சனம்" நிலையத்தையும் - ஈழமுரசு, முரசொலி பத்திரிகைக் கட்டிடத்தையும் இந்தியப்படை யாழ்ப்பாணத்துல குண்டு வச்சித் தகர்த்துப் போட்டுதாம்... விடுதலைப் புலிகள் திருப்பி அடிக்கத் தொடங்கிற்றானுகளாம்... எத்தனை நாளைக்குத்தான் பொடியனுகளும் பொறுப்பானுகள்? அவன் பொடியன் திலீபனையும் - அவன் குமரம்பாவையும் - அவன் புலந்தியையும் - மத்தப் பெடியனுகளையும் இவனுகள் தானே சாகவச்சவனுகள்..."

வாத்தியார் பேசிக்கொண்டிருந்தபோதே இந்திய "ட்றக்" வண்டி ஒன்று தெருவால் சீறிக்கொண்டு போயிற்று. தெருவில் நின்றவர்கள் எல்லோருமே அந்த வண்டியின் வழக்கத்துக்கு மாறான வேகத்தைக் கவனிக்கத் தவறவில்லை. பழையபடி அவர்கள் நெஞ்சில் அச்சம் தலைதூக்கிற்று.

வாத்தியார் தொடர்ந்தும் பேசிக்கொண்டுதான் இருந்தார்... "திருகோணமலைப் பகுதியில் சிங்களவனுகள ஆயிரக் கணக்கில் குடியேத்துறானுகளாம். இதுக்குத்தானா உடன் படிக்கை?"

"ட்றக்" வண்டி சுற்றிக்கொண்டு திரும்பவும் அதே இடத்தில் வந்து நின்றது. வண்டியில் இருந்து முரட்டு இந்தியப்படை வெறியன் ஒருவன் "அரைகுறைத்" தமிழில் கத்தினான். "டேய்... றோட்டுல நில்லாதீங்கடா... நீ எல்லாம் புலிகள் தானே..."



எல்லோரும் சிதறிக் கலைந்து போகத் தொடங்கினார்கள்.

வாத்தியாரும்தான்.

ஆனால் அவர் போகும் போதும் - பேசிக்கொண்டே போனார். “நாம அடிமைகளா இருக்குமட்டும் நாலுபேரும் உதைப் பானுகள் தான். நம்மள நாமளே ஆளவேணும். அதுமட்டும் நமக்கு உதைதான்... வெடிதான்... சாவுதான்.”

★★★★

1987 அக்டோபர் 09-ஆம் நாள் தொடங்கிய இந்தியப்படை - விடுதலைப் புலிகள் சண்டை நாளுக்கு நாள் பெரிதாயிற்று. ஓர் எதிரி நாட்டு அரசுப்படையை மோதுவது போலவே விடுதலைப் புலிகளை இந்தியப் படைகள் மோதின. விடுதலைப் புலிகள் தளர்ந்துவிடவில்லை. உலகின் அந்த நாலாவது பெரிய அரசின் படைகளை எதிர்த்து அவர்கள் உறுதியாகவே போராடினார்கள்.
“கல்லடியில வீடு வீடா சோதனை போடுறானுகளாம். நாளைக் குச் செல்வா நகருக்கு வந்தாலும் வருவானுகளாக்கும்...” தெருவில் சேதி அடிபட்டது.

யோகராணி இடிந்து போனாள். அவள் நெஞ்சு படபடத்தது.

வீட்டு முற்றத்தில் உட்கார்ந்து தாயும் பிள்ளைகளும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

எங்கோ தொலைவில் யாரோ ஒருவன் “தண்ணியில்” வாய் கிழியக் கூத்தப் பாட்டுப் பாடுவது கேட்டது. இரவு மாடுகள் வேலியில் உராய்ந்துகொண்டு போயின. வீதியில் எரிந்த மின் விளக்கு வெளிச்சம் வேலிச் செடிகளைத் தாண்டிப் பொட்டுப் பொட்டாக முற்றத்தில் விழுந்துகொண்டிருந்தது. தூரத்தில் அடிக்கடி துப்பாக்கி வேட்டோசைகளும் கேட்டன.

“அமைதி”யின் உடல் துண்டு துண்டாய்க் கிழிந்து கிடந்த அந்த இரவில் ஒரு பிணத்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்து பேசுவது போலவே அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

“ட்றக்” குல போற நேரத்துல நல்லாச் சிரிக்கிறதும் - கையைக் காட்டுறதுமாகத்தானே திரிஞ்சவனுகள் - இவனுகள் இந்த மாதிரி இருப்பானுகள் எண்டு நாம நினைக்கல்லியே... “சத் துருக் கொண்டானு”ல பொம்புளையள எல்லாம் கெடுத்துப் போட்டானுகளாம்...”

பக்கத்து வீட்டுப் பிள்ளை சொன்ன சேதியை யோகராணி சொன்னாள்.

“ஏனம்மா சிங்களவனுகளுற “ஆமி”யும் இந்தியாட “ஆமியும்” ஒண்டுதானா?” என்று தாயைப் பார்த்துக் கேட்டாள் சின்னவள்.
தாய் போராட்ட உணர்வோடும் - அதேவேளை பெருமூச் சோடும் கூறினாள்: “எனக்கெண்டாத் தெரியா மனே... பாவம்... இவனுகள் விடுதலைப்புலிகளை அழிக்கிற எண்டா எவளவு மனவருத்தமா இரிக்குது. நமக்காகத்தானே அவனுகள் செத்த வனுகள். “இயக்கமோ” என்னவோ எண்டு சொல்லித்து ஆரோ நம்மடவனுகள்தான் காட்டிக்கொடுக்கானுகளாம். சனமெல் லாம் சொல்லுது.”

அவர்கள் இரவு முழுதும் பேசிக்கொண்டே இருந்தார்கள். ஒரு வௌவால் மாமரத்தில் மோதிக்கொண்டு பறந்து போயிற்று.

★★★★

நவம்பர் 23 காலை அந்த வீட்டில் எல்லோரும் சோர்வுடனேயே இருந்தார்கள். இரவு தூங்காமல் யோகராணியின் முகம் காய்ந்துபோய் இருந்தது.

வழக்கமான காலை வேலைகளை முடித்துவிட்டு அவள் அம்மாவுக்குக் “கோப்பி” போட்டுக் கொடுத்தாள். அம்மாவும் மற்றவர்களும் வேலைக்குப் புறப்பட்டார்கள்.

யோகராணி கொஞ்ச நேரம் முற்றத்துக்கு வந்து வானத்தை அண்ணாந்து பார்த்தபடியே அசைவற்று நின்றாள். பெரிய வர்கள் யாருமே வீட்டில் இல்லை என்பதை நினைக்க அவளுக்கு நடுக்கமாக இருந்தது.

இருவர்தான் அவளோடு வீட்டில் இருந்தார்கள். ஒருத்தி சின்னத் தங்கச்சி. இன்னொன்று அவளுடைய நாலு வயதுக் குஞ்சு மருமகள். இவர்கள் ஒரு துணையா? பாதுகாப்பா?

கிணற்றடிக்குப் போய்க் குளித்துவிட்டு வந்த தலை வாரிக் கொண்டிருந்தவள் - தெருவில் யாரோ ஒரு சிறுவன் “இந்தியப் படை வருகுதாம்” என்று கத்திக்கொண்டு ஓடியபோது அசைந்து போனாள்.

வெளியே தெருவில் ஆட்கள் வேகம் வேகமாக நடப்பதும் ஓடுவதும் தெரிந்தது.

மோட்டார் சைக்கிள் வண்டியில் போன ஒருவன், “முதலாம் குறிச்சிச் சந்தியில் “லொறி” களை எல்லாம் கொணர்ந்து உட்டுத்து இந்தியாக்காற “ஆமி” நிக்குதாம்... ஊருக்குள்ள வாறானுகள் போலக் கிடக்கு...” என்று உரத்துச் சொல்லிக் கொண்டே வண்டியை விரைவாக ஓட்டினான்.

யோகராணிக்கு உடல் கொதித்தது. அவள் படபடத்தாள். வியர்வை வியர்வையாய்க் கொட்டிற்று.

ஊரில் ஒரு பெரிய அமைதி நிலவுவதை அவள் கவனித்தாள். மாலையில் பறவைகளெல்லாம் ஓடி அடங்குமே - அப்படித்தான் செல்வா நகர் ஓடி அடங்கி ஓய்ந்து கிடந்தது.

யோகராணி என்ன செய்வது என்று தெரியாமல் வீட்டுக் குள்ளேயே இங்கும் அங்குமாக நடந்துகொண்டிருந்தாள்.

அப்போது நேரம் 10 மணி.

நாய்கள் தொடர்ந்து குலைக்கும் ஓசை தூரத்தில் கேட்டது. அந்த ஓசை ஒவ்வொரு நொடிப்பொழுதும் பக்கத்தில் நெருங்கி வரு வதை அவள் கேட்டாள். இப்போது அவளுடைய தெருவிலேயே நாய்கள் குலைக்கத்தொடங்கிவிட்டன.

யோகராணி வேலிப்பக்கம் பார்வையைச் செலுத்தினாள்... இந்தியப்படை வெறியர்கள் இருவர் வேலிப் “படலை”யைத் திறந்து அவள் வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள்.

பக்கத்தில் வந்ததும் ஒரு முரடன் அவளை விழுங்கிவிடுவது போலவே பார்த்தான். யோகராணி ஒடுங்கிப்போனாள்.

வெறித்தனமான அவன் கண்களும் - காவி படிந்த அந்த அசிங்கமான பற்களின் முரட்டுச் சிரிப்பும் - அவள் நெஞ்சைக் குத்தி வதைத்தன.

“வீட்டில ஆம்பிளைகள் யாரும் இல்ல...” கள்ளம் கபடமில்லாத அவள் அந்த முரட்டு இந்தியப்படை வெளியர்களைப் பார்த்துச் சொன்னாள். விடுதலைப் புலிகளைத்தானே தேடுகிறார்கள்... இப்படிச் சொன்னால் அவர்கள் போய்விடக்கூடும் என்பது அவள் நினைப்பு.

ஆனால்...

வெறியர்கள் அவளை விலங்குத்தனமாக நெருங்கினார்கள்.

யோகராணியின் கையைப் பற்றி ஒருவன் இழுத்தபோது “அக்கா!” என்று கத்திய சின்னத்தங்கச்சியை அடுத்தவன் “கொற கொற” என்று இழுத்துக்கொண்டு போனான்.

யோகராணி நடுங்கினாள்.

அவளைக் கீழே தள்ளி அவளுடைய மார்புச் சட்டையைக் கிழித்தான் அந்த நெட்டை வெறியன். வனாம் தலை கீழாகிக் கொண்டிருந்தது. அவளுடைய இரண்டு கால்களையும் முரட் டுக் கைகளால் வெறித்தனமாகத் தள்ளி....

“கண்ணகி அம்மாளே!” என்று ஓங்கிக்கத்தினாள் யோகராணி. அவள் நினைவாற்றல் கொஞ்சம் சொஞ்சமாய் மங்கிப் போயிற்று.

ஒருவன் அவளை விட்டு நிமிர்கிறான். அடுத்தவன் தொடர்ந்து...

★★★★

கண்களைத் திறந்தபோது யோகராணி ஒரு சிறிய மருத்துவ நிலையத்தில் இருந்தாள். மருந்துவர்கள் அவள் உடலைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

“கொல்லாம இந்த அளவோட உட்டுத்துப் போனானுகளே - “பொடிச்சி”ர நல்லகாலந்தான்...” என்று மருத்துவ நிலையத் துக்கு வெளியே ஒரு கிழவி பெருமூச்சோடு சொல்லிக் கொண்டாள்.

கட்டிலில் கிடந்த யோகராணியின் கண்களில் நீர் பொங்கிற்று.

நினைவு வரும்போதெல்லாம் உயிருள்ளவரை இனி அவள் செத்துச் செத்துத்தானே...

கட்டிலுக்குப் பக்கத்தில் நின்றவர்களைப் பார்த்து அச்சத்தோடு “சண்டாளனுகள் ஊரை விட்டுப் பொயிற்றானுகளா?” என்று கேட்டாள் அவள்.

ஒரு பெரியவர் சொன்னார்:- “நான் வரக்குள்ள கண்ணகி கோயி லடியில் “ட்றக்” வண்டி நிக்குது. அம்மாளைக் கும்பிடுறானுகள் போல கிடக்கு.”






தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்